லாச்சப்பலில்...
உங்களுக்குத் தேவையான
அனைத்து மீன், இறைச்சி,
கோழி வகைகளுக்கும்
கோபால் அன் கோ
சுப்பர் மார்சே
64, Rue Louis Blanc, 75010 Paris.
Tel: 01 40 05 04 50
Fax: 01 40 05 09 90

France: 10FFrs. GB: 90P Germany: 2.50DM Swisse: 2.50SFrs.

# ஈழமுரசு

Eelamurasu Weekly

முரசு: 3 13 - 19 பெப்ரவரி 1997 முழக்கம்: 109

லாக்குர்நெவில்...
உங்களுக்குத் தேவையான
அனைத்து மளிகைப்
பொருட்களுக்கும்
KOPAL & Co
CASH & CARRY
39 Rue Maurice La Chatre,
93120 La Courneuve.
Tel: 01 48 37 00 43

# சர்வதேசக்கடலில் கப்பல் மூழ்கடிப்பு சிக்கலில் மாட்டிய சிறீலங்கா அரசு

**முல்லைத்தீவுக்கு அண்மையில் சர்வதேசக் கடற்பரப்பில் சென்றுகொண்டிருந்த கப்பல் ஒன்றை சிறீலங்கா விமானப்படை தாக்கி மூழ்கடித்துள்ளது. 'கரீபியன் குயின்' என்ற இன்னொரு கப்பலையும் தாக்கி எரியூட்டி பலவந்தமாக திருமலைத் துறைமுகத்திற்குக் கொண்டு சென்றுள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த இவ் இரு சம்பவங்களும் சிறீலங்காவுக்கு பெரும் நெருக்கடியைக் கொடுத்துள்ளன.**

கடந்த 09.02.97 ஞாயிற்றுக் கிழமை அன்று மேற்படி சரக்குக் கப்பல்கள் இரண்டும் முல்லைத்தீவுக்கு அண்மையில் சர்வதேசக் கடற்பரப்பில் கொழும்பை நோக்கிச் சென்றுகொண்டிருந்த போது அங்கு ரோந்துப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சிறீலங்கா விமானப்படை விமானம் ஒன்று இது பற்றிய செய்தி ஒன்றை திருமலை கடற்படை, விமானப்படைத் தளத்திற்கு தெரிவித்துள்ளது. அங்கிருந்து புறப்பட்டுவந்த MI-24 ரக உலங்கு வானூர்திகள், முதலாவது கப்பல் மீது ராக்கட், மற்றும் கனரக ஆயுதங்கள் மூலம் தாக்குதல் நடத்தின. இதனால் அக் கப்பல் பலத்த சேதமடைந்து கடலில் மூழ்கிவிட்டது.

இதனையடுத்து அதற்கு சில கிலோமீற்றர் தூரத்தில் சென்று கொண்டிருந்த இன்னொரு கப்பல் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. அக் கப்பலின் மேற்பகுதி தீப்பற்றி எரிந்தது. எனினும் அக் கப்பலில் கடமையாற்றிய மாலுமிகள் அத்தீயை அணைத்துவிட்டனர். பின்னர் அக் கப்பலை MI-24 உலங்குவானூர்திகள், குறிவைத்து நிற்க, டோரா தாக்குதல் கலங்கள் சுற்றிவளைத்து வலுக்கட்டாயமாக திருமலைத் துறைமுகத்துக்கு கொண்டு சென்றன.

சைப்பிரசில் பதிவுசெய்யப்பட்ட 'கரீபியன் குயின்' என்ற 1800 தொன் எடை கொண்ட இந்தக் கப்பல் ஐரோப்பாவிலிருந்து கந்தகத்தை ஏற்றிக்கொண்டு

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## சிறீலங்கா விமானப் படைக்கு 'லயன் எயார்' நிறுவனமும் உதவி

சிறீலங்கா விமானப்படையுடன் தனியார் விமான சேவையான லயன் எயார் இணைந்து சேவையாற்றவுள்ளதாக தெரிய வருகிறது. சிறீலங்காவில் தனியார் விமான சேவைகள் யாவும் 1995ம் ஆண்டு செப்டம்பர் மாதம் தொடங்கி பாதுகாப்புக் காரணங்களுக்காக இடை நிறுத்தப்பட்டதன் பின்னர் "லயன் எயார்" சேவையிலுள்ள உலங்கு வானூர்திகளும் விமானங்களுமாக கிட்டத்தட்ட 20 வான் கலங்கள் உள்ளன. இவற்றில் AN-24 ரக விமானத்தை விமானப்படை ஒப்பந்த அடிப்படையில் தற்போது பாவித்து வருகின்றது.

இனிமேல் ரத்மலானைக்கும் பலாலிக்கும் இடையிலுள்ள குடாநாட்டிலுள்ள இராணுவ முகாம்களுக்கும் துருப்புக்களை ஏற்றி இறக்கும் பணியில் லயன் எயார் சேவை உலங்கு வானூர்திகளும், விமானங்களும் பயன்படுத்தப்படவுள்ளன.

இதேவேளை, மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்ததிலிருந்து இதுவரையில் சிறீலங்கா விமானப்படையினர் நன்கு பயிற்சிபெற்ற 14 விமான ஓட்டிகளை விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் காரணமாக இழந்துள்ளமை பெரிய இழப்பு என்று தெரிவித்த அதிகாரிகள் இதனை ஈடு செய்யும் முகமாக புதிய விமான ஓட்டிகளை பயிற்றுவிக்கப் போவதாகவும் அறிவித்துள்ளனர்.

## வவுனியா படைத்தளங்கள் மீது புலிகளின் எறிகணை வீச்சு

கடந்த வெள்ளிக் கிழமை இரவும் சனிக்கிழமை இரவும் வவுனியாவில் நிலைகொண்டுள்ள சிறீலங்கா படையினர் மீது விடுதலைப்புலிகள் நீண்ட தூர (ஆட்டிலெறி) எறிகணை வீச்சுக்களை மேற்கொண்டுள்ளனர். இதன் காரணமாக விமானப் படைத்தளமும், பொலிஸ் நிலையமும் கடும் சேதமடைந்துள்ளதுடன் படையினரும் கொல்லப்பட்டனர்.

அடுத்தடுத்து படைத்தளங்களுக்குள் வீழ்ந்து வெடித்த இந்த எறிகணையால் பீதி கொண்டு படையினர் சிதறி ஓடினர். விமானப்படைத்தளத்திலிருந்து குண்டு வீச்சு விமானங்களும், உலங்கு வானூர்திகள் அவசர

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## மடு பாலம்பிட்டி அகதி முகாங்கள் அகதிகளால் நிரம்பி வழிகின்றன

அண்மையில் சிறீலங்காப் படையினர் வவுனியாவிலிருந்து மன்னார் நோக்கி ஆரம்பித்திருக்கும் 'எடிபல' இராணுவ நடவடிக்கையால் மடு, பாலம்பிட்டி அகதி முகாங்கள் நிரம்பி வழிவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. மேற்படி இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து மேலும் 7000இற்கு மேற்பட்ட மக்கள் இம் முகாங்களில் அகதிகளாக அடைக்கலம் புகுந்திருப்பதாக தெரியவருகிறது.

தம்பனைக்குளம், கன்னாட்டி, பெரியகட்டு, பூமடத்தான்,

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## மன்னார் தரைப்பாதையை திறப்பதால் மட்டும் புலிகளை ஒழித்துக்கட்ட முடியாது

'யுத்தம் உரிய முறையில் முன்னெடுத்துச் செல்லப்படவில்லை' என களுத்துறை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. திலக் கருணாரத்தின பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். கடந்த வாரம் நடைபெற்ற பாராளுமன்றக் கூட்டத் தொடரில் உரையாற்றிய அவர், 'கடந்த இரண்டரை வருட காலம் அரசாங்கம் யுத்தத்தை சரியாக நடத்தாததாலேயே பாரியளவு இழப்புக்கள் ஏற்பட்டன' எனக் கூறினார். இராணுவத்திற்கு பெருந்தொகையான வாகன, தளபாட இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. நாலாயிரத்துக்

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## ஜேர்மனிக்குள் புக முயன்ற 52 இலங்கையர்கள் போலந்தில் கைது

போலந்திலிருந்து சட்ட விரோதமாக ஜேர்மனிக்குள் புக முயன்ற 52 இலங்கையர்களை தாம் கைதுசெய்துள்ளதாக போலந்து எல்லைப்புற காவற்துறையினர் தெரிவித்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் தமிழர்களாக இருக்கலாம் எனவும் அறியப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமையே இவர்கள் அனைவரும் கைதுசெய்யப்பட்டு போலந்து பொலீஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களுடன் கூட இருந்த மூன்று பங்களாதேச நாட்டவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜேர்மனிக்குச் செல்லும் நோக்கில் போலந்து எல்லைப்புற கிராமமான துபிலிசில் உள்ள வீடொன்றில் இவர்கள் தங்கியிருந்தபோதே பொலீசாரின் தேடுதல் நடவடிக்கை மூலம் இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களுள் பிரயாணமுகவர் ஒருவரும் அடங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் அனைவரையும் மீண்டும் சிறீலங்காவிற்கு அனுப்பும் நடவடிக்கைகளை போலந்து உள்நாட்டு அமைச்சர் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உங்கள் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்கிறது
KUMARS SHOP
S. A. R. L.
80, Bld. Barbes, 75018 Paris. M°: Marcadet Poissonniers
Tél: 01 42 59 35 10 / Fax: 01 42 59 35 00



Singapore Exchange Co.
38 Rue Saint Quentin,
75010 Paris.
Tel: 01 48 74 48 21
Fax: 01 49 70 06 32

# ஈழமுரசு

Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை
இணை ஆசிரியர்:
அமரர் க. விஜேந்திரன்
ஆசிரியர்:
பி. சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
**EELAMURASU**
**22, Rue Perdonnet,**
**75010 Paris, France**

விளம்பர விநியோக தொடர்புகட்கு
பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
அருந்தவராஜா:
Tel: 02 151 39 73 83

டென்மார்க்:
S.E. MAHENDRAN
SPURVE VEJ-20,
7200 GRINSTED.
Tel + Fax: 75310546

கனடா: மக்கள் கடை
Tel: 01-271 7374

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145

இத்தாலி:
S. தில்லைவாசன்
VIA DANTE - 296, PALARMO
Tel: 03473358290

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
தாமோதரன்
Tel: 0223 680462



லாச்சப்பலில்

சகலவிதமான அச்சுத் தேவைகளுக்கும்

**தமிழ் அச்சகம்**

Tel: 01 42 09 60 64


(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## சர்வதேச...

வந்து இந்தியாவின் கல்கத்தா துறைமுகத்தில் இறக்கிவிட்டு சர்வதேசக் கடற்பரப்பின் ஊடாக கொழும்புத் துறை முகத்திற்கு சென்றுகொண்டிருந்த வேளையிலேயே சிறீலங்காப் படைகளால் தாக்கப்பட்டது.

இந்தக் கப்பல் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் ஏற்றிவந்ததாக சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு காட்ட முற்பட்டது. ஆயினும் இந்தக் கப்பலிலிருந்த 28 கியூப நாட்டு மாலுமிகள் தெரிவித்த தகவலின் அடிப்படையிலும் கப்பலின் பயண அட்டவணையின் அடிப்படையிலும் சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் கூற்று பொய் என நிரூபிக்கப்பட்டு விட்டதாக சர்வதேச செய்தித் தாபனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடலில் மூழ்கடிக்கப்பட்டதாகக் கூறப்படும் மற்றைய கப்பல் பற்றிய மேலதிக விபரங்கள் எதுவும் தெரியவில்லை. ஆயினும், சர்வதேசக் கடற்பரப்பில் சென்றுகொண்டிருந்த அந்தக் கப்பலுடன் சிறீலங்கா கண்காணிப்பு விமானம் தொலைத் தொடர்புக் கருவி மூலம் தொடர்பு கொண்டு கேட்ட போது அதிலிருந்து எவ்வித பதிலும் கிடைக்காததாலேயே MI-24, மற்றும் புக்காரா குண்டு வீச்சு விமானங்கள் ஆகியவை அதன் மீது தாக்குதல் நடத்தி அதை மூழ்கடித்தன என்று சிறீலங்கா பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்ததாக செய்தி வெளியிட்டிருக்கும் கொழும்புச் செய்தியாளர்கள் அந்தக் கப்பலின் தொலைத் தொடர்புக் கருவி பழுதடைந்திருந்ததாலேயே அது சிறீலங்கா விமானப் படையினருக்கு பதில் தராமல் இருந்திருக்கலாம் என்று நம்பப்படுவதாக கூறியுள்ளனர்.

சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சு இக் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட செய்தியை இருட்டடிப்புச் செய்து விடுதலைப் புலிகளின் சிறிய படகொன்றை தாக்கி மூழ்கடித்ததாக செய்தி வெளியிட்டுள்ளது.

சிறீலங்காப் படையினர் தலைமுதலாகச் செய்த இந்தத் தாக்குதலால் சர்வதேசக் கப்பல் நிறுவனங்கள் கொழும்புத் துறைமுகத்தைப் பகிஸ்கரிக்கப் போவதாக அறிவித்துள்ளதாகவும், வேறுசில நிறுவனங்கள் மேலதிக யுத்தக் காப்புறுதி செய்தால் மட்டுமே சிறீலங்காவுக்கு பொருட்களை ஏற்றிச் செல்ல முடியுமெனத் தெரிவித்துள்ளதாகவும் சொல்லப்படுகின்றது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## மடு, பாலம்பிட்டி...

பாண்டிவிரிச்சக்கட்டு, கட்டையடம்பன் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து சென்ற மக்களே மேற்படி முகாங்களில் அகதிகளாகியுள்ளனர்.

இதேவேளை இம் முகாம்களில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாகவும், இரண்டு வாரங்களுக்கு போதுமான உணவே கையிருப்பில் இருப்பதாகவும் தெரியவருகிறது. உரிய காலத்தில் இங்கு உணவுப் பொருட்கள் வந்து சேராவிட்டால் அகதிகள் பட்டினிச் சாவை எதிர்கொள்ள வேண்டி வரும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கடந்த 03.02.97 திங்கட்கிழமையிலிருந்து மன்னார் கற்பிட்டிப்படகுச் சேவை நடைபெறவில்லை எனவும் இதனால் இருபகுதியிலும் பெருந்தொகையான மக்கள் படகுச் சேவையை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகவும் தெரியவருகிறது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## வவுனியா...

அவசரமாக அநுராதபுரத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன. விமானங்கள் புறப்பட்ட சிறிது நேரத்தில் விமான ஓடுபாதையில் எறிகணை ஒன்று வீழ்ந்து வெடித்துள்ளது. இதனால் அவ் ஓடுபாதை பலத்த சேதமடைந்துள்ளது.

பொலீஸ் நிலையத்தினுள் வீழ்ந்த எறிகணைகளால் பல பொலீசார் கொல்லப்பட்டனர். ஆயுதக் கிடங்கும், பொலீஸ் வாகனங்களும் தீப்பிடித்து எரிந்தன. புலிகளின் தொலைதூர எறிகணைத் தளங்களை கண்டுபிடிக்க முடியாமல் படையினர் கண்மூடித்தனமாக பொதுமக்கள் குடியிருப்புகளை நோக்கி எறிகணை வீச்சுக்களை மேற்கொண்டனர். இத் தாக்குதல் குறித்து தெரிவித்த படையினர் பல வருடங்களுக்குப் பின்னர் விடுதலைப்புலிகள் படைத்தளங்களின் மையப்பகுதிகளை நோக்கித் தாக்குதலை மேற்கொண்டதால் படையினரின் நிம்மதி குறைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## மன்னார்...

கும் மேற்பட்ட படைவீரர்களை நாம் இழந்துள்ளோம் எனக் குறிப்பிட்டார். தற்போது, மன்னாருக்கான தரைவழிப் பாதையை திறப்பதால் மட்டும் புலிகளை ஒழித்துக்கட்ட முடியாது. இந்த அரசு பதவிக்கு வந்த பின்னர் தான் கொழும்பின் பாதுகாப்பும் மோசமான நிலையை அடைந்தது எனவும் தனது உரையில் அவர் கூறினார்.





**நடைபெற்றுக்கொண்டிருக்கும் கொம்பியூட்டர் வகுப்புக்களுடன் புதிய கொம்பியூட்டர் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன**

| | |
|---|---|
| Programmation Windows | : VISUAL BASIC 3.0 TURBO C++ 3.0, JAVA |
| Base de Données | : DBASE , ACCESS |
| Publication Assistée Par Ordinateur | : PAGEMAKER CORELDRAW |
| Bureautique | : WINDOWS 95,WORD 7 |

PUBLISHER, EXCEL7, IMAGE, PHOTOSHP

ஆரம்பிப்பவர்களுக்குDOS , PCTOOLSவகுப்புகளும் , Computer Hardware Software repair and Computer Assemble வகுப்புகளும்,
பிரான்ஸ் பல்கலைக்கழக(DUT) பட்டத்திட்டத்துக்கு அமைய கற்பிக்கப்படும்

ஆங்கில வகுப்புக்கள் 15.02.97 - 16.02.97 திகதிகளில் ஆரம்பம்

விரிவுரையாளர்

JAFFNA IDPயின் மேலாள கொம்பியூட்டர் விரிவுரையாளர்

# MR . T . SOORIYAKUMAR

(இவர் Parisல் கடந்த 6 வருடங்களாகவும் Jaffna IDPயில் 4 வருடகாலமாகவும் விரிவுரையாளராக கடமையாற்றியவர் குறிப்பாக யாழ்பல்கலைக்கழக மாணவர்களுக்கு)
தமிழ் வழித்தகைமை மாணவர்கள் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம்

வகுப்புகள் 15/02/97-16/02/97 திகதிகளில் ஆரம்பமாகும்

கொம்பியூட்டர் வகுப்புக்கள் சனி, ஞாயிறு கிழமைநாட்களிலும் நடைபெறும்

மேலதிக தொடர்புகளுக்கு
**Tel : 01 . 42 . 09 . 37 . 54**

வகுப்புகள் நடைபெறும் இடம்
**A.I.D.P**
**41 , Rue De La CHAPELLE,**
**75018 PARIS.**

M°: Porte de la CHAPELLE
41 = AIDP
Rue de La CHAPELLE
M°: Marx Dormoy

**Metro : Marx Dormoy or Porte De La CHAPELLE**
**Bus N° : 60 , 65 , 350**


# மரண அறிவித்தல்

தோற்றம்
26-04-1955



மறைவு
08-02-1997

## பூபாலசிங்கம் சச்சிதானந்தம்

### (சிவம்) அச்சுவேலி

அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் Zurich நகரில் கடந்த பல ஆண்டுகளாக வாழ்ந்து வந்தவருமான திரு பூபாலசிங்கம் சச்சிதானந்தம் அவர்கள் 08.02.1997 சனிக்கிழமை இரவு 20.30 மணியளவில் இறைவனடி சேர்ந்தார் என்ற செய்தியை ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**சகோதரர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்**

**குறிப்பு:** மரணச்சடங்குகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
01 42 22 951 / 01 383 98 65 / 01 492 59 26


லாச் சப்பலில் குறைந்த செலவில் நிறைந்த பிரயாண சேவை

**Errances Travels**

Fax: 01 42 09 53 39 - Li: 075 95 01 37
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc
தொடர்புகளுக்கு: நாதன் (தமிழில்)

Tél 01 42 09 70 00

*à partir de*

| | | | |
|---|---|---|---|
| Bombay | 3,900 Frs. | Londres | 790 Frs. |
| Delhi | 3,900 Frs. | New york | 2,400 Frs. |
| Bangkok | 3,700 Frs. | Montreal | 2,260 Frs. |
| Colombo | 3,950 Frs. | Oslo | 2,010 Frs. |
| Singapour | 3,700 Frs. | Toronto | 2,260 Frs. |
| Kualalumpur | 3,400 Frs. | Nepal | 4,820 Frs. |
| Madras | 3,800 Frs. | | |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

ஈழமுரசு
Eelamurasu Weekly

# போராடுவது ஒன்றே விடிவுக்கு வழி

சிறீலங்காவில் இப்போது உள்ளூராட்சித் தேர்தல் பிரச்சாரங்கள் சூடுபிடிக்க ஆரம்பித்துவிட்டன. அங்குள்ள இரண்டு பேரினவாதக் கட்சிகளும் போட்டி போட்டுக் கொண்டு வாக்கு வேட்டைக்கான முயற்சிகளில் இறங்கிவிட்டன.

ஆளும் கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணியினரும், ஜனாதிபதி சந்திரிகாவும் இழந்த தங்கள் செல்வாக்கினை தூக்கி நிறுத்துவதற்கான ஒரு அளவு கோலாக இந்தத் தேர்தலைக் கருதுகின்றனர். எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினரோ இத் தேர்தலை ஆளும் கட்சியினரின் சர்வதேச நன்மதிப்பைச் சீர்குலைத்து அதன் மூலம் அவர்களுக்கு பெரும் பொருளாதார நெருக்கடிகளை உண்டுபண்ணுவதற்கான வாய்ப்பை உருவாக்க கிடைத்த சந்தர்ப்பமாகக் கருதுகின்றனர்.

இரு தரப்பினருக்குமான இந்தப் பலப்பரீட்சையில் சந்திரிகா தனது கணவர் விஜயகுமாரணதுங்காவை கொலைசெய்தில ஐ.தே.கட்சியின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவிற்கும் பங்குண்டு எனக் கூறியிருக்கிறார். பிரேமதாசா ஜனாதிபதியாகப் பதவிக்கு வருவதற்கு முன்பே விஜயகுமாரணதுங்கா கொலை செய்யப்பட்ட போதும் அவரது கொலை தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) மீது குற்றஞ்சாட்டப்பட்டு பல சிங்கள இளைஞர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் இது பற்றி எதுவுமே சொல்லாமல் லண்டனுக்கு சென்று அஞ்ஞாள வாசம் இருந்துவிட்டு இப்போது ஜனாதிபதியாகப் பதவி ஏற்றபின் அதுவும் உள்ளூராட்சித் தேர்தலுக்கான அறிவிப்பையும் வெளியிட்டுவிட்டு சொல்லியிருப்பது வெறும் பிரச்சாரத் தந்திரம் என்றும், மக்களின் அனுதாப வாக்குகளைப் பெறுவதற்காக அவர் கூறும் ஆதாரமற்ற பொய்க் குற்றச்சாட்டென்றும் பிரேமதாசா குடும்பத்தினரும், ஐ.தே.கட்சியினரும் கூறியுள்ளனர்.

இவ்வாறு இரு பகுதியினரும் ஆளுக்காள் பலப்பரீட்சையில் ஈடுபடும் அதே நேரத்தில் தங்கள் தேர்தல் வெற்றிக்கு தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவதற்கும் போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றனர். இதற்கான முயற்சிகளும் இரகசியமாகவும், பகிரங்கமாகவும் செய்யப்பட்டு வருகின்றன.

எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் அந்தக் கட்சிக்கு வக்காலத்து வாங்கி புரட்சியாளர்களை கொச்சைப் படுத்துவதற்கும், ஒடுக்குவதற்கும் துணை போவதை தான் தொடங்கிய காலத்திலிருந்தே நோக்கமாகக் கொண்டிருந்த ஏரிக்கரைப் பத்திரிகை ஒன்று தமிழ் மக்களின் துன்பங்களுக்காக நீலிக்கண்ணீர் வடித்து சந்திரிகா அரசுக்கு வாக்களித்தால் அவர்களது துன்பங்கள் தீர்ந்துவிடும் என்று எழுதியிருக்கிறது.

முன்னர் ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்கள் இம்சைப் படுத்தப் பட்டதாகவும், கொழும்பிலுள்ள தங்கும் விடுதிகளில் தமிழர்கள் வெள்ளை வான்களில் வந்தவர்களால் ஏற்றிச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டதாகவும் சந்திரிகாவின் ஆட்சியில் அப்படி எதுவுதே நடக்கவில்லை என்கிற மாதிரி முழுப்பூசனிக்காயை சோற்றிலே மறைத்த கதையாக எழுதியுள்ளது.

சந்திரிகா அரசானாலும் ஐக்கிய தேசியக் கட்சி அரசானாலும் சரி இரண்டு அரசுகளும் சிங்களப் பௌத்த பேரினவாத நலன்களையே நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வந்திருக்கின்றன. ஒன்றுக்கொன்று சளைத்ததில்லை என்ற அடிப்படையிலேயே அவை இரண்டும் தமிழ் மக்களை அழிப்பதிலும், தமிழீழப் பிரேதசங்களை ஆக்கிரமிப்பதிலேயும் முன்னின்று செயற்பட்டு வருகின்றன.

மூன்றாவது ஈழ யுத்தம் ஆரம்பித்த காலத்திலிருந்து தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதற்கும், தமிழ் மக்கள் வேறு, விடுதலைப் புலிகள் வேறு என்று காட்டுவதற்கும் சந்திரிகா அரசு இடைவிடாது முயன்று வந்திருக்கிறது. இன்னும் முயன்றுகொண்டிருக்கிறது.

உண்மையில் தமிழீழத் தேசியத்தை, தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமையை நிலைநிறுத்தப் போராடும் விடுதலைப் புலிகளை அழிப்பதன் மூலம் தமிழ் மக்களை அழித்து தமிழீழப் பிரதேசத்தை ஆக்கிரமித்து சிங்கள பௌத்த மேலாண்மையை நிலைநிறுத்துவதே தற்போதைய அரசின் நோக்கமாகும்.

இந்த அரசு வாக்குச் சீட்டால் தூக்கியெறியப்பட்டு, ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் கூட அது தனது பழைய குணாம்சங்களையெல்லாம் தூக்கி குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு தமிழ் மக்களின் உரிமைகளை தாம்பாளத் தட்டில் வைத்துத் தந்துவிடப் போவதில்லை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை எந்தப் பேரினவாதக் கட்சிக்கும் அவர்கள் அளிக்கக் கூடிய வாக்குகள், அவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையாது. தன்னுடைய உரிமைகளுக்காகப் போராடுவது ஒன்றுதான்; விடுதலைப் புலிகள் வேறு, தமிழ் மக்கள் வேறு என்று காட்ட முனையும் பேரினவாதிகளை தோற்கடிப்பது ஒன்றுதான் தமிழினத்தின் விடிவுக்கு வழியாகும்.

# வவுனியா படை நகர்வின் நோக்கம் என்ன?

### தடுமாறுகிறார் சந்திரிகா

### தப்புத்தாளம் போடுகிறார் ரத்வத்தை

பிள்ளையார் பிடிக்க குரங்கான கதை மாதிரி, வவுனியாவிலிருந்து கிளிநொச்சிக்கான தரைப் பாதையை திறக்கப் போவதை நோக்கமாகக் கொண்டதாகவே வடக்கில் தமது அடுத்த படைநகர்வு இருக்கும் என்று சொல்லிக் கொண்ட சிறீலங்காவின் பாதுகாப்பு உயர் பீடம், கடந்த வாரம் திடீரென்று மன்னார் பாதையில், வவுனியாவிலிருந்து தமது அர்சமில்லாத (எடிபல) படை நகர்வை நகர்த்தியது பலரையும் ஆச்சரியப்பட வைத்தது.

எப்படி மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட முடியும்? வவுனியாவிலிருந்து மன்னாருக்கான பாதையை திறந்து, அதன் பின் கிளிநொச்சிக்கான பாதையை திறப்பது எந்தவகையில் சாத்தியமாகும்? ஏற்கனவே பரந்தன் ஆனையிறவில் செமத்தியான அடி வாங்கிய பிறகு, கிழக்கில் தினமும் பலமாக வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கிற நேரத்தில், ஏற்கனவே பிடித்த இடங்களைத் தக்கவைத்துக்கொள்ள போதிய புதிய பிரதேசங்களை பிடிக்க சிறீலங்கா அரச தரப்பினர் முயல்கின்றனர் எவ்றெல்லாம் பலரும் பல கோணங்களில் சிந்திக்கத் தலைப்பட்டிருந்தனர். சிறீலங்காவின் பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகளுக்கும், பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தைக்கும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் கூடத்தெரிந்த ஒரு விடயம், கிளிநொச்சிக்கான ஒரு தரைப் பாதயைத் திறப்பது, அல்லது வவுனியாவிலிருந்து மன்னாருக்கான தரைப்பாதையைத் திறந்து அதன்பின் கிளிநொச்சியை நோக்கி முன்னேறுவது என்பது எந்த விதத்திலும் சாத்தியமில்லாத ஒன்று என்பது. வவுனியாவிலிருந்து மன்னாருக்கு ஒரு தரைப் பாதையைத் திறந்தால் கூட அதை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வது அவ்வளவு சாத்தியமில்லை என்பதும், இந்திய அமைதி காக்கும் படை அதிகளவு இழப்புக்களை சந்தித்த பிரதேசங்களில் இந்த மன்னார் காட்டுப் பிரதேசமும் ஒன்று என்பதும் இவர்களுக்கு தெரிந்த விடயம்தான் என்கிறார் கொழும்பிலுள்ள ஒரு பிரபல இராணுவ ஆய்வாளர்.

அப்படித் தெரிந்துகொண்டு எதற்காக இந்தப் படைநகர்வைச் செய்ய வேண்டும்? என்ற கேள்விக்கு, சிறீலங்கா அரசுக்கு உள் நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் ஏற்பட்டுள்ள அரசியல் பொருளாதார நெருக்கடிகளே அதற்குக் காரணம் என்கிறார் ஒரு அரசியல் விமர்சகர்.

சந்திரிகாவின் தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் கடந்த வருடம் இறுதியில் பாரிசில் நடைபெற்ற உதவிவழங்கும் நாடுகள் கூட்டத்தில், விடுதலைப் புலிகளை தனிமைப்படுத்தி விட்டதாகவும் இராணுவ ரீதியாக அவர்களை பலமிழக்கச் செய்து விட்டதாகவும், அவர்கள் இல்லாமலேதான் முன்வைத்திருக்க அரசியல் தீர்வுத்திட்டத்தை அமுல்படுத்தி நாட்டை அபிவிருத்தி செய்யப்போவதாகவும் கூறியிருந்தது.

சிறீலங்கா அரசின் இந்தக் கூற்றை நம்பியே பல்வேறு மேற்குலக நாடுகளும் அவர்களுக்கு போதிய நிதி உதவியை வழங்குவதாக உறுதியளித்திருந்தன.

ஆனால், பின் வந்த நாட்களில் விடுதலைப் புலிகள் நடத்திய பாரிய தாக்குதல்கள், சிறீலங்கா அரசு சொல்வதுபோல அவர்கள் பலமிழக்க வைக்கப் பட்ட சக்தி அல்ல என்பதை இந்த நாடுகளுக்கு புரிய வைத்தன. இதற்கிடையில் சந்திரிகா அரசாங்கம் முன்வைத்த அரசியல் தீர்வு(?) தொடர்பாக ஆளும் கட்சிக்குள்ளேயே இருந்த இழுபறிகளும் எதிர்க்கட்சியினர் காட்டிய அக்கறையின்மையும் ஏற்படுத்திய கால தாமதமானது இந்த அரசாங்கம் என்பதையும் நடைமுறைப்படுத்த சக்தியற்ற 'வெற்று அரசாங்கம்' என்ற தோற்றத்தை இந்த நாடுகளுக்கு ஏற்படுத்தியதால் அவை உதவி வழங்குவதற்கு முன் நிபந்தனையாக அரசியல் தீர்வை விரைவு படுத்தும்படியாக அழுத்தம் ஒன்றை சந்திரிகா அரசுக்குக் கொடுத்தன.

மறுபுறத்தில் யுத்தத்தை அரசியலாக்கி, அதன் மூலம் தங்கள் செல்வாக்கை தக்க வைத்துக் கொள்ள சந்திரிகா அரசு உள் நாட்டில் மேற் கொண்ட முயற்சியும் தோல்வியே கண்டது. யாழ்ப்பாணத்தைப் பிடித்து கொடியேற்றிய போது ரத்வத்தையை 'சாபுமல் குமரயாவா' கவும், சந்திரிகாவை 'விகாரமா தேவி' (துட்டகைமுனுவின் தாய்) யாவும் கொண்டாடி மகிழ்ந்த நிலை இப்போது சிங்கள மக்கள் மத்தியில் இல்லை. அரசாங்கம் பொய் சொல்கிறது என்பதை அவர்கள் புரிந்துகொண்டு விட்டார்கள்.

தேவதையின் அந்தஸ்தை இழந்து விட்ட சந்திரிகாவின் இடத்துக்கு கண்டிய கொயிகம சாதியைச் சேர்ந்த பௌத்த சிங்களவரான ரணில் விக்கிரமசிங்காவை இளவரசனாக முடிசூட்ட பௌத்த சிங்கள இனவாதிகள் தீர்மானித்து விட்டது மட்டுமல்ல. அதை நோக்கி செயற்படவும் தொடங்கியும் விட்டனர்.

இந்த இக்கட்டான நிலையில் ஏதாவது செய்து தன்னுடைய இழந்த செல்வாக்கை மீளப் பெறமுடியுமா(?) எனப் பார்த்தார் சந்திரிகா. முதலில் தன்னுடைய கணவனின் கொலைக்கு முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவே காரணம் என்ற குற்றச் சாட்டை கிளப்பியுள்ளார். இந்தக் குற்றச்சாட்டுக்கு ஐ.தே.கட்சி பதில் சொல்வது; ஆளும் கட்சி அதற்கு எதிர்ப் பதில் சொல்வது; பின்பு ஐ.தே.கட்சி மீண்டும் அதற்கு மறுத்துப் பதில் சொல்வது என்று குட்டை குழம்பிக் கொண்டிருக்கிற நேரத்தில் உள்ளூராட்சித் தேர்தலை வைத்து எப்படியாவது அதில் வெற்றியீட்டிவிடவேண்டும் என்பதே சந்திரிகாவின் நோக்கமாகும்.

இந்த உள்ளூராட்சித் தேர்தலுக்கான ஒரு பிரச்சார நடவடிக்கையே, வவுனியாவிலிருந்து பறையனாலங்குளம் வரையிலும் செட்டிக்குளத்திலிருந்து பறையனாலங்குளம் வரையிலும் மேற் கொள்ளப்பட்ட முக்கோணப்படை நகர்வாகும். இந்தப் பிரதேசம் ஏற்கனவே இராணுவ சூன்ய பிரதேசமாகவே இருந்தது என்பதையும், விடுதலைப் புலிகள் அங்கு வந்து போவதுதான் வழக்கமே தவிர அங்கு அவர்களுடைய நிலையான தளங்கள் இருக்கவில்லை என்பதையும், சிங்கள வாக்காளர் தெரிந்துகொள்வதற்கு முன் உள்ளூராட்சித் தேர்தல் முடிந்துவிடும் என்று அரசு நம்பியதாகச் சொல்லும் கொழும்பு பத்திரிகையாளர் ஒருவர், இந்த மன்னார் நோக்கிய அச்சமில்லாத படை நகர்வில் புலிகள் எதிர்த்தார்கள்; அடித்தோம், விரட்டினோம், வெற்றிகரமாக முன்னேறினோம் 400 புலிகளைக் கொன்றோம், 500 புலிகளைக் கொன்றோம் என்று சொல்வதற்கு சந்தர்ப்பமே இல்லாமல் போய் விட்டது என்று ரத்வத்தையும் இராணுவப் பேச்சாளர்களும் வருந்தப்பட்டுக் கொண்டிருப்பதாக வேடிக்கையாகக் குறிப்பிட்டார்.

— காண்டீபன்

# அபிவிருத்தி அடைந்த ஜனநாயக நாடாக இலங்கையை மாற்றுவேன்

## ஜனாதிபதி சந்திரிகா

இந்நாட்டில் கானல்நீர் போல் தோன்றும் சமாதானத்தை எவ் வகையிலேனும் அடைந்தே தீரு வதோடு ஆசியாக் கண்டத்தி லேயே மிகவும் அபிவிருத்தி அடைந்த ஜனநாயக நாடாக 21-ம் நூற்றாண்டுக்குள் நுழைவ தற்கு திடசங்கற்பம் பூண்டுள் ளோமென ஜனாதிபதி சந்தி ரிகா தனது சுதந்திரதினச் செய் தியில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் அங்கு உரையாற்றுகை யில் சுதந்திரமானதும் நியாய மானதுமான பேச்சுவார்த்தைக ளின் மூலம் சிறுபான்மையின ரது பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் அரசியல் தீர்வுகளை முன்வைத்துள்ளோம். சுதந்திர இலங்கையில் சரிவரப் புரிந்து கொள்ள முடியாத ஒரு பிரச்சினைக்கு வெற்றிகரமான தீர்வுகளை நாம் கண்டுள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# ரஷ்ய ரயில் நிலையத்தில் சடலமாக கிடந்த தமிழ்ப்பெண் கொலையுண்டாரா ?

ரஷ்ய நாட்டில் கோமல் நக ரிலுள்ள ரயில் நிலையமொன் றில் பிணமாக காணப்பட்ட தமிழ்ப் பெண்ணின் மரணத் திற்கு கடும் குளிர் காரணமாக ஏற்பட்ட மாரடைப்பு காரண மென தெரிவிக்கப்பட்டபோதும் இவர் கொலையுண்டிருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

மரணமடைந்தவர் தென்ம ராட்சி மட்டுவில் பகுதியில் வசிக்கும் வேலன் சிறிதேவி என்பவராவர் என ரஷ்யப் பொலீசார் தெரிவித்துள்ளனர். ஆனாலும் இந்த விபரங்கள் யாவும் இவருக்கு அருகில் கிடந்த கடவுச் சீட்டிலிருந்து எடுக்கப்பட்டவை ஆதலால் இதனை முழுமையாக உறுதிப் படுத்த முடியாது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இது பற்றி மேலதிகமாக அறிய மொஸ்கோவிலுள்ள சிறீலங்கா தூதரகம் கொழும்பிற்கு விபரங் களை அனுப்பியுள்ளது.

ஆனால் பிரயாணமுகவரு டன் ஏற்பட்ட சர்ச்சை கார ணமாக இவர் கொலையுண்டி ருக்கலாம் எனவும் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

உண்மையில் மாரடைப்பு காரணமாக இறந்திருந்தால் இவருடன் தங்கியிருப்போர் இவரைப்பற்றிய விபரங்களை வெளியிட்டிருப்பார்கள். ஆனால் அநாதரவான நிலையில் இவர் இறந்து கிடந்த நிலைமை சந் தேகத்தை ஏற்படுத்தியுள்ளதென வும் இவர் எவ்வாறு, எப்போது ரஷ்யாவிற்குள் நுழைந்தார் என் பதும் இதுவரை வெளியாக வில்லை எனவும் தெரிவிக்கப் படுகிறது.

# ரணில் விக்கிரமசிங்காவை கண்காணித்த அரச உளவாளி பிடிபட்டார்

சிறீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங் காவின் நடவடிக்கைகளை இர கசியமாக கண்காணிக்குமாறு அமர்த்தப்பட்ட பொலீஸ் உள வாளி ஒருவரை ரணில் விக்கி ரமசிங்காவின் பாதுகாப்பு அதி காரி பிடித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கா நீர் கொழும்புப் பகுதிக்கு தமது கட்சி அலுவலாக வந்திருந்த போது சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய ஒருவரை கைது செய்த பாதுகாப்பு அதி காரிகள் அவரை விசாரித்த போது முன்னுக்குப் பின் முர ணான தகவல்களை தெரிவித் துள்ளார்.

பாதுகாப்பு அதிகாரிகள் அவரை மேலும் துருவி விசா ரணை செய்தபோது அந்த நபர் சிறீலங்கா தேசிய புலனாய்வு பணியகத்தினால் அமர்த்தப் பட்ட விசேட உளவாளி என் பது தெரிய வந்துள்ளது.

இவரை பரிசோதனை செய்தபோது அவரிடம் புல னாய்வுப் பணியகத்தின் அடை யாள அட்டையும் இருக்க காணப்பட்டுள்ளது.

# மகிழடித் தீவு பாலத்தை இராணுவம் தகர்த்தது

சித்தாண்டி மகிழடித்தீவு பாலத்தை சிறீலங்கா இராணு வம் குண்டு வைத்து தகர்த்துள் ளது. இதனால் பாலம் கடும் சேதமடைந்துள்ளதுடன் இப் பகுதியில் உள்ள விவசாயிகள் அறுவடை செய்த தமது நெல் லினை எடுத்து வர முடியாத நிலையும் தோன்றியுள்ளது.

மாவடி வேம்பு இராணுவ முகாம் மீது வெற்றிகரமாக விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து சித் தாண்டியிலுள்ள இராணுவத் தினர் புலிகள் தமது முகாமி னையும் தாக்க இப் பாலத்தி னூடாகவே வருவார்கள் என்ற அச்சத்தின் காரணமாகவே இப் பாலத்தை குண்டு வைத்துத் தகர்த்துள்ளனர். கடந்த வெள்ளி யன்று (07.02.97) இப் பாலத்துக் குச் சென்ற இராணுவ அணி யொன்று அப்பாலத்தில் குண்டு களை பொருத்தி வெடிக்க வைத் ததை நேரில் கண்டதாக பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

# ஆட்கடத்தல் - கொலையில் ஈடுபட்ட 5 பொலீசாருக்கும் விடுதலை

1989-ம் ஆண்டு ஜே.வி.பி இயக்கத்தின் நடவடிக்கைகள் தீவிரமாக இருந்த காலத்தில் பல சிங்கள இளைஞர்களின் கொலைகளுக்கு காரணமான குற்றச் சாட்டுக்கள் தொடர் பாக தடுத்து வைக்கப்பட்டி ருந்த ஐந்து பொலீஸ் அதிகாரி களும் கடந்த வாரம் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த ஐவரும் மூன்று மாதங் களாக ஆட்கடத்தல் கொலைக் குற்றச் சாட்டுகள் தொடர்பாக தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் ஐவரும் கடந்த வாரம் கம்பகா நீதிமன்றத்தில் முன்னி லைப்படுத்தப்பட்டபோது நீதி பதி இவர்களை விடுதலை செய்யுமாறு பணித்துள்ளார்.

இந்த பொலீஸ் அதிகாரிகள் முன்னாள் சிரேஷ்ட பொலீஸ் ஆணையாளர் டக்ளஸ் பீரிசு டன் இணைந்தே இந்த ஆட் கடத்தல் கொலைகளை புரிந்த வர்கள் என்பது குறிப்பிடத்தக் கது.



## லாக்கூர்னோவில் வீடு வாடகைக்கு

இரண்டு அறைகள் கொண்ட 35M2 அளவுடைய சகல வசதிகளுடன் கூடிய வீடு, Mo: La courneuve-இல் இருந்து 50 மீற்றர் தொலைவில் Center Commercial CARREFOUR, L'ecole, Marche 7/7 ஆகிய வசதிகள் உள்ளன.

வாடகை 2600 Frs
தொடர்புகளுக்கு: Mr SRONG
Tel: 01 42 26 50 24

## வாகன சேவை

உங்கள் பொருட்கள், வீட்டுத் தளபாடங்கள் போன்றவற்றை ஏற்றி இறக்கவும் வெளியூர் பிரயாணம் போன்ற தேவைகளுக்கும்



ரவி: 01 48 76 51 90
06 07 62 26 89 / 01 42 23 23 10

## கடை வாடகைக்கு

சுவிஸ் LAUSANNE மாநிலத்தில் RUE DE LA BORDE 3b என்னும் இடத்தில் 80M2 , 90M 2 பரப்பளவு கொண்ட கடை வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
021 312 84 94
021 320 88 92

## வீடு வாடகைக்கு

பாரிஸ் 19ல் Métro: Crimée இற்கு அருகாமையிலும் வியாபார ஸ்தாபனங்களுக்கு அருகாமையிலும் 2F வீடு வாடகைக்கு உண்டு.
வாடகை 4000Frs / Mois.
விற்பனைக்காயின் 300,000Frs
தொடர்புகளுக்கு: BELHADJ
Tel: 01 43 52 90 30
01 40 05 07 86

வித்தியாலயா வழங்கும்
கலைமாமணி மா.யோகேஸ்வரனின்

## கர்நாடக இசைக் கச்சேரி



வயலின்: கோதண்டபாணி / மிருதங்கம்: பவானிசங்கர்
காலம் 01.03.1997 மாலை 8.00 மணி
இடம்: Salle ADYAR - 4, Square Rapp, 75007 Paris.
(Metro: Ecole Militaire அல்லது Pont d'Alma)
மேலதிக விபரங்களுக்கும் / நுழைவுச் சீட்டுக்களுக்கும்:
தொடர்பு கொள்ள 01 39 52 89 94 அல்லது 01 48 96 17 41
நுழைவுக்கட்டணம் 80 Frs.

The best in quality
the very best in price
M.R. MODE collection

## எம்.ஆர். மொட் கொலெக்ஷன்

3-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு
15.02.97 விசேட மலிவு விற்பனை

நேரம்: காலை 9.00 - பிற்பகல் 16.00 மணி

பட்டு, பாவாடை, புது விதமான பஞ்சாபி சூட், குழந்தைகளுக்கான நீட்டுப்பாவாடை, பாட்டி சூட் கொலெக்ஷன் ஆட்பனாரன், கொட்டன் சில்க், சொந்தத் தயாரிப்பில் உருவாக்கிய புதுவிதமான பனாரஸ், முத்து பனாரஸ், கூறை ஆகியவற்றை நீங்கள் விரும்பிய வண்ணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

Taunus Str.52-60
60328, Frankfurt/M
Tel:/Fax: 069/251308

# இடைநடுவில் தடுமாறும் 'எடிபல' இராணுவ நடவடிக்கை

## 'எடிபல' மன்னாரை நோக்கியா? தேர்தலை நோக்கியா?

இம்மாதம் முதல் வாரம், அதாவது சிறீலங்காவின் சுதந்திர தினத்தன்று ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையானது இராணுவ இலாப நோக்கங்களை விட அரசியல் இலாப நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டதாக தென்னிலங்கை அரசியல்வாதிகள் கூறியுள்ளனர். எப்படியாயினும் இப்படியொரு இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்க சிறீலங்கா அரசு ஏற்கனவே முடிவுசெய்திருந்தது. இந்த நடவடிக்கையால் அது எந்தவிதமான இலாபங்களை அடைந்திருக்கிறது, அடையப் போகிறது?

இன்றுவரை இந்த 'எடிபல' இராணுவ அணிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் புகவில்லை. விடுதலைப் புலிகளாலும் எதிர்த் தாக்குதல் எதுவும் நடாத்தப்படவுமில்லை. சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் செய்தி ஒன்றை ஆதாரமாகக்கொண்டு ஒரு பத்திரிகை தனது செய்தியில், ஒரே ஒரு இடத்தில் மட்டும் விடுதலைப் புலிகளின் தாக்குதலை விசேட கொமாண்டோ அணியினர் சந்தித்ததாகவும் அதில் ஒன்பது பேர் படுகாயமடைந்ததாகவும் கூறியுள்ளது.

இந்தத் தாக்குதல் நடவடிக்கைக்கு அடுத்த மாதம் நடைபெற உள்ள உள்ளுராட்சித் தேர்தல்களும் ஒரு பிரதானமான காரணம் எனச் சொல்லப்படுகிறது. வரும் மார்ச் மாதம் சிறீலங்கா அரசு, வடக்கு கிழக்கு தவிர்ந்த பிரதேசங்களில் உள்ளுராட்சித் தேர்தல்களை நடாத்த முடிவுசெய்துள்ளது. இதற்கான பிரச்சார வேலைகள் ஆரம்பமாகவுள்ள நிலையில் தோல்வியையே தழுவக் காத்திருக்கும் மக்கள் முன்னணி அரசு தனது நிலைமையை சிறிதேனும் சரிசெய்து கொள்வதற்காகவும் தென்னிலங்கை மக்களை ஏமாற்றவும் ஏதாவது செய்யவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானது. வடமத்திய மாகாணத்தில், அதிலும் அநுராதபுர எல்லைப் பகுதியில் இராணுவத்தின் காவல் நிலைகள் மீது விடுதலைப் புலிகள் தொடர்ந்து தாக்குதல்களை நடாத்தியதன் காரணமாக பல கிராமங்களிலிருந்து இராணுவம் விலகிக் கொண்டது. தமது பாதுகாப்பை அரசாங்கம் உறுதிப்படுத்தவில்லை என்றும் தங்களை அரசு உதாசீனம் செய்கிறது என்றும் குற்றம்சாட்டிய அந்த மக்களையும் சமாதானப்படுத்த வேண்டிய நிலை; யாழ். குடாவையும் பின்னர் கிளிநொச்சியையும் கைப்பற்றி தரைப்பாதை ஒன்றை வவுனியா வரை திறக்கப்போவதாகக் கூறிய அரசு, கடந்த மாதம் பரந்தனில் பலத்த இழப்புக்களை விடுதலைப் புலிகளிடம் சந்தித்தது. இந்தப் பரந்தன் தாக்குதலானது அரசின் பாதைத் திறப்பை ஒத்திப்போடும் நிலைக்குக் கொண்டுவந்தது. ஆனால் எப்படியும் தான் வவுனியாவில் கொண்டு வந்து குவித்த இராணுவத்தை நகர்த்தியாக வேண்டும் என்பதற்காக இரண்டு மார்க்கங்கள் தெரிவுசெய்யப்பட்டன. ஒன்று, வவுனியாவிலிருந்து 67 கிலோமீற்றர்கள் முன்னேறி மன்னார் இராணுவத்துடன் தொடர்பை ஏற்படுத்துவது. இரண்டாவது, வவுனியாவிலிருந்து 45 கிலோமீற்றர்கள் முன்னேறி கிளிநொச்சி இராணுவத்துடன் தொடர்புகளை ஏற்படுத்துவது. ஆனால், இரண்டு நடவடிக்கைகளிலும் பாரிய இழப்புக்களைச் சந்திக்க வேண்டிய நிலை இராணுவத்து ஏற்படும். இன்று வவுனியா - மன்னார் பாதையில் 7 கிலோமீற்றர்கள் தவிர்ந்த பகுதிகள் விடுதலைப் புலிகள் நடமாடும் பகுதிகளாகவே உள்ளன. அதிலும் பாரிய காட்டுப் பகுதிகள் கொண்ட மடுவுக்கு அப்பால் உள்ள பகுதிகள் சிறீலங்கா இராணுவத்துக்கு முற்றிலும் பழக்கமற்ற பகுதிகளாகவும் விடுதலைப் புலிகளுக்கு நன்கு பழக்கப்பட்ட பகுதிகளாகவும் இருக்கின்றன. இப்பகுதிகளுக்குள் இராணுவம் புகும்போது, பலத்த தாக்குதல்களை விடுதலைப் புலிகள் நடத்தலாம். அதேபோல், வவுனியாவிலிருந்து கிளிநொச்சி நோக்கிய 45 கிலோ மீற்றர் தூரமும் முற்றாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமாகவே உள்ளது. இதற்குள் புகுவதென்பது தெரிந்தும் கிணற்றுக்குள் குதிப்பது போன்றதொரு நிலையாகும். ஆனாலும், இராணுவம் எப்படியும் நகர்த்தப்பட்டே ஆகவேண்டும்.

பெப்ரவரி 4ம் திகதி, சுதந்திரதின கொண்டாட்டங்களை முடித்துக்கொண்டு முப்படைத் தளபதி ரொஹான் தலுவத்த வவுனியா நகர் வந்து சேர்ந்தார். வடக்கு கிழக்கு கூட்டு நடவடிக்கைத் தளபதி மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்தனாவின் தலைமையில் படைகள் நகர்வுக்குத் தயாராகின. பிரிகேடியர் வசந்த பெரேராவின் தலைமையில் விசேட படைப் பிரிவும் பிரிகேடியர் சிவலி வணிகசேகரா தலைமையில் மற்றொரு படைப்பிரிவும் முன்னேறத் தொடங்கியது. இதே வேளை செட்டிகுளம் இராணுவ முகாமிலிருந்து பிரிகேடியர் சாலிய குலதுங்காவின் தலைமையில் ஒரு படையணி மன்னார் மார்க்கமாக நகர்ந்தது. இவ் இரண்டு படையணிகளிலும் இருபதினாயிரம் பேர் வரையில் இருந்தார்கள். இவ் இராணுவ நகர்வில் 'சிங்க ரெஜிமென்'டின் 4வது, 8வது படைப் பிரிவுகளும், விஜயபாகு ரெஜிமென்டின் 5வது 6வது படைப் பிரிவுகளும், கஜபாகு ரெஜிமென்டின் 4வது படைப்பிரிவும் மற்றும் பீரங்கிப் படைப் பிரிவு, விமானப்படையும் பயன்படுத்தப்பட்டன.

**'எமது உளவுப் பிரிவினர் கூறும் அறிவித்தல்கள் வானொலியில் வரும் வானிலை அறிக்கை போன்றது. சூழ உள்ள பகுதிகளில் தாக்குதல்கள் நடந்தாலும் நடக்கலாம் என்றுதான் கூறுவார்களே ஒழிய அது எந்தப் பகுதி என்பதை உறுதிப் படுத்த மாட்டார்கள்.**

பூவரசங்குளம் இராணுவ வேலியினூடாக வெளியேறிய இராணுவ அணிகளும் செட்டிகுளத்திலிருந்து வெளியேறிய அணிகளும் 'பிராமணாலங் குளத்தில்' ஒன்றாக இணைந்து இராணுவ குனியப் பிரதேசத்தினூடாக விமானப்படை உதவியுடன் நகரத் தொடங்கினார்கள். மூன்று நாட்கள் நகர்வின் பின் 'பறையனாலங்குளம்' பகுதியில் தமது நகர்வை நிறுத்தி பின் மடுச்சந்தி வரை முன்னேறினார்கள். அதுவரை விடுதலைப் புலிகளைச் சந்திக்காத நிலையில், விசேட கொமாண்டோ அணியின் 9 பேர்கள் விடுதலைப் புலிகளின் தாக்குதலால் படுகாயம் அடைந்தனர். அத்துடன் தனது நகர்வை நிறுத்திக் கொண்ட இராணுவம் தனது முதற்கட்ட இராணுவ நடவடிக்கையை நிறுத்திக்கொண்டதாக அறிவித்தது.

இதுவரை எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் முன்னேறிய இராணுவத்தினர் மடுச்சந்திக்கு அப்பால் விடுதலைப் புலிகளின் தாக்குதலைச் சந்திக்க வேண்டி வரும் என்பதால் பெரும் மோதல்களுக்கிடையே தொடர்ந்து முன்னேறி மன்னார் இராணுவத்துடன் தொடர்புகளை ஏற்படுத்துவதா? அல்லது மடுச்சந்தியினூடாக கிளிநொச்சி நோக்கி நகர்வதா? என்ற குழப்ப நிலையில் அடுத்தகட்ட நடவடிக்கையாக மடுச்சந்தியிலிருந்து மதவாச்சியை நோக்கிய பாதையினூடாக மதவாச்சியை அடைந்து தமது பாதுகாப்புப் பிரதேசத்தை சிறிது விரிவுபடுத்துவார்கள் என சில ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளார்கள். அப்படியொரு நிகழ்ச்சி நடந்தால் வில்பத்து காட்டுப் பகுதி, மடு காட்டுப்பகுதி போன்ற பகுதிகளில் விடுதலைப் புலிகளை பிரிவடையச் செய்து அவர்களை வன்னிப் பிராந்தியத்தில் பலவீனப்படுத்தலாம் என சில இராணுவ ஆய்வாளர்கள் கருத்துக் கூறியிருந்தாலும், அப்படியான ஒரு நிலையானது விடுதலைப் புலிகளுக்கு மிகவும் சாதகமானதாகவே அமையும் என்ற வேறு ஒரு ஆய்வாளர், 'விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து அப்பகுதிகளைக் கைப்பற்றும் போது அவர்கள் காட்டுப் பகுதிகளுக்குள் மேலும் தங்கள் கட்டுப்பாட்டை விரிவுபடுத்திக்கொள்வார்கள். இது ஏற்கனவே பல தடவைகள் நிரூபிக்கப்பட்டுமுள்ளது. முல்லைத்தீவு, பரந்தன் தாக்குதல்கள் யாழ்குடா, கிளிநொச்சி போன்ற பகுதிகளிலிருந்து விடுதலைப் புலிகள் விலகிக்கொண்டதன் பிரதிபலிப்பே' எனக் கூறிய அவர் இவ்விரு தாக்குதல்களாலும் தங்களது இராணுவம் பல ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றுவிட்டதாகவும் கூறினார்.

இவ் இராணுவ நடவடிக்கையில் பிரதான பங்கினை வகித்த மற்றொரு அதிகாரி கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்குக் கூறுகையில், 'வவுனியா பாதுகாப்புப் பிரதேசத்திலிருந்து மூன்று முனையாக இராணுவம் வெளியேறியதானது விடுதலைப் புலிகளைக் குழப்புவதற்காகவே. ஆனால், இராணுவம் எத்திசையில் நகரும் என்பதை அவர்கள் நன்றாகவே உணர்ந்திருந்தார்கள். இராணுவத்தின் இன்றைய நிலையில் அது கிளிநொச்சி நோக்கி நகரமாட்டாது என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தார்கள். கிளிநொச்சி நகர்வு என்பது கூட மிகவும் கஷ்டமானதே. தாண்டிக்குளம் எல்லைப் பகுதியில் கடந்த ஆறு வருடங்களாக அவர்கள் மிகவும் பலமான தடை அரண்களையும் காவல் நிலைகளையும் ஏற்படுத்தி உள்ளார்கள். சரி, அப்படித்தான் அவற்றையும் தாண்டி முன்னேறினால் கூட அப்பகுதிகளைப் பாதுகாப்பதில் இராணுவம் பாரிய சிக்கல்களை எதிர்நோக்கும். அப்பகுதிகளில் ஊடுருவித் தாக்குதல்கள் நடாத்துவது என்பது விடுதலைப் புலிகளுக்கு கைவந்த கலை.

'எடிபல' இராணுவ நகர்வை இராணுவம் மிக இரகசியமாகவே வைத்திருந்தாலும் விடுதலைப் புலிகள் இப்படியான தாக்குதலை அறிந்து மூன்று நாட்களுக்கு முன்னதாகவே மிகவும் தந்திரோபாயமான விலகலை நடாத்தியிருந்தார்கள். அதற்கு அவர்களது உளவுப் படையின் அபார வேலைத் திட்டமே காரணம்' என்று கூறிய அந்த அதிகாரி, 'எமது உளவுப் பிரிவினர் கூறும் அறிவித்தல்கள் வானொலியில் வரும் வானிலை அறிக்கை போன்றது. சூழ உள்ள பகுதிகளில் தாக்குதல்கள் நடந்தாலும் நடக்கலாம் என்றுதான் கூறுவார்களே ஒழிய அது எந்தப் பகுதி என்பதை உறுதிப்படுத்த மாட்டார்கள். ஆனால், விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவினர் மிகவும் நிச்சயமான செய்திகளையே கூறுகின்றார்கள்' என்றார்.

ஆக இதுவரை எதையுமே சாதிக்கமுடியாத நிலையில், 'எடிபல' இராணுவ அணிகள் தொடர்ந்தும் காத்திருக்கின்றன.

**-பண்ணையார்-**


# Siva Thaya Tamil Printers

தொடர்புகளுக்கு:
Mr. K. SIVA
Haupt Str - 13
6313 Menzingen.
(Zug, Switzerland)
T.P: 0041/ 41/755 31 92
Fax: 0041/ 41/ 755 31 92

உங்கள் திருமணம், பிறந்தநாள், பூப்புனிதநீராட்டுவிழா, மற்றும் சகலவித அழைப்பிதழ்களும் இலங்கை, இந்தியா, இலண்டன் மற்றும் சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட மிக அழகான, நவீன, தரமான அழைப்பிதழ்களில் குறித்த நேரத்தில் மிக விரைவாக செய்து தரப்படும். இத்துடன் வாழ்த்து மடல்கள், சகல பிரசுரங்கள், விளம்பரங்கள், விலைப்பட்டியல்கள், புத்தகங்கள் போன்றவையும் எம்மிடம் பதிப்பிக்கலாம்.

உங்கள் திருமணம், பிறந்தநாள், பூப்புனிதநீராட்டுவிழா, மற்றும் சகலவித அழைப்பிதழ்களுக்கும் எம்மிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டால் நாம் இலவசமாக Model Cards உங்களுக்கு அனுப்பி, Fax or T.P மூலமாக விபரங்களை பெற்றுக் குறிப்பிட்ட தவணையில் உங்களுக்கு அழைப்பிதழ்களை பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைப்போம்.

அவசர திருமண அழைப்பிதழ்கள் மேலதிக கட்டணமின்றி 24 மணித்தியாலத்தில் செய்து தரப்படும்.

**அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!**
மேற்குறிப்பிட்ட நாடுகளில் இருந்து தருவிக்கப்பட்ட தரமான அதிநவீன அழைப்பிதழ்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

## யாழ் குடாவில் டெங்குக் காய்ச்சல்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் டெங்குக் காச்சல் மிக வேகமாகப் பரவி வருகிறது. எந்த விதமான தடுப்பு நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப் படாமையால் தற்போது இத் தொற்றுநோயின் தீவிரம் கடுமையாகவுள்ளது. முறையான மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொள்ளப்படாவிட்டால் இந்த நோய் மரணத்தை ஏற்படுத்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

## பேய்த்தாளையில் பொலிசார் வெறியாட்டம்

மட்டக்களப்பு பேய்த்தாளைக் கிராமத்திற்குள் புகுந்த கற்குடாப் போலிசார் அங்கிருந்த மக்களைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர். இரவு வேளையில் பல வாகனங்களில் வந்த பொலிசார், நித்திரையில் ஆழ்ந்திருந்த மக்கள் மீது உலோகக் கம்பிகளாலும், துப்பாக்கிப் பிடிகளாலும் மிக மூர்க்கத்தனமாகத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். கடந்த 30-ஆம் திகதி நடைபெற்ற இந்தக் கொடூரச் சம்பவத்தில் காயமடைந்தோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## மட்டக்களப்பில் வரட்சி

கடந்த வருடத்தில் போதியளவு மழை வீழ்ச்சி இல்லாத காரணத்தால் மட்டக்களப்புப் பிரதேசத்தில் பெரும் வரட்சி தலைதூக்கியுள்ளது. இங்குள்ள நீர்நிலைகள் யாவும் வற்றி வரண்டு கிடப்பதால் குடிநீருக்குக்கூட தட்டுப்பாடு நிலவி வருகிறது. மட்டக்களப்பிற்கான நீர்ப்பாசன வேலைகளுக்கு சிறீலங்கா அரசு எவ்வித சிரத்தையும் எடுப்பதில்லை.

## துவிச்சக்கர வண்டியில் சென்ற படையினர் பலி

தென்மராட்சி மந்துவில் பகுதியில் துவிச்சக்கர வண்டியில் சென்ற சிறீலங்கா துருப்பினர் மீது விடுதலைப்புலிகள் கடந்த 2-ஆம் திகதி தாக்குதல் நடாத்தியதில் இரு சிப்பாய்கள் பலியானார்கள். ஏனையோர் ஓடித்தப்பினர். அவர்களிடமிருந்த ஆயுதங்களும், அவர்கள் செலுத்தி வந்த துவிச்சக்கர வண்டிகளையும் புலிகள் எடுத்துச்சென்றனர். புலிகள் தரப்பில் இழப்பு ஏதும் இல்லை.

# தமிழீழச் செய்திகள்

## இடைவிடாத எறிகணை வீச்சு

பரந்தன், ஆனையிறவு, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிறீலங்காப் படையினர் இடைவிடாத தொலைதூர எறிகணை வீச்சுகளை மக்கள் குடியிருப்புகளை நோக்கி மேற்கொண்டு வருகின்றனர். சிறிலங்காவின் சுதந்திர தினத்தன்று இந்த எறிகணை வீச்சுக்கள் மிகக் கடுமையாக இருந்தன. இரவு பகலாக நடாத்தப்பட்ட இத்தாக்குதல்களில் மக்கள் உயிருக்கும் உடமைகளுக்கும் பெருஞ் சேதம் ஏற்பட்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது.

## புதுக்குடியிருப்பில் புக்காரா தாக்குதல்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பகுதியில் சிறீலங்கா வான்படையின் புக்காரா குண்டுவீச்சு விமானங்கள் தமது தாக்குதலை நடாத்தியுள்ளன. பகல் வேளையில் நடாத்தப்பட்ட இத்தாக்குதலுக்கு அஞ்சிப் பாடசாலை மாணவர்கள் பீதியடைந்து அல்லோல கல்லோலப்பட்டு ஓடினர். இத் தாக்குதலினால் பல கட்டடங்கள் இடிந்து விழுந்துள்ளன.

## விவசாயக்கடன் வழங்கப்பட்டது

முல்லை மாவட்ட நெற்செய்கையாளருக்கு 1997 ஆம் ஆண்டிற்கான கடனுதவி, தமிழர் பொருளியல் அபிவிருத்தி நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது. முல்லை மாவட்டத்திலுள்ள 57 நெற்சாகுபடியாளருக்கு 5 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாவும், மணலாற்று பகுதி விவசாயிகளுக்கு 6 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாவும், ஒட்டுசுட்டான் பிரதேச விவசாயிகளுக்கு 6 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது.

## அக்கராயனில் சத்துணவுக் கூடம்

குழந்தைகளுக்கான புதிய சத்துணவுக் கூடமொன்று அக்கராயனில் திறக்கப்பட்டுள்ளது. அக்கராயன் அபிவிருத்திச சங்கத்தினதும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினதும் அனுசரணையுடன் திறக்கப்பட்டுள்ள அந்த சத்துணவுக் கூடத்திற்கு 87 சிறார்கள் உணவூட்டம் பெறத் தெரிவாகியுள்ளார்கள்.

## தாண்டிக்குளத்தில் பெண் சிப்பாய்களின் கெடுபிடி

தாண்டிக்குள சோதனைச் சாவடிகளில் நிலைகொண்டுள்ள சிறீலங்கா இராணுவத்தின் பெண் சிப்பாய்கள் அப்பாவி தமிழ்ப் பெண்கள் மீது பல கெடுபிடிகளை விதித்து வருகின்றனர். அண்மையில் வயதான தமிழ்ப் பெண்மணி ஒருவர் தனது சொந்தப் பாவனைக்கென கொண்டு சென்ற மருந்துப் பொருட்களைப் பறித்த இப் பெண்சிப்பாய்கள் அவற்றினை வீசி எறிந்துள்ளனர்.

## பழுகாமத்தில் தமிழர்களின் "ராஜகாரிய"

பழுகாமத்தில் உள்ள விசேட அதிரடிப்படை முகாமின் சுத்திகரிப்பு வேலைகளுக்கு அப்பகுதியிலுள்ள தமிழர்கள் பலவந்தமாகப் பணிக்கப்படுகின்றனர். படைகளின் மலசலகூடங்களையும் சுத்திகரிக்கும் படி பணிக்கப்படும் இந்த இளைஞர்களுக்கு வாரம் ஒரு தடவை கட்டாயம் இவ்வாறான 'ராஜகாரிய' வேலையை படையினருக்கு செய்யும் படி அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

## மீசாலை இளைஞர் படுகொலை

தென்மராட்சி மீசாலைப் பகுதியில் வசிக்கும் 29 வயதான இளைஞர் ஒருவர் படையினரால் சித்திரவதை செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். விஜயனார் என்ற இளைஞரே உயிர் போகும் வரை அடித்துக் கொலை செய்யப்பட்டவராவர்.

## தளபாடங்கள் இல்லாத பாடசாலை

மாங்குளம் மத்திய வித்தியாலயத்தில் தளபாடங்களுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவி வருகிறது. இப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் மரங்களுக்குக் கீழேயுள்ள வெறும் தரையில் இருந்து தமது பாடங்களைக் கற்கும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். சிறிலங்கா அரசு பாடசாலைகளுக்கான தளபாட விநியோகங்களுக்கு தொடர்ந்தும் தடைவிதித்து வருகிறது.

# 10வது ஆண்டு வீர வணக்கம்

எம் தேசத்தை தினம் ரணமாக்கிய அரக்கர்களின் குகை நோக்கி புறப்பட்ட அக்கினிக் குஞ்சுகள் வீரச்சாவடைந்து இன்று ஆண்டுகள் பத்து



லெப். கேணல் பொன்னம்மான் (குகன்)



மேஜர் கேடில்ஸ் (திலீபன்)



கப்டன் வாசு (சுதாகர்)



லெப். சித்தார்த்தன் (வசீகரன்)

2வது லெப். பரன்

அக்பர் (லோகநாதன்)

தேவன் (வசந்தகுமார்)

யோகேஸ் (பாலன்)

கவர் (நகுலேஸ்வரன்)

குமணன் (மோகனலிங்கம்)

கைதடியில் நடந்த எதிர்பாராத வெடி விபத்தில் வீரமரணமடைந்த வேங்கைகள்

விடிகின்ற எம் தேசத்தில் ஆயிரமாயிரமாய் வேங்கைகளின் உணர்வோடு கலந்துவிட்ட எம் தேசப் புதல்வர்களுக்கு வீர வணக்கங்கள்

— தமிழீழ மக்கள் —

# ஆட்டிலெறியால் வந்த ஆபத்து

**கொழும்பிலிருந்து தமிழரசன்**

வடபகுதியின் பாதுகாப்பு அரண் எனக் கருதப்பட்டு வந்த வவுனியா நகருக்கு பீரங்கி வடிவில் வந்துள்ள ஆபத்து பாதுகாப்பு படையினரை திக்குமுக்காட வைத்துள்ளது. வடபகுதி முழுவதையும் தமிழீழ விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த காலகட்டத்தில் வவுனியாப் பகுதி மாத்திரமே படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. இப்போது வவுனியா கட்டுப்பாட்டு பிராந்தியத்தின் பாதுகாப்பும் கேள்விக்கு உரியதாகி விட்டது.

கடந்த சனிக்கிழமை அதிகாலை நீண்டதூர வீச்சுக் கொண்ட பீரங்கிகள் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் வவுனியா நகரப் பகுதி மீது தாக்குதல்களை மேற் கொண்டனர். சுமார் இருபது பீரங்கிக் குண்டுகள் ஏவப்பட்டன. அனைத்துமே இலக்குத் தவறி வெடித்தாலும் கூட ஒரு குண்டு வவுனியா பொலீஸ் விடுதிக்கு முன்னால் விழுந்து வெடித்தது. அந்த நேரத்தில் விடுதியில் தித்திரை செய்து கொண்டிருந்த இரண்டு பொலீசார் கொல்லப் பட்டார்கள். நான்கு பொலீசார் படுகாயமடைந்தனர். விடுதிக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு பஸ் வண்டிகள் முற்றாக சேதமடைந்தன. இரண்டாவது தடவையாக ஞாயிற்றுக்கிழமை அதிகாலையும் மூன்று பீரங்கிக் குண்டுகளை தமிழீழ விடுதலைப் புலிகள் ஏவி உள்ளனர். முதல் தடவையாக இப்போது தமிழீழ விடுதலைப் புலிகள் நீண்ட தூரம் வீச்சுக் கொண்ட பீரங்கிகள் மூலம் தாக்குதல் நடாத்தி இருக்கிறார்கள்.

கடந்த வருடம் ஜூலை மாதம் முல்லைத்தீவு இராணுவ கடற்படை முகாம்களை தமிழீழ விடுதலைப் புலிகள் துவம்சம் செய்த வேளையில் முகாமில் இருந்து நீண்டதூரம் வீச்சுக் கொண்ட 122 மில்லி மீட்டர் பீரங்கிகள் ஐந்தைக் கைப்பற்றிச் சென்றார்கள். அவற்றைப் பயன்படுத்தியே முதல் தடவையாக வவுனியா நகரப் பகுதி மீது தாக்குதல் நடத்தி இருக்கிறார்கள் என இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய இந்த முதல் பீரங்கி தாக்குதல், குறித்த இலக்கில் விழத் தவறினாலும் எதிர் காலத்தில் அந்த தவறுகளை திருத்திக் கொண்டு சரியான இலக்குகள் மீது தாக்குதல் நடத்தவே போகிறார்கள். இதனால் படையினருக்கு பாரிய இழப்பு ஏற்படுவது தவிர்க்க முடியாமல் போகும் என்பது திண்ணம். தமிழீழ விடுதலைப் புலிகள் எப்போதும் நூற்றுக்கணக்கில் ஒரு இடத்தில் தங்குவதில்லை. படையினரே முகாம்களில் ஆயிரக்கணக்கில் தங்குவார்கள். அவ்வாறான முகாம் ஒன்றின் மீது பீரங்கி குண்டு சரியாக விழுந்து வெடித்தால் ஒருவரும் தப்ப முடியாது. எதிர்காலத்தில் பீரங்கி தாக்குதல்களினால் ஆயிரக் கணக்கில் படையினர் மடியப் போவது என்னவோ உண்மை.



**படையினரே முகாம்களில் ஆயிரக்கணக்கில் தங்குவார்கள். அவ்வாறான முகாம் ஒன்றின் மீது பீரங்கி குண்டு சரியாக விழுந்து வெடித்தால் ஒருவரும் தப்ப முடியாது. எதிர்காலத்தில் பீரங்கி தாக்குதல்களினால் ஆயிரக் கணக்கில் படையினர் மடியப் போவது என்னவோ உண்மை.**

வவுனியா நகர்மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய பீரங்கி தாக்குதல்களை அடுத்து படையினரால் ஆரம்பிக்கப் பட்ட 'எடிபல' (அச்சமின்மை) இராணுவ நடவடிக்கை தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. புதன்கிழமை பூவரசங்குளத்தில் இருந்து ஆரம்பமான இந்த எடிபல இராணுவ நடவடிக்கை மூலம் வெள்ளிக்கிழமை வரை மடுச்சந்தி வரையிலான இருபத்திரெண்டு கிலோ மீட்டர் தூரம் தமது கட்டுப் பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டிருப்பதாக இராணுவம் அறிவித்தது. சனிக்கிழமை பீரங்கி தாக்குதலுடன் இந்த இராணுவ நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இந்த இராணுவ நடவடிக்கையின் மூலம் மன்னாரையும், வவுனியாவையும் இணைத்தே தீருவோம் எனவும், இன்னும் ஓரிரு தினங்களில் 'எடிபல' இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகும் எனவும் நீர்பாசன மின் சக்தி அமைச்சரும், பிரதி பாதுகாப்பு அமைச்சருமான ஜெனரல் அநுருத்த ரத்வத்தை கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

# கிழக்கில் தமிழ் முஸ்லீம் கலவரம்

• • • • •

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, மாவட்டத்தில் உள்ள ஓட்டமாவடி, ஏறாவூர் ஆகிய பகுதிகளில் மீண்டும் தமிழ்- முஸ்லீம் கலவரங்கள் ஆரம்பமாகி உள்ளன. நோன்பு பெருநாள் அன்று முஸ்லீம் ஊர்காவல் படை வீரர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து முஸ்லிம் காடையர் கூட்டமொன்று ஓட்டமாவடியில் வைத்து இரண்டு தமிழர்களை பெற்றோல் ஊற்றி எரித்து கொன்றனர். ஐந்து தமிழர்கள் வெட்டுக் காயங்களுக்கு இலக்கானார்கள். இதனை அடுத்து கலவரம் வெடித்தது. அன்றைய தினம் இரவு வாகனம் ஒன்றில் பிரயாணம் செய்த நான்கு முஸ்லிம்கள் வெட்டிக் கொல்லப் பட்டதுடன் ஏழு முஸ்லிம்கள் கடத்தப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்களை அடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும் பதற்றம் நிலவுகிறது. முஸ்லிம் பகுதிக்கு ஊடாக தமிழர்களும், தமிழ்ப் பகுதிக்கு ஊடாக முஸ்லிம்களும் பிரயாணம் செய்வதும் தடைப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் அப்பகுதியில் அமைதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

• • • • •

கொழும்பில் குண்டு வெடிக்க வைக்க மட்டக்களப்பில் இருந்து இரண்டு தற்கொலைப் போராளிகள் தலைநகருக்குள் வந்திருப்பதாக புலனாய்வு பகுதியினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து கடந்த சனிக்கிழமை முதல் ரெட் அலேர்ட் என அழைக்கப்படும் அதி உசார் நிலைமையில் படையினர் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

தற்கொலைப் படையினர் பஜிரோ ஜீப், டபிள் கப் போன்ற விலை உயர்ந்த வாகனங்களில் பிரயாணம் செய்வதாக தகவல்கள் கிடைத்துள்ளன. அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் இவ்வாறான வாகனங்களிலே பிரயாணம் செய்வது வழக்கம். இந்த வாகனங்களை படையினர் சோதனையிடுவதில்லை. சோதனைச் சாவடியில் இவை நிறுத்தப்படுவதும் தவிர்க்கப்பட்டுள்ளது. இந்த சலுகையை பயன்படுத்தியே தற்கொலைப் படையினர் இந்தத் தகவல்களைப் பயன்படுத்தி வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளனவாம். பஜிரோ, டபிள் கப் வாகனங்களை இனிமேல் விடாமல் வழி மறித்து சோதனையிடுமாறு படையினருக்கு பாதுகாப்பு அமைச்சு உத்தரவு பிறப்பித்துள்ளது.


சுவிசில்:

*தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்தியகுழு உறுப்பினர்*

**லெப். கேணல் பொன்னம்மான், மேஜர் கேடில்ஸ் மற்றும் கப்டன் வாசு, லெப். சித்தார்த்தன், 2 லெப். பரன், தேவன், யோகேஸ், கவர், அக்பர், குமணன்**

*ஆகிய பத்து வீர வேங்கைகளின்*

**10வது ஆண்டு நினைவு வணக்கம்**

**14.02.1987 – 14.02.1997**

**காலம்:** 16.02.97 ஞாயிறு
**இடம்:** Mappamondo
Lang Gasse-44, 3012 Bern, Swiss
**நேரம்:** பி.ப. 4 மணிக்கு

**ORIENT TEXTILIEN & SCHMUCK**

*KOENIGSWALL 16 (AM FBF), 44137 DORTMUND - TEL: 0231-162377 - FAX: 49-231-147836*

* ஜேர்மனியில் தங்க நகைகளின் தரத்திற்கும், தேர்விற்கும் தனிச் சிறப்பு பெற்ற ஸ்தாபனம் சிங்கப்பூர் விலையில் S D 146,
* ஆடைகளின் நிரந்தர மலிவு விலைகள்: பனாறிஸ் சாறி 79; மைசூர் சில்க் 85; பட்டபிளை சாறி 25; குப்தா சாறி DM25; பஞ்சாபி DM 26; பட்டுவேட்டி DM 35, * கன, தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள், * புத்தம் புதிய டிசைன்களில் அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய ஆபரண செட் ab DM 119, * உங்கள் பழைய பவுணிற்கு குறைந்த கூலியில் உடனடியாகவே புதிய நகைகள் மாற்றிப் பெறுவதற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்! உரிமையாளர்: ச.ஜெகதீஸ்

தரம்! உத்தரவாதம்!! அதிக தேர்வு!!! மலிவு!!!!

தரமான பொருட்களை தரமற்ற பொருட்களுடன் ஒப்பிடாதீர்கள்

## உள்ளதைக் கொஞ்சம் ஒழுங்காக் கதைப்பம்

ஸ்ரீலங்காவின்ர 49வது சுதந்திர தினத்தில.. தமிழ் மக்கள் சுதந்திரமாக நடமாடேலாமல் போச்சுது. கொழும்பிலும் சரி.. பிற சிங்களப் பகுதிகளிலும் சரி.. தமிழ் மக்கள் வீடுகளைப் பூட்டிப்போட்டு உள்ளுக்கைதான் இருந்தவை. ம்.. அவையளின்ர சுதந்திரதினத்தில தாங்கள் என்னத்துக்கு தலையைக்காட்ட வேணும். சரி.. அது இருக்கட்டும். உந்தச் சிங்களப் பிள்ளையளும் தங்கட சுதந்திரதினத்தை பயந்து பயந்துதான் கொண்டாடினவை. றோட்

இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில.. 49வது சுதந்திரதினத்தில இலங்கைத் தீவில நடந்திருக்கு. அப்ப.. இது வரலாறு இல்லாமல் வேறென்ன.

அது சரி.. அதென்ன இருந்தாப்போல... மேற்கு முன்னமா படைநகர்வு எண்டது எல்லாருக்கும் கொஞ்சம் குழப்பமாய்தான் இருக்குது. வவுனியாவில் இருந்து கிளிநொச்சிவரை முன்னேறி.. அப்பிடியே தரைவழிப் பாதையொண்டைத் திறக்கிறதுதான் அரசாங்கத்தின்ர இலக்காம்... கேள்விப்பட்டிருப்பியள். இந்த

மெய்ப்படுமோ..?

இதுதான் அரசாங்கத்தின்ர பிளான் எண்டு இராணுவ விசயம் தெரிஞ்சவை சொல்லுகினம். ஆனால் போன இராணு

## சடையர்

வத்தை எதிர்கொள்ளவோ... தடுத்துநிறுத்தவோ புலியள் முனையவில்லை எண்டது அரசாங்கத்துக்கு ஏமாற்றம். தீண்டு வாரத்து.. காடுகளை ஊடறுத்துச் செல்லுற நெடுஞ்சாலை வழியாக சென்ற இராணுவம்.. இடையில போய் நிக்கினம். திலையளைப் பலப்படுத்துகினமாம்.

துடைச்செறிந்த பொடியள்... வவுனியாவில இருந்து வெளிக்கிட்டு.. பல கிலோமீற்றர் முன்னேறி. துணைக்கு ஆளில்லாத காட்டுப் பகுதியில பலப்படுத்தி இருக்கிறம் எண்டால் விடுவாங்களோ...? தேர்தலுக்கு முன்னம் 'பெட்டியெண்ண' வேண்டிவரும். அப்ப இப்பிடிச் சொல்லுறது சரியா வராது.

பொதுவாக இப்பிடித்தான் சொல்லுகினம். இவ்வளவு அடியளுக்கும் பிராயச்சித்தமா.. இப்பிடி ஒரு சாகசத்தை செய்து காட்டவேணும் எண்டது அம்மையாற்ற துடிப்பு. அப்பிடியெண்டால்தான் தேர்தலை வெல்ல முடியும் எண்ட கணிப்பு. அதாவது கிளிநொச்சிவரையான தரைவழிப்பாதையைத் துறக்கிற இராணுவ நட

# சுதந்திர தினம் எண்டால்.. கொடியேத்தி... தேசிய கீதம்பாடுறது!

டுக்களை மூடி... சந்தியள் பொந்துகளில ஆமிபொலிசைக் குவிச்சு.. மண்மூட்டை அடுக்கி மறைஞ்சு குறிபார்த்து.. ம்.. படு விமரிசையாய் சுதந்திரதினம் கொண்டாடியிருக்கினம். பலத்த பாதுகாப்புக்கு மத்தியில நாட்டின் தலைவி சுதந்திரதின சொற்பொழிவு வழங்கியிருக்கிறா. அது சரி. என்ன சுதந்திரம் எண்டு கேக்கிறியள்.. அப்பிடித்தானே? உண்மையில விளங்குதில்லைத்தான். வெள்ளைக்காரன் நாட்டைவிட்டு நாற்பத்தெட்டில் போனதென்னவோ உண்மைதான்.. ஆனால் காசுகடன்.. எண்டு இவை கையேந்திக்கொண்டு இங்கை அங்கை போறதும்.. அவங்கள் கைகாட்டிச் சொல்லுறதை இவை தலையாட்டிக் கேட்கிறதும் தொடருது... அப்ப என்ன சுதந்திரதினம்..? ம்.. ஒருவேளை.. இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்ளுறதும்.. பிறகு எல்லாரும் எழுந்துநிற்க தேசியகீதம் இசைக்கிறதும் நடத்துற நாளாயிருக்குமோ...?

மற்றது, சிங்கள தேசம் சுதந்திரதினம் கொண்டாடிக் கொண்டிருக்கேக்க.. தமிழ் தேசத்தின் மீது பாரிய இராணுவ நடவடிக்கையை அம்மையார் ஏவிவிட்டதிருக்கே.. உண்மையில வரலாறு! அரைநூற்றாண்டை அடைஞ்சபோதும்.. தமிழன் அகதிதான்.. அடிமைதான்... எண்டதை இராணுவ நடவடிக்கையை ஏவிவிட்டு சொல்லாமல் சொன்ன வித்தகிதான் சந்திரிகா அம்மையார். தமிழருக்கும் சேர்த்துத்தான் 48 இல சுதந்திரம் கிடைச்சதெண்டு எந்தப் புத்திகெட்டதும் கனவிலதன்னும் புரட்டக்கூடாது எண்டுதான் அம்மையார் இப்பிடிச் சொல்லுறா.

அங்கால.. சுதந்திரதினத்துக்கு பட்டாசுகள் கொழுத்தி புதுசுகள் உடுத்தி ஊர்வலம் போய்.. சந்தோசம் கொண்டாடினவையோ தெரியேல்ல.. ஆனால்.. வவுனியாவில ஒரே முழக்கம். பீரங்கியள் உமிழ்ந்துதள்ள.. விமானங்கள் சுழண்டு சுழண்டு குண்டுகளைக் கொட்ட.. ராட்சத டாங்கிகள் தமிழரின்ர வீடுகள் வாசல்கள் நிலபுலன்களை உடைச்சுச்சிதைத்து நசுக்கிக்கசக்கி உழுதுகொண்டு.. போச்சுதுகள். தமிழன் உடுத்த கத்துடன்... கைக்கெட்டிய பொருளுடன்.. சின்னஞ்சிறுசுகளை இழுத்துக்கொண்டும் தூக்கிக்கொண்டும் உயிர்காக்க ஓடிய கொடுமை.

இலக்க இலகுவாக்கத்தான் இந்த நடவடிக்கை எண்டு விசயம் தெரிஞ்சவை பறையினம்.

அது என்ன மாதிரியெண்டால்.. உந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடக்கிறதுக்கிடையில ஒரு இராணுவ வெற்றியொண்டு தேவைப்படுகுதெல்லே.. அதுக்குத்தான் கொஞ்சம் அந்தரப்படுகினம். கிளிநொச்சி நோக்கிப் போறதெண்டால்.. சும்மா லேசான விளையாட்டில்லை எண்டது விளங்குது. ஆனால்.. போகவும் வேணும் எண்டால் என்ன செய்யிறது. மன்னார் பக்கமாக வெளிக்கிட்டால்.. புலியள் பெருமளவில வந்து மோதுவினம்... பெரிசா சண்டை நடக்கும். பெரியளவில

> அங்கால... சுதந்திரதினத்துக்கு பட்டாசுகள் கொழுத்தி புதுசுகள் உடுத்தி ஊர்வலம் போய்... சந்தோசம் கொண்டாடினவையோ தெரியேல்ல... ஆனால்... வவுனியாவில ஒரே முழக்கம். பீரங்கியள் உமிழ்ந்துதள்ள... விமானங்கள் சுழண்டுசுழண்டு குண்டுகளைக் கொட்ட... ராட்சத டாங்கிகள் தமிழரின்ர வீடுகள் வாசல்கள் நிலபுலன்களை உடைச்சுச் சிதைச்சு நசுக்கிக் கசக்கி உழுதுகொண்டு... போச்சுதுகள்.

புலிகள் அழிவினம். எக்கச்சக்கமான புலியள் காயப்படுவினம். புலியளின்ர ஆயுதபலமும் எக்கச்சக்கமாய் குறையும். இனி காயப்பட்ட பெருந்தொகைப் புலியளுக்கு மருந்தில்லாமல்.. திண்டாடுவினம். இப்பிடி ஒரு பெரிய நெருக்கடிக்குள்ள புலியள் இருக்கேக்க.. புதுசாய் தயாராக நிற்கிற பெரும் இராணுவப்படையணியள்.. கிளிநொச்சியில இருந்தும்.. வவுனியாவில இருந்தும் சும்மா பாடிக்கொண்டு வெளிக்கிட்டு இடையில சந்திப்பினம். அரசாங்கத்தின்ரையும் இராணுவத்தின்ரையும்... அண்மைக்காலக் கனவான தரைவழிப் பாதை.. கோலாகலமாகத் திறக்கப்படும். ஜனாதிபதித் தேர்தலில.. அறுபத்தி மூன்று வீத வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியான அம்மையார் பாட்டி... இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில எண்பது தொண்ணூறுவீத வாக்குகளைப் பெற்று பெரு வெற்றியடையும். என்ன.. கனவு

இன்னொரு பாட்டி சொல்லுது.. மன்னாருக்கு தரைவழிப்பாதையொண்டைத் திறந்துபோட்டு.. புத்தளம் சிலாபத்தில இருக்கிற முஸ்லீம் மக்களை கொண்டு வந்து குடியேத்தப்போகினமாம். ஏனெண்டால்.. நீர் கொழும்பு சிலாபப் பகுதிகளில.. சிங்களவரை அமத்திக் கொண்டு முஸ்லீம்கள் முன்னுக்கு வந்துகொண்டிருக்கினமாம். அப்பிடியே இடத்தைக் கைப்பற்றிப் போடுவினமோ எண்ட அச்சம் சிங்களப்பகுதியில நிலவிறதால..இந்த ஏற்பாடெண்டு ஒரு பாட்டி சொல்லுது. நீர் கொழும்பில் நடக்கிற அடிபாடுகளைப் பார்த்தால் ஒரு வேளை உண்மையாகவும் இருக்கக்கூடும்.

எலெக்சன் ரைம்.. கிளிநொச்சி நோக்கிப் போனால் பயங்கரமாக வாங்கிக் கட்ட வேணும். முல்லைத்தீவு பரந்தன் தோல்வியை மறைக்க ஏதாவது செய்யவும் வேணும். எண்டு யோசிச்சுப் போட்டுத்தான்.. பிரச்சினையில்லாத இந்தப்பக்கத்தால வெளிக்கிட்டவை. இது ஒரு தேர்தல் யுக்தி எண்டு இன்னொரு பாட்டி சொல்லுது. ஆனால்.. இது அவ்வளவு சரி மாதிரித் தெரியேல்ல. பொடியளின்ர இப்பத்தை அடிபாட்டு யுக்தி என்னண்டா... ஆர்ப்பாட்டமாக ஆய்.. ஊய்.. எண்டு எடுப்போட இடறிக் கொண்டு வாறவரை இடைஞ்சல் பண்ணாமல் விட்டிட்டு.. குந்தியிருக்கேக்கதானே.. குடல் தெறிக்க ஓட வைக்கிற அளவுக்கு குடுக்கிறது.

ஆனையிறவும் கிளிநொச்சியும் பக்கத்தில பயங்கரமாய் வீற்றிருக்க, எலிப் போல இடைக்குள்ள புகுந்து பரந்தனைத்

வடிக்கைக்கு துணைசேர்க்கிற வகையில நடத்தப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கை பிசுபிசுத்துப் போச்சுதெண்டுதான் பொதுவாக இராணுவ விசயம் தெரிஞ்சவை சொல்லுறது.

அதுசரி.. ஆமிக்காரன் ஒவ்வொருக்காலும் முன்னேறேக்க.. புலியள் கெட்டித்தனமாக சண்டைபிடிக்காமல் விட்டிட்டினம்.. அப்பிடி இப்பிடி எண்டு நியாயப்படுத்துகினமல்லாது.. அவங்களை இரண்டில் ஒண்டு பார்க்கவேணாமோ..? அப்பிடியெண்டு ஒண்டு இரண்டுபேர் முணுமுணுக்கத்தான் செய்வினம்.. அவையளுக்காக.. இது.

'போராட்ட சூழலில் சில சந்தர்ப்பங்களில் கெரில்லா அணியை வளைத்துப்பிடித்து.. அவர்களை பலவந்தமாக ஒரு சண்டைக்கு இழுத்து அழிப்பதையே கடைசி மார்க்கமாக எதிரி கடைப்பிடிக்க முனையலாம். அநுகூலமற்றதும் ஆபத்தானதுமான இந்தப் பொறியில் சிக்காமல் இருப்பதற்கு ஓடித்தப்புவதே ஒரே வழியாகும்.'

இது.. கியூபா புரட்சியின் முன்னோடி தலைவர்களில ஒருவரான செகுவேரா சொன்னது. ம்.. சில சனத்துக்கு.. அவர் சொன்னார்... இவர் சொன்னார்.. எண்டாத்தானே ஏறுது.

என்ன.. இப்ப சந்தோசம்தானே..?

ஒண்டை வடிவாக விளங்கிக்கொள்ள வேணும். எங்கட பிள்ளையளுக்கு.. இராணுவப்படை நகர்வை தடுத்து நிறுத்துகிற பணியிலும் பார்க்க.. எங்கட நாட்டை விடுவிக்கிற... விடுதலையைப் பெற்றுக் கொடுக்கிற பெரும் பணியிருக்குது.

## ஓர் அலசல்

கடந்தவாரம் இந்தப் பகுதியில சின்னத் தவறு நடந்திருக்கு... கண்டுபிடிச்சிருப்பியள். அப்பிடியெண்டால் கெட்டிக்காரர். ஆரம்பத்தில குறிப்பிட்ட பாட்டு.. சினிமாப்பாடல் இல்ல... கவிஞர் காசி ஆனந்தன் எழுதின புரட்சிப்பாட்டெண்டு கண்டுபிடிச்சாக்களுக்கு கெட்டிக்காரரெண்டு பட்டம் குடுக்கலாம். கண்டுபிடிக்காத ஆக்களை... சேச்...சே... ஏதோ கவனிக்காமல் விட்டிட்டினம்.

லாச்சப்பலில்... உங்களின் தேவைக்காக எங்களின் சேவையினை ஆரம்பித்துள்ளோம்

நியூ சப்பல் ஸ்ரோர்ஸ்

"மளிகைப் பொருட்களின் மாளிகை"

உங்களுக்குத் தேவையான மளிகைப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள இன்றே விரையுங்கள்.

NEW CHAPELLE STORES

214, RUE DU Fbg. St. DENIS, 75010 PARIS - TEL: 01 40 36 20 35 / FAX: 01 40 36 20 36

# 09-10 ஜனவரி 1997 ஆனையிறவு, பரந்தன் இராணுவ முகாங்கள் மீதான தாக்குதலில் வீரமரணத்தை தழுவிய மாவீரர்களில் கிடைக்கப்பெற்ற பெயர் விபரங்கள்

01. கப்டன் அமரவதி
பாலசிங்கம் சுசிலா
குச்சவெளி, திருமலை

02. வீரவேங்கை குமுதினி
பேதுருப்பிள்ளை
மரியக்கொறட்டி சுகந்தி
மணற்காடு, குடத்தனை.

03. 2ம்-லெப். கடலோசை
பெரியசாமி விக்னேஸ்வரி
திரியாய், திருமலை
த.மு: மூங்கிலாறு,
உடையார்கட்டு.

04. வீரவேங்கை இளவேங்கை
ஜெகராஜா வசந்ததேவி - வசந்தி
குருநகர், கொழும்புத்துறை

05. கப்ரன் மலர்வதனா
குகநாதன் சுமித்திராதேவி
கொக்குத்தொடுவாய்.
பூம்புகார் அரியாலை.

06. வீரவேங்கை ஞானரூபி
செல்வரட்ன்ம் விஜயமதி (விஜி)
தம்பாட்டி, நாவற்குழி

07. 2ம் லெப்-வர்ணா
சிவபாக்கியம் சின்னையா - செல்வம்
வெற்றிலைக்கேணி
நாகர்கோயில்

08. லெப்- அமிர்தகலா
ஜேசுராசா லட்சுமின் ஜெயந்தா
ஊர்காவற்றுறை
த.மு. நாவற்குழி

09. கப்டன் நாவலன்
செல்வரட்னம் ஆனந்தராஜா
பெரியவிளான், இளவாலை

10. லெப். விமல் (அறிவு)
தர்மசேனன் தர்மராஜா
மூதூர், திருமலை

11. கப்டன். பன்னீர்செல்வம் - (செல்வன்)
முத்துலிங்கம் ஞானமூர்த்தி
ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு
(மணலாறு)

12. 2ம் லெப். அறிவுச்செல்வி
(அருச்செல்வி)
சுப்பிரமணியம் வசந்தி
தம்பன்கேணி,
மட்டக்களப்பு

13. வீரவேங்கை மதுராங்கனி
ராசு வசந்தகுமாரி (சூரி)
தம்பளை கிழக்கு,
கற்கோவளம்

14. வீரவேங்கை மாதங்கி
பாலசிங்கம் றோகினி
காங்கேசன்துறை
த.மு: மீசாலை

15. லெப்- கார்த்திகா
இரத்தினம் வதனா
பத்தைமேனி
புன்னாலைக்கட்டுவன்

16. லெப் நித்தியகலா
சுந்தரலிங்கம் சிவந்தினி
அச்சுவேலி,
த.மு: கற்சிலைமடு

17. கப்டன் சரதா
பொன்னுத்துரை ராஜேஸ்வரி (செல்வி)
பெரியமடு, மன்னார்

18. கப்டன் சுமித்ரா- செந்தாமரை
சுப்ரமணியம் பரமேஸ்வரி
செல்வபுரம், முல்லைத்தீவு

19. மேஜர் நித்திலா (உஷா)
செல்வநாயகம் துஷ்யந்தி
உரும்பிராய்
த.மு: 10ஆம் வீடமைப்புத்திட்டம்
இல: 3 இராசநாயகபுரம்,
ஓமந்தை.

20. லெப். அருள்
திருநாவுக்கரசு குமுதினி
புங்குடுதீவு

21. 2ம் லெப். ஈழச்செல்வி
தெய்வேந்திரம் தர்மவதி
கொக்குவில்,
யாழ்ப்பாணம்

22. லெப். கம்பதாசன்
பழனித்தம்பி தங்கவேல்
யானைக்கட்டியாவெளி, மண்டூர்
மட்டக்களப்பு

23. 2ம் லெப். எழில்குமணன்
கணேசராஜா விமலன்
உறியங்கட்டு, வாகரை,
மட்டக்களப்பு.

24. கப்டன் வைரமுத்து
இளையவன் ரவிச்சந்திரன்
மந்துவில் வடக்கு,
கொடிகாமம்

25. லெப். மகேசன்
வீரையா ஜெயரூபன்
4வது பிரிவு, ஒட்டிசுட்டான்,
முல்லைத்தீவு

26. 2ம் லெப். அரசதுரை
ஆனந்தம் ராமச்சந்திரன்
மகிலங்காடு நாவற்காடு,
மட்டக்களப்பு

27. 2ம் லெப். இராஜபாரதி
மாணிக்கப்பொடி சௌந்தராஜா
நெல்லிக்காடு, ஆயித்தியமலை
செங்கலடி,
மட்டக்களப்பு

28. லெப். செல்வம்
கறுப்பையா மோகன்
வேப்பங்குளம் சந்தி
ஓமந்தை,
வவுனியா

29. 2ம் லெப். கண்ணழகன் (கிருஷ்ணன்)
பழனியாண்டி மாரிமுத்து
கண்டி.
த.மு.: பூவரசு
2ஆம் பிரிவு யோகபுரம்,
மல்லாவி

30. லெப். வாசுகி
சின்னராஜா இருதயராணி
வசாவிளான்
த.மு.: மாங்குளம், பள்ளிக்கூடம்

31. லெப். தாரகை (ராதா)
சிறீதரன் கௌசல்யா
மத்திய கைதடி

32. 2ம் லெப். மோனா (மேனகை)
பொன்னம்பலம் காந்தரூபி
மாந்துவில்

33. கப்டன் குழலி
கந்தசாமி கவிதா
மானிப்பாய்

34. லெப். கலை
செல்வராசா நாகேஸ்வரி
சங்கத்தானை, சாவகச்சேரி

35. 2ம் லெப். புலி
காந்திநாதன் சுகிர்தா
திருமலை (த.மு.: புதுக்குடியிருப்பு)

36. 2ம் லெப். கோணேஸ்
ஆனந்தன் அகிலா
பாரதிபுரம் மேற்கு
அக்கரையான்குளம்

## மரண அறிவித்தல்



**கந்தையா பொன்னம்மா**

**மறைவு**
**30-01-97**

யாழ்ப்பாணம் அன்னசத்திர வீதியைச் சேர்ந்தவரும் இந்தியாவில் திருச்சி மாவட்டத்தில் வசித்தவருமான கந்தையா பொன்னம்மா (பொன்னார்) அவர்கள் 30.01.1997-இல் காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், கனகம்மா (கனடா), நடராசா (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவபாலன் (அண்ணாச்சி - ஜேர்மனி), காசிநாதன் (ஜேர்மனி), கமலநாதன், கலாசேகரன், மஞ்சுளாதேவி (ஜேர்மனி), சுந்தர் (சுவிஸ்), குலசேகரன் (இலங்கை), கமலாதேவி (திருச்சி) ஆகியோரின் அன்புத்தாயும், மகேந்திரன் (திருச்சி), புஸ்பராசா (ஜேர்மனி), வசந்தி (சுவிஸ்), இந்திராதேவி (ஜேர்மனி), கமலாவதி (ஜேர்மனி), சரோஜா (இலங்கை) ஆகியோரின் மாமியும் நளாயினி, வணா, காயத்திரி, கோபி, கார்த்தீபன், சுபாசினி, நிரோஷன், ஜனனி, கிரிசாந், வைஷ்ணவி, செந்தூரன், சிந்து, துவாரகா, நிஷா, நிஷாந்தன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: **சிவபாலன் (அண்ணாச்சி)** K.SIVAPALAN
HERMAN JOSEF Str-134, 52511 GEILENKIRCHEN, W.GERMANY (Tel: 02 451 3381)


லெப். கேணல் பொன்னம்மான் மற்றும் அவருடன் வீரச்சாவைத் தழுவிய 10 போராளிகளின்

**10வது வருட நினைவு**

**வெற்றிக்கிண்ணம்**

நடைபெற இருக்கும் விளையாட்டுக்கள்:

★ பூப்பந்தாட்டம் (ஆண், பெண்)
★ மேசைப்பந்தட்டம் (ஆண், பெண்)
★ கரப்பந்தாட்டம் (ஓவர், செற்றப்)

**காலம்: 16-02-1997**
**நேரம்: காலை 9.00 மணி**

**இடம்:** Centre Sportif des Poissonniers
2, Rue Jean Cocteau, 75018 Paris.
(Metro: Porte de Clignancourt)

மேலதிக தொடர்புகட்கு: 43 58 11 42



**மொழிபெயர்ப்புச் சேவை**

* உங்கள் அனைத்து மொழிபெயர்ப்புகளுக்கும், (கடிதத் தொடர்புகள் 1 பக்கம் மொழிபெயர்க்க - 60Frs.)
* தொலைநகல் (Fax) சேவைக்கும் (35Frs வெளிநாடுகளுக்கு)
* கறுப்பு வெள்ளை / வர்ண Photo Copie எடுக்கவும்

எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்

*Copies la Chapelle*
32, Rue Philippe de Girard, 75010 Paris. Tel: & Fax: 42 09 60 94

# புளொட், ரெலோ குழுக்களால் பிடிக்கப்பட்டவர்களும் காணாமல் போயுள்ளனர்

## ஆணைக்குழு முன் சாட்சியம்

மூன்று பிள்ளைகளின் தந்தையான எனது கணவரை இராணுவத்துடன் இணைந்து செயற்படும் புளொட் மோகன் என்பவர் 12.03.91-ல் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு அருகில்வைத்து பிடித்துச் சென்றார். ஆனால் இன்றுவரை அவருக்கு என்ன நடந்ததென தெரியவில்லை என மட்டக்களப்பு செங்கலடியைச் சேர்ந்த சுரேஸ் குமார் அமுதேஸ்வரி (30) என்ற இளம்குடும்பப் பெண், காணாமல் போவோர், கடத்தப்பட்டோர் பற்றி விசாரணை மேற்கொண்டுவரும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு முன் சாட்சியமளித்த போது தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புளொட் மோகனிடம் அன்று என் கணவர்பற்றி விசாரித்தேன். இராணுவ முகாமில் ஒப்படைக்கப் பட்டிருப்பதாகவும், விசாரித்து வருவதாகவும் சொன்னார். அதன் பின்னர் தற்போது அவர் இராணுவத்தின் பாதுகாப்பில் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

உறுகாமத்தைச் சேர்ந்த சரவணமுத்து விநாயகம் (53) என்பவர் விசாரணைக்குழு முன் சாட்சியமளிக்கும் போது 93ம் ஆண்டு எனது கிராமத்தைச் சுற்றிவளைத்த தும்பாலைச்சோலை இராணுவத்தினர் எனது மகன் பத்மராசாவை கைது செய்து சென்றார்கள். பின்னர் 5ம் நாள் அவர் விடுதலையாகி வெளியே வந்தபோது இராணுவ முகாம் வாசலில் வைத்து ரெலோவைச் சேர்ந்த நெடியகுமார் என்பவர் எனதுமகனை கடத்திச்சென்றார். எனது மகனைப் பற்றி இதுவரை எதுவுமே தெரியாது எனவும், அவர் தனது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார்.

திருமதி தங்கம்மா என்பவர் தனது சாட்சியத்தில் எனது கணவர் பாக்கியராசாவை 93ம் ஆண்டு ரெலோ இயக்கத்தினர் கடத்திச் சென்றனர். அவர்களில் செல்வரத்தினம், ரவி, மோகன் என்பவர்களையும் எனக்குத் தெரியும். இன்றுவரை எனது கணவருக்கு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# மாவடிவேம்பு காட்டுக்குள் படையினரின் சடலங்கள்

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதான வீதியில் உள்ள மாவடிவேம்பு இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப் பட்டதைத் தொடர்ந்து அங்கு காணாமல் போன படையினரில் மூவரின் சடலங்கள் மாவடிவேம்பு காட்டுப் பகுதிக்குள் கண்டெடுக்கப் பட்டிருப்பதாக தெரிய வருகிறது.

மாவடிவேம்புக்கு மேற்குப் பக்கமாக உள்ள பிரப்பம் காட்டுக்குள் இருந்து மேற்படி சடலங்கள் மீட்கப்பட்டதாக தெரிய வருகிறது. இதேவேளை இந்த இராணுவ முகாம் தாக்குதலில் காயமடைந்திருந்தவர்களில் இருவர் பின்னர் இறந்து விட்டதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

தற்போது மீண்டும் மாவடிவேம்பு பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் அண்மையிலுள்ள மக்கள் குடியிருப்புக்களை நோக்கி தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களை மேற்கொள்வதாகத் தெரியவருகின்றது.

# பஸ்சில் ஆசனம் கிடைக்காததால் பிக்குமார் மறியல் போராட்டம்

புத்தளம் பகுதியைச் சேர்ந்த பல பிக்குமார் கடந்த புதன்கிழமை 05.02.97 அன்று வீதி மறியல் போராட்டம் ஒன்றை நடத்தியதால் தனியார் போக்குவரத்துச் சேவைகள் அனைத்தும் ஸ்தம்பிதமடைந்ததாகக் கூறப்படுகிறது.

புத்தளத்திலிருந்து கொழும்பு சென்ற கடுகதி பஸ் ஒன்றில் முன் ஆசனம் தமக்கு வழங்கப் படவில்லை என்பதனாலேயே பிக்குமார் மறியல் போராட்டத்தில் குதித்ததாக தெரியவருகிறது.

ஆனால் குறிப்பிட்ட ஆசனங்கள் ஏற்கனவே பதிவு செய்யப் பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. இச் சம்பவத்தின் போது பஸ் நடத்துனருக்கும் பிக்குவுக்கும் இடையே நீண்ட நேரம் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. தற்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.


இவ்வாரம்: ஜேர்மனியில்

கேசவராஜனின்

**திசைகள் வெளிக்கும்**

இது ஒரு புதிய புறநானூறு! தலைவரின் தொலைதூரப் பார்வை! மதிநுட்ப வழிகாட்டல்!
யுத்த ஆய்வாளர்களின் வியப்புக்குறி!
சந்திரிகா அரசின் ஆயுதக் கையளிப்பு!

**முல்லைச் சமர்**

காலம்: 15.02.97 சனி
காலை 9.30 மணிக்கும்
பி.ப. 1.00 மணிக்கும்

இடம்: Friedrich-Kayser-Schule
Eintracht Str.10
58239 Schwerte


# புலிகள் என நினைத்து இராணுவத்தின் மீது துப்பாக்கி பிரயோகம்

சுங்குடாப் பகுதியிலிருந்து பிரதான வீதி வழியாக வாழைச்சேனையை நோக்கி வந்த இராணுவத்தினர் மீது கடந்த வியாழக்கிழமை 06.02.97 அன்று பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக தெரியவருகிறது.

மீன்பிடித்துறைமுக பொலிஸ் காவல்நிலையத்தில் நின்றிருந்த பொலிசார், இராணுவத்தினரை புலிகள் என நினைத்து துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தாக தெரியவருகிறது. இதன் போது இராணுவத்தினர் கூக்குரலிட்டு தம்மை அடையாளப் படுத்தியதைத் தொடர்ந்து பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதை நிறுத்தியுள்ளனர்.

இத் துப்பாக்கிப் பிரயோகத்தால் இராணுவத்தினருக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.




# வஞ்சக நெருப்பில் துணிச்சலோடு நடை போடுவேன் என்னை அரசியலை விட்டு விரட்ட சதி செய்கிறார்கள் - ஜெயலலிதா அறிக்கை

அரசியலை விட்டு என்னை விரட்ட சதி செய்கிறார்கள். வஞ்சக நெருப்பில் துணிச்சலோடு நடைபோட்டுவருகிறேன் என்று ஜெயலலிதா அறிக்கை விடுத்துள்ளார்.

முன்னாள் முதல்வரும் அ.தி.மு.க பொதுச் செயலாளருமான ஜெயலலிதா விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

என் மீது கருணாநிதியும் அவரைச் சார்ந்தவர்களும் செய்த விஷமப் பிரச்சாரம் புதுக் கோட்டை இடைத் தேர்தலில் முடிவுக்கு வந்துவிட்ட நிலையில் மிகவும் புண்பட்டுப்போன என் இதயத்திலிருந்து சில கருத்துக்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

நான் பொதுச் செயலாளராக இருக்கும் அ.தி.மு.க. தான் கருணாநிதியை தேர்தல் களத்தில் அடித்து வீழ்த்தும் வன்மையோடும் ஆற்றலோடும் விளங்குகிறது.

## சோதனை, வேதனை

எம்.ஜி.ஆர். கண்ட இந்த இயக்கத்தை கடந்த பொதுத் தேர்தல் தோல்விக்குப் பிறகு உடைத்துத் தகர்க்க கருணாநிதி முயற்சி செய்தார். எங்களிடமிருந்து சில பேரை தெருவில் கொண்டுபோய் விட்டு போட்டி என்று புலம்பச் சொன்னார். தொண்டர்கள் இல்லாத இவர்கள் இன்றைக்கும் புதுக் கோட்டையில் காசு பணத்தை விசிறியடித்து கருணாநிதியை வெற்றி பெறவைக்க, எங்களுக்குக் கிடைக்கும் வாக்குகளை பிரிக்க உங்களிடம் ஓடி வருகிறார்கள். கருணாநிதியின் தயவைப் பெற வரிந்து கட்டிக்கொண்டு நிற்கிறார்கள்.

எம்.ஜி.ஆர். கண்ட இயக்கத்திலிருந்து யாரையும் பிரித்து விடுவதால் என்னிடம் இருந்து இயக்கத்தையும் தொண்டர்களையும் அகற்றி விட முடியாது என்பதை உணர்ந்த கருணாநிதி என்னை தனிப்பட்ட முறையில் அவமானப்படுத்தி அழித்து விடுவதால் எம்.ஜி.ஆர் இயக்கம் வீழ்ந்து விடும் என்று எண்ணி எனக்குச் சோதனைகளையும் வேதனைகளையும் தொடர்ந்து கொடுத்துவருகிறார்.



"நான் அரசியல் எதிரி என்பதை புரிந்து கொண்டு தனிப்பட்ட முறையில் என்னிடம் விரோதம் கொண்டு நிற்கும் கருணாநிதியின் கையில் மாநில அரசின் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இருக்கிறது.

என்னை எதிரியாகக் கருதிக் கொண்டு பழிவாங்கத் துடிக்கும் மத்திய நிதி அமைச்சர் சிதம்பரத்தின் கையில் வருமான வரித்துறை இருக்கிறது.

என்னை அழித்தொழிக்க ஆவேசம் கொண்டு நிற்கும் மத்திய அமைச்சர் எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் கையில் சி.பி.ஐ. இருக்கிறது.

என்னை அரசியலில் இருந்து அகற்ற இந்த மூவரும் ஒன்று சேர்ந்து சூழ்ச்சி செய்கிறார்கள், சதி செய்கிறார்கள். எட்டுமாத காலமாக தமிழ் நாட்டில் இது தான் நடைபெறுகிறது.

என் வாழ்வில் என்றுமே சந்தித்திராத வஞ்சக நெருப்பில் துணிச்சலோடு நடை போட்டு வருகிறேன்.

இவர்களை எல்லாம் எதிர்த்து நெஞ்சுரத்தோடு நான் போராடிவரும் நிலையில்தான் என் உடல் நலம் குறைந்து மருத்துவ மனையில் இருக்கிறேன்.

## மனக் குமுறல்

மருத்துவமனையில் இருப்பதால் உங்களை நேரில் சந்தித்து இங்குள்ள குமுறலை வெளியிடவும் வாய்ப்பில்லாமல் போய் விட்டது.

தட்டிக்கேட்க ஆள் இல்லையென்ற அகம்பாவக்காரர்களுக்கு மக்கள் சரியான புத்தி புகட்ட வேண்டுகிறேன்.

நான் மட்டும் பங்களாவில் இருப்பது போலவும் இவர்களெல்லாம் ஏதோ சிறு குடிசைக்குள் இருந்து கொண்டு அரசியல் நடத்துவது போலவும் நாட்டை ஏமாற்றும் மோசடித்தனத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுகிறேன். இன்றைய சூழ் நிலையில் எனக்குப் பாதுகாப்பளிக்க தமிழ் மக்களாகிய உங்களைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்?

எம்.ஜி.ஆர் கண்ட இயக்கத்தைக் காக்க உங்கள் அனைவருடைய ஆதரவையும் வேண்டி நிற்கிறேன்.

என் மீது பரப்பப்படும் அவதூற்றுப் பிரச்சாரத்தை நம்பி ஆட்சியாளர்கள் இருக்கிறார்கள். நான் மக்களாகிய உங்களை நம்பியிருக்கிறேன்.

இவ்வாறு ஜெயலலிதா அறிக்கையில் கூறியுள்ளார்.

# தினசரி மிரட்டல் விடுப்பதை நிறுத்துங்கள்

### காங்கிரசுக்கு ஐக்கிய முன்னணி எச்சரிக்கை

தேவகவுடா அரசுக்கு தினசரி மிரட்டல் விடுப்பதை நிறுத்த வேண்டும். இல்லையென்றால் மீண்டும் தேர்தலை சந்திக்க வேண்டியிருக்கும் என்பதை காங்கிரசிடம் வலியுறுத்த ஐக்கிய முன்னணி முடிவு செய்து உள்ளது.

சீதாராம் கேசரி காங்கிரஸ் தலைவரான பிறகு, ஐக்கிய முன்னணி அரசின் ஒவ்வொரு நடவடிக்கையும் கடுமையாக விமர்சிககப்பட்டது. காங்கிரஸ் தலைவர்களுக்கு எதிராக சி.பி.ஐ. அமுலாக்கப்பிரிவு ஆகிய துறைகள் நடவடிக்கை எடுத்தபோது தேவகவுடா அரசுக்கு அளித்து வரும் ஆதரவு விலக்கிக கொள்ளப்படும என்று காங்கிரஸ் தரப்பில் மிரட்டல் விடப்பட்டு வந்தது.

காங்கிரஸ் தலைவர்களின் இந்த மிரட்டல் ஐக்கிய முன்னணி தலைவர்களின் பொறுமையைச் சோதித்துள்ளது. வருகிற 9-ம் திகதி நடைபெறவுள்ள ஐக்கிய முன்னணி வழிகாட்டும் குழு கூடுகிறது. அப்போது காங்கிரஸ் தலைவர்களின் மிரட்டலுக்கு தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும் என்று ஐக்கிய முன்னணித் தலைவர்கள் முடிவு செய்துள்ளனர்

## தேவகவுடா அரசின் செல்வாக்கு

தேவகவுடாவுக்கு அளித்துவரும் ஆதரவை விலக்கிக்கொள்வோம் என்ற காங்கிரசின் தினசரி மிரட்டல் ஐக்கிய முன்னணி தலைவர்கள் இடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. மக்களிடம் தேவகவுடா அரசுக்கு இருக்கும் செல்வாக்கு குறைந்து வருவதாக அவர்கள் கருதுகின்றனர். இந்த மிரட்டல் தொடருமானால் ஐக்கிய முன்னணி அரசு ஆட்சியிலிருந்து விலக தயாராக இருக்கும் என்று இக்கூட்டத்தில் காங்கிரசுக்கு உணர்த்தப்படும்.

இதனால் வெகு விரைவில் பாராளுமன்றத்துக்கு தேர்தல் நடத்த வேண்டிய சூழ்நிலை வரும். காங்கிரஸ் தலைவர்கள் தற்போது உள்ள நிலையில் தேர்தலைச் சந்திக்க விரும்பவில்லை. எனவே ஆட்சியை விட்டு விலகினால் காங்கிரசுக்குத்தான் கூடுதல் இழப்பு என்று ஐக்கிய முன்னணித் தலைவர்கள் கருதுகின்றனர்.

மேலும் ஐக்கிய முன்னணி அரசுக்கு நிபந்தனைகளில் அடிப்படையில் ஆதரவு அளிக்க காங்கிரஸ் விரும்பினால் அதை ஏற்றுக் கொள்ள தயார் என்றும் வழி காட்டுக் குழு கூட்டத்தின் முடிவில் அறிவிக்கப்படும்.

காங்கிரஸ் - ஐக்கிய முன்னணி இடையிலான கருத்து வேறுபாடுகளை நீக்க இரு கட்சிகளின் ஒருங்கிணைப்புக் குழு அமைக்கவும் வழிகாட்டும் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடப்படும்.

## எம் அவலத்தை எடுத்துரைப்போம் வாருங்கள்

**ஐ.நா.வை நோக்கிய மாபெரும் பேரணியில்**

**பிரான்ஸ் வாழ் தமிழீழ மக்களே உங்கள் கரங்களையும் இணையுங்கள்**

**காலம்: 17.03.97 திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு**

**ஜெனிவா புகையிரத நிலையத்திலிருந்து ஆரம்பித்து ஐ.நா. சபை வரை அமைதிப் பேரணி நடைபெறும்**

குறிப்பு: பிரான்சில் இருந்து எம் மக்கள் கலந்து கொள்வதற்காக விசேட போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு: 01 43 58 11 42

வருகிறது Ramiy இசைத்தட்டுக்களில் பாடல்கள்
கதிரவன் பிக்சர்ஸ்
வழங்கும்
ஜீவன்
S.V. சுதன்ராஜா

சிந்தனைச் சிற்பிகளே தயாராகுங்கள்
ஜீவன் திரைப்படக் குழுவினர் நடாத்தும்
சிறுகதை - கவிதை கட்டுரைப் போட்டிகள்
ஆக்கங்கள் சமகாலப் பார்வை கொண்டதாக இருக்க வேண்டுகிறோம்.
ஆக்கங்கள் வந்துசேர வேண்டிய கடைதித் திகதி: 28.02.97
ஆக்கங்கள் ஜீவன் திரைப்படத்தின் சிறப்பிதழில் பிரசுரிக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும்
19, Rue Mathieu, 93400 Saint Ouen, France.
S.Sutharsan Tel: 01 40 12 75 44

# மீண்டும் சீக்கியர் கைகளில் வரவுள்ள பஞ்சாப்

இந்தியாவின் வட பகுதியில் பஞ்சாப் இருந்தாலும் சரித்திரத்தில் திருப்பு முனையை ஏற்படுத்தத் தவறியதில்லை. இதற்கான ஆதாரங்களை வரலாற்றில் பார்க்க முடிகிறது.

ஜாலியன் வாலாபாக் சம்பவம் இந்திய சுதந்திர போராட்டத்தின் முக்கிய மைல்கல்லாகும். அமிர்த சரஸ்பொற்கோவிலில் இந்திராகாந்தி எடுத்த நீல நட்சத்திர நடவடிக்கையும் சரித்திரத்தை மாற்றி அமைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல்நாள் பஞ்சாப் மாநிலம் உருவானது அங்கு காங்கிரசும் அகாலித்தளமும் மாறி மாறி ஆட்சிக்கு வந்துள்ளன. 1967-ல் காங்கிரசில் விரிசல் ஏற்பட்டது. இதைப் பயன்படுத்தி காங்கிரசை அகாலித்தளம் வீழ்த்தியது. 1971-ம் ஆண்டு வரை அகாலிதளம் ஆட்சி நடத்தியது. பாரதிய ஜனதாவிற்கு முன்னோடிக் கட்சியான ஜன சங்கமும் அகாலித்தளத்தில் தோழமைக் கட்சியாக இருந்தது.



1971-ல் காங்கிரஸ் ஆட்சியைப் பிடித்தது. ஜெயில்சிங் முதல்வர் ஆனார். 1977-ல் அகாலித்தளம் ஆட்சிக்கு வந்தது. பாரதிய ஜனதா தலைவர்களும் அங்கம் வகித்த ஜனதாவும் அகாலி தளத்திற்கு தோழமைக்கட்சியாக செயற்பட்டது. 1980-ல் காங்கிரஸ் மறுபடியும் ஆட்சியைக் கைப்பற்றியது. 1985-ல் அகாலித்தளம் ஆட்சிக்கு வந்தது.

1992-ம் ஆண்டு நடை பெற்ற பொதுத் தேர்தலில் காங்கிரஸ் அமோக வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. அத் தேர்தலை பாதல் தலைமையிலான அகாலித்தளம் புறக்கணித்ததால்தான் காங்கிரஸ் அமோக வெற்றி பெற்றது என்பது கூர்ந்த கவனத்துக்குரிய தாகும். 1992-ல் நடை பெற்ற தேர்தலே கேலிக்கூத்தானதென்று கூறப்படுகிறது.

## தேர்தல் கண்ணோட்டம்

அம்ரீந்தர்சிங் இரண்டு தொகுதிகளில் போட்டியிட்டார். ஒரு காங்கிரஸ் வேட்பாளர் விலக்கிக் கொள்ளப்பட்டதால் அம்ரீந்தர்சிங் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார். மற்றொரு தொகுதியில் சொற்ப வோட்டுகள் மட்டுமே பெற்ற அவர் டெபாசிட் தொகையைப் பறி கொடுத்தார்.

பொதுவாக அகாலித்தளம் என்றவுடனேயே நினைவுக்கு வருவது பிரகாஷ்சிங் பாதல் தலைமையிலான சிரோமணி அகாலிதளம்தான். தமிழக முன்னாள் கவர்னர் சுர்ஜித்சிங் பர்னாலாவும் பாதலுக்கு பக்கபலமாக இருந்து வருகிறார்.

சீக்கிய விடுதலை இயக்கங்கள் குழுக்களாக சிதறுண்டு கிடக்கின்றனர். இதில் மூன்று குழுக்கள் முக்கியமானவை ஆகும். சிம்ரஞ்சித்சிங்மான் தலைமையிலான அமிர்த சரஸ் அகாலிதளம், ஜஸ்பீர்சிங் ரோடு தலைமையிலான பேந்திக் அகாலி தளம், குல்தீப் சிங் வாடாலா தலைமையிலான வாடாலா அகாலிதளம் ஆகியவற்றுக்கு முன்பு போல் செல்வாக்கு இல்லை.

கடந்த ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் பஞ்சாபில் அதிக தொகுதிகளை சிரோமணி அகாலி தளமே கைப்பற்றியது. சிரோமணி குருத்வாரா பிரபந்த கமிட்டி தேர்தல் 17 ஆண்டுகளுக்கு பிறகு கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்றது.

பிரபந்த கமிட்டியில் உள்ள மொத்த இடங்கள் 170. இதில் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டவை 30 இடங்கள்.

170 இடங்களில் 158 இடங்களை பாதலின் ஆதரவாளர்களே கைப்பற்றி உள்ளனர். பாதல் முதல்வராவது உறுதி என்பதற்கு இது சுபசகுனம் ஆகும். பஞ்சாப் சட்டசபை தேர்தலில் வெற்றி பெறுவது சிரோமணி அகாலிதளம், பாரதீய ஜனதா கூட்டணியே என்பது உறுதியாகிவிட்டது.

பஞ்சாப் சட்டசபைக்கு இம் மாதம் 7-ம் திகதி தேர்தல் நடைபெறுகிறது. 117 தொகுதிகளைக் கைப்பற்ற சுமார் 700 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

மாநிலத்தில் நான்கு முனைப் போட்டி நிலவுகிறது. பிரகாஷ் சிங் பாதல் தலைமையிலான அகாலிதளமும் பாரதீய ஜனதாவும் கூட்டணி அமைத்துள்ளன. காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுகிறது. கன்சிராமின் பகுஜன் சமாஜ கட்சியும் சிம்ரஞ்சித் சிங்மானின் அமிர்தசரஸ் அகாலி தளமும் கூட்டணி வைத்துள்ளன. ஜனதா தளம்



மற்றும் கம்யூனிஸ்டு கட்சிகள் மற்றொரு அணியாக தேர்தல் களத்தைச் சந்திக்கின்றனர்.

மதவாதத்தையும், ஊழலையும் வீழ்த்த ஜனதாதள கூட்டணியை ஆதரிக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்டு பொதுச் செயலாளர் ஹர்கிஷன் சிங் சுர்ஜித் வேண்டுகோள் விடுத்து உள்ளார். கம்யூனிஸ்டு கட்சிகளுக்கு பஞ்சாபில் பெரும் செல்வாக்கு இருப்பதாக தெரியவில்லை. எனவே சுர்ஜித் விடுத்துள்ள கோரிக்கைக்குப் பரவலான ஆதரவு கிட்டுவதற்கான வாய்ப்பு சொற்பமே.

பிரகாஷ்சிங் பாதல் தேர்ந்த நிர்வாகி. பழுத்த அரசியல் சாணக்கியர். மக்கள் மத்தியில் செல்வாக்கு மிக்க தலைவர். அவருக்கு இணையாக காங்கிரசிலோ அல்லது ஜனதா தளத்திலோ தலைவர் இல்லை என்பதை நடுநிலையாளர்கள் ஒட்டுமொத்தமாக ஒப்புக்கொள்ளுகின்றனர்.

69 வயதான பாதல் 17 ஆண்டு காலம் சிறைவாசம் அனுபவித்துள்ளார். பஞ்சாப் முதல்வராக இருந்தபோது சாதனைகள் படைத்து முத்திரை பதித்துள்ளார்.

லூதியானா நகரில் சமீபத்தில் 3 கூட்டங்கள் நடைபெற்றன. இக்கூட்டங்களை மேற்கோள்காட்டி மக்கள் ஆதரவை அரசியல் விமர்சகர்கள் நிர்ணயம் செய்து உள்ளனர். சிரோமணி அகாலிதளம் - பாரதீய ஜனதா கூட்டணி சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் உரையாற்றினார். அக்கூட்டத்துக்கு ஒன்றே முக்கால் இலட்சம் பேர் திரண்டு வந்திருந்தனர்.

பகுஜன் சமாஜ் கட்சி கூட்டத்தில் கலந்துகொண்டோரின் எண்ணிக்கை 60 ஆயிரம் மட்டுமே.

காங்கிரஸ் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை கால் இலட்சத்துக்கும் குறைவே.

7-ம் திகதி நடைபெறும் பஞ்சாப் சட்டசபைத் தேர்தல், தேசிய அரசியலிலும் திருப்புமுனையை ஏற்படுத்தும் சாத்தியம் உள்ளது.

பாரதீய ஜனதாவுடன் சிரோமணி அகாலிதளம் கூட்டுவைத்துக்கொண்டு உள்ளதால், இந்துக்களின் ஓட்டும் இந்த அணிக்கு கிடைக்கும் என்பது சாத்தியமான அம்சம் ஆகும்.

பஞ்சாபில் மூன்று மண்டலங்கள் உள்ளன. தோபா மண்டலத்தில் 25 தொகுதிகளும் மஜ்கா மண்டலத்தில் 27 தொகுதிகளும் மால்வா மண்டலத்தில் 65 தொகுதிகளும் உள்ளன. மொத்தத்தில் 117 தொகுதிகளில் சுமார் 100 தொகுதிகளை சிரோமணி அகாலிதளம்; பாரதீய ஜனதா கூட்டணி கைப்பற்றும் என்று கருத்துக் கணிப்புகள் புலப்படுத்தியுள்ளன. பகுஜன் சமாஜ் கட்சி சிம்ரஞ்சித் சிங் மானின் அமிர்சரஸ் அகாலிதளம் கூட்டணி இரண்டாவது இடத்தைக் கைப்பற்றும் என்று தெரிகிறது. காங்கிரஸ் படுதோல்வி அடையும் என்று தெரியவந்துள்ளது.



முதல்வர் ராஜேந்திரகவுரின் செயல்பாட்டுக்கு காங்கிரசிலேயே கடும் எதிர்ப்பு எழுந்துள்ளதும் இதற்கு முக்கிய காரணம் ஆகும்.

சிரோமணி அகாலிதளம் பாரதீய ஜனதாக் கூட்டணி மாநில அரசியலுக்கு மட்டுமல்ல, தேசிய அரசியலுக்கும் ஏற்புடையதே என்று இரு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் குறிப்பிட்டுள்ளது வருங்கால செயல்பாட்டுக்கு கட்டியம் கூறும் வகையில் அமைந்துள்ளது.

**இக் கட்டுரை அச்சுக்குப் போகும் நேரத்தில் கிடைத்த முடிவுகளின் படி,**

| | |
|---|---|
| அகாலிதளம் | 75 இடங்களையும் |
| பாரதிய ஜனதா | 18 இடங்களையும் |
| இந்திரா காங்கிரஸ் | 16 இடங்களையும் |
| மான்சிங் கட்சி | 01 இடத்தையும் |

**பிடித்துள்ளன என தெரியவந்துள்ளது.**


# A.S.C.E.S

7 வருட காலமாக தமிழ் மக்கள் கல்வி பயின்றுவரும்
A.S.C.E.S-இன் பிறிதொரு கிளை **பாரதி நுண்கலைக் கல்லூரி**
Rg N° 92977

**பாரதி நுண்கலைக் கல்லூரி**
Eglise Sainte- Helene, 6, Rue Esclangon - 75018 Paris
Métro: Porte de Clignancourt

**08.02.97** மாலை 2.00 மணிக்கு புதிய பிரெஞ்சு வகுப்பு
**08.02.97** மாலை 2.00 மணிக்கு நடன வகுப்பு
**08.02.97** மாலை 2.00 மணிக்கு சிறுவர்களுக்கான தமிழ் பிரெஞ்சு, ஆங்கில வகுப்பு
**08.02.97** மாலை 3.00 - 6.00 மணிக்கு 6eme - Bac maths, chemistry.

**திங்கள் மாலை 5.00 மணிக்கு பிரெஞ்சு வகுப்பு நடைபெறுகிறது.**

இடம்: La Maison verte, 127 Rue Marcadet, 75018 Paris
Metro: Joules Joffrin / Marcadet Poissoniers
Bus: 31,60,80, 85 - தரிப்பிடம்: Mairie 18.

41, Rue Didot, 75014 Paris. Métro: Pernety - Tel: 01 42 57 23 56

**01.02.97** மாலை 1.30 பிரெஞ்சு, பேச்சு, பயிற்சி வகுப்பு
**05.01.97** பி.ப. 1.00 மணிக்கு பிரெஞ்சு வகுப்பு ஆரம்பமாகியுள்ளது.
**01.02.97** மாலை 1.30 மணிக்கு புதியநடன வகுப்பு
**01.02.97** மாலை 2.00 மணிக்கு வயலின், கிற்றார் மாலை 3.00 மணிக்கு சங்கீத வகுப்பு
**01.02.97** மாலை 1.30 மணிக்கு Organ Keyboard வகுப்பு
**02.12.97** மாலை 2.00 மணிக்கு மிருதங்க/ வயலின் வகுப்பு
**01.02.97** மாலை 1.30 மணிக்கு சிறுவர் தமிழ், ஆங்கில, பிரெஞ்சு, Computer வகுப்பு
**01.02.97** மாலை 3.30 மணிக்கு தையல் வகுப்பு
**02.02.97** மாலை 2.30 மணிக்கு கேக் அலங்கார வகுப்பு
**02.02.97** காலை 10.30 மணிக்கும், மாலை 2.00 மணிக்கும் Computer வகுப்பு.
**02.02.97** மாலை 1.30 - 3.30 ஆங்கில வகுப்பு

# பௌத்த சிங்கள இனவாதத்தின் தோற்றம்

## பகுதி II

### 3

# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

ஆங்கிலேயர் முதலில் கண்டிக்கு மேலேயுள்ள நுவரெலியா, உடப்புசல்லாவ, தலவாகெலை ஹற்றன் பகுதிகளிலுள்ள பெருங் காடுகளை அழித்தே தமது பாரிய தேயிலைத் தோட்டங்களை நிர்மாணித்தனர். இப் பாரிய நிலப்பரப்பு முன்பு கண்டிய மன்னனுக்கு மட்டுமே சொந்தமாக இருந்தது. ஆனால் மன்னனோ; அவனது பிரதானிகளோ இந்த நிலத்தை தங்களது உபயோகத்துக்குப் பயன்படுத்தியதே கிடையாது. அவர்களது காலடிகள் கூட இந்த நிலத்தில் பட்டிருக்க முடியாத அளவுக்கு அப்பிரதேசம் பாதைகளற்ற அடர்ந்த காடாக இருந்தது.

ஆங்கிலேயர்கள், தமிழ்த் தொழிலாளர்களைக் கொண்டு இந்தக் காடுகளை அழித்து தேயிலைத் தோட்டங்களை உருவாக்கிய அதேநேரம், கொழும்புடன் இப்பகுதிகளைத் தொடர்புபடுத்துவதற்கான நெடுஞ்சாலைகளையும், புகையிரதப் பாதைகளையும் கூட அமைத்தனர். புகையிரதப் பாதைகளை அமைப்பதற்கு கேரளாவிலிருந்த மலையாளத் தொழிலாளர்களையும், தமிழகத் தொழிலாளர்களை அழைத்து வந்தது போல் அழைத்து வந்திருந்தனர்.

மலையகத்திலுள்ள புகையிரதப் பாதையில் இருக்கும் ஒவ்வொரு சிலிப்பர் கட்டையும் ஒவ்வொரு இந்தியத் தொழிலாளியின் உயிர் என்று சொல்லுமளவுக்கு இந்தப் பாதைகளை அமைப்பதில் அதிக கஷ்டங்களையும், உயிரிழப்புக்களையும் இந்தியத் தொழிலாளர்கள் சந்தித்திருந்தனர்.

மலையகத்தில் பயிரிடப்பட்ட ஒவ்வொரு தேயிலைச் செடியும், ஒவ்வொரு தொழிலாளியின், உடலை உரமாகக் கொண்டு வளர்ந்தது என சொல்லுமளவுக்கு தமிழகத் தொழிலாளர்கள் தங்கள் உயிரைக் கொடுத்து அந்தத் தேயிலைத் தோட்டங்களை உருவாக்கினர்.

முதற் கட்டமாகச் செய்யப்பட்ட தேயிலைச் செய்கை பாரிய வெற்றியளித்து அதிக இலாபத்தை ஈட்டித்தந்ததால், அதை அடுத்த கட்டத்துக்கு இன்னும் பெரிதாக விஸ்தரிக்கத் திட்டமிடப்பட்டது.

அதே நேரம் அந்தக் காலகட்டத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட அபரிதமான கைத்தொழில் வளர்ச்சியானது இறப்பரின் தேவையை முதன்மைப்படுத்தியிருந்தது. ஏற்கனவே கண்டிப் பகுதியில் பரீட்சார்த்தமான முறையில் செய்து பார்க்கப்பட்ட இறப்பர் மரநடுகை வெற்றியளித்ததால் தேயிலையைப் போல் இறப்பர் தோட்டங்களையும் பாரிய அளவில் நிர்மாணிக்க ஆங்கிலேயர்கள் திட்டமிட்டனர்.

ஏற்கனவே மலை முகடுகளிலிருந்த காடுகளை அழித்ததால், மழைவீழ்ச்சிக்குறைவு, மண்ணரிப்பு, மண்சரிவு முதலான இயற்கைப் பாதிப்புக்கள் ஏற்படத் தொடங்கியிருந்தன. இதனால் இரண்டாம் கட்ட பெருந்தோட்ட விஸ்தரிப்புக்கு காடுகளை அழிப்பதை விடுத்து 1840 இல் கொண்டுவரப்பட்ட தரிசு நிலச் சட்டத்தின் மூலம் கண்டிய விவசாயிகளிடமிருந்து பறித் தெடுக்கப்பட்ட நிலங்களை ஆங்கிலேயர்கள் பயன்படுத்திக் கொண்டனர்.

> **கண்டிய சிங்கள நிலப்பிரபுக்கள், வெள்ளை எசமானர்களிடம் கைக்கூலி பெற்றுக் கொண்டு அப்பாவி சிங்கள விவசாயிகளினது நிலங்களை பறித்தெடுக்க உதவிய துரோகத்தனம் இன்று மறைக்கப்படுகிறது. இவர்கள், படிப்பறிவில்லாத சிங்கள விவசாயிகளை ஏமாற்றியும், பயமுறுத்தியும், ஒரு ஏக்கர் நிலத்தை 50 சதத்திற்கு வெள்ளைத்துரைமாருக்கு வாங்கிக் கொடுத்துள்ளனர்.**

Tamileelam Archive

இன்று கண்டிய விவசாயிகளின் நிலங்கள் பறிபோவதற்கு அப்பாவி மலையகத் தோட்டத் தொழிலாளர்களே காரணம் எனக்கூச்சல் போடும் பௌத்த சிங்கள இனவாதிகள், தங்களது முன்னோர்களான கண்டிய சிங்கள நிலப்பிரபுக்கள் சிலரும், அதற்குக் காரணமாக இருந்திருக்கிறார்கள் என்பதை வெளியில் சொல்வதேயில்லை.

கண்டிய சிங்கள நிலப்பிரபுக்கள், வெள்ளை எசமானர்களிடம் கைக்கூலி பெற்றுக் கொண்டு அப்பாவி சிங்கள விவசாயிகளினது நிலங்களை பறித்தெடுக்க உதவிய துரோகத்தனம் இன்று மறைக்கப்படுகிறது. இந்த நிலப்பிரபுக்கள், படிப்பறிவில்லாத சிங்கள விவசாயிகளை ஏமாற்றியும், பயமுறுத்தியும், ஒரு ஏக்கர் நிலத்தை 50 சதத்திற்கு வெள்ளைத்துரைமாருக்கு வாங்கிக் கொடுத்துள்ளனர்.

கண்டிய விவசாயிகளின் நிலங்களைப் பறிக்கும் வேலையை நடைமுறைப்படுத்திய பிரித்தானிய கவனர் கிளிபோட், "கிராமவாசிகளிடமிருந்து சரியான உறுதிகளற்ற நிலங்களை வாங்கும் வேலை அநேகமாக, அவர்களுடைய நாட்டவர்களால்தான் செய்யப்பட்டது" என்று தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றைவிட 1856-ல் கொண்டுவரப்பட்ட 10 இலக்க கோவில் நிலப்பதிவுச் சட்டத்தின் கீழும், கண்டிய விவசாயிகளின் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. கண்டியிலிருந்த பௌத்தர்களின் புனித தலமான தலதாமாளிகைக்கும், ஏனைய பிற பௌத்த விகாரைகளுக்கும், பெருமளவு விவசாய நிலங்கள் சொந்தமாக இருந்தன. இந்த நிலங்களை சிங்கள விவசாயிகள் குத்தகை அடிப்படையில் எடுத்து விவசாயம் செய்து வந்தனர்.

1840-ல் தரிசு நிலச் சட்டங் கொண்டு வரப்பட்டபோது, இந்த நிலங்களை தரிசு நிலங்களாகக் கணக்கிட்டு ஆங்கிலேயர்களால் கைப்பற்ற முடியவில்லை. இந்த நிலங்களின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு பௌத்த விகாரைகளுக்கு கண்டிய மன்னர்கள் வழங்கிய சாசனங்கள் இருந்தன.

ஆனால் 1856-ல் கோவில் நிலப்பதிவுச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது, கோவில் நிலங்கள் அரசுக்குச் சொந்தமாகின. அந்த நிலத்தில் விவசாயம் செய்து வந்த விவசாயிகள்,



வெறும் வாய்மொழி மூலம் உத்தரவாதத்தின் அடிப்படையிலேயே பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்துவந்தனர். அவர்களிடம் தங்களது குத்தகை உரிமையை நிரூபிக்க எந்த ஆவணமும் இருக்கவில்லை. இதை கண்டிய நிலப்பிரபுக்கள் மூலம் நன்கு தெரிந்து கொண்ட ஆங்கிலேயர்கள், ஒரே ஒரு சட்டத்தின் மூலம் அவர்களை சுலபமாக அவர்கள் விவசாய நிலங்களிலிருந்து வெளியேற்றி விட்டனர்.

இவ்வாறு வெளியேற்றப்பட்ட சிங்கள விவசாயிகள் ஆங்கிலேய ஆட்சிமீதும், அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் கரையோரச் சிங்களவர்கள் மீதும், தீராத வெறுப்புக் கொண்டனர். அக்கால கட்டத்தில் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் வாழ்வைக் கெடுத்துவிட்டதாக அவர்கள் நினைக்கவில்லை. அதற்குக் காரணம் ஆங்கிலேய எசமான்களின் கீழ் கூலிகளாக வேலைசெய்ய அவர்கள் விரும்பாததேயாகும்.

ஆங்கிலேய நிர்வாகமும், அவர்கள் எப்போதும் தமக்கு ஆபத்தானவர்கள் எனக் கருதி, அவர்களை மேலும் நசுக்கி அழிப்பதற்காக 1888-ம் ஆண்டு தானிய வரிச்சட்டம் ஒன்றைக் கொண்டுவந்தது.

கண்டியிலிருந்து வெளியேறிகீழ் பிரதேசங்களிலுள்ள நிலப்பிரபுக்களின் நிலங்களில் குத்தகைக்கு விவசாயம் செய்துவந்த விவசாயிகளுக்கு இந்தவரி ஒரு மரண வரியாகவே இருந்தது. ஆங்கிலேயரின் அனுசரணை பெற்ற சிங்கள நிலப்பிரபுக்கள் தங்கள் நிலத்தில் விளையும் விளைச்சலுக்கு தாங்கள் செலுத்த வேண்டிய வரியை, குத்தகைக்கு விவசாயம் செய்த விவசாயிகள் மீதே சுமத்தினர். இதனால் குத்தகைக்கும், தானியவரிக்கும் நிலத்தில் விளைந்த விளைச்சல் சரியாகப் போய் விட அவர் பட்டினி கிடக்க வேண்டி ஏற்பட்டது.

தோட்டத் தொழிலாளர்களின் வருகையோடு, இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்திருந்த, வட்டித் தொழில் செய்யும் மார்வாடிகள், மற்றும் வியாபாரிகள், அந்த விவசாயிகளின் அற்ப சொற்ப சொத்துக்களையும் வட்டிக்குப் பணம் கொடுத்தும், அறாவிலைக்கு உணவுப் பொருட்களைக் கொடுத்தும், கைப்பற்றிக் கொண்டுவிட இயல்பாகவே அங்கு இந்திய எதிர்ப்புணர்வு அவர்களிடம் உருவாகியது.

இந்தக் காலகட்டத்தில் கரையோரச் சிங்களப் பகுதிகளில் சாராயத் தவறணைகளை இலங்கையர்களுக்கு குத்தகைக்கு விடும் முறையை ஆங்கிலேயர்கள் அமுல் படுத்தினர். கிராமங்கள், நகரங்கள், தோறும் திறக்கப்பட்ட சாராயம் மற்றும் கள்ளுத் தவறணைகளை கிறிஸ்தவ மதத்திற்கு மதம் மாறிய கரையோரச் சிங்களவர்கள் பலர் குத்தகைக்கு எடுத்ததன் மூலம் புதுப் பணக்காரர்கள் ஆகினார்கள்.

தீவிர பௌத்த மதக் கோட்பாட்டாளர்களுக்கு கிறிஸ்தவ மதப் பரப்பல், கிறிஸ்தவப் பாடசாலைகள் என்பன ஏற்படுத்திய தாக்கத்தை விட சாராயம் மற்றும் கள்ளு வியாபாரம் 'பௌத்த சங்கத்தின்' ஒழுக்கத்தை சீர்குலைக்கும் விடயமாக இருந்ததால், அவர்கள் முதலில் அதற்கெதிராக மது ஒழிப்பு இயக்கம் ஒன்றை ஆரம்பித்தனர்.

இந்த மது ஒழிப்பு இயக்கம் தமது ஆட்சியின் நலனுக்கு எதிரான அரசியல் அம்சத்தை உள்ளடக்கியிருப்பதாகக் கருதிய ஆங்கிலேயர்கள், தமது கைக்கூலிகளை அதற்குள் ஊடுருவ விட்டு அதை பௌத்த இனவாத 'இயக்கமாக மாற்ற முயற்சித்தனர். அதாவது மத ஒழிப்பு இயக்கம், வளர்ச்சியடைந்து பாரிய அரசியல் இயக்கமாக மாறும் போது, இலங்கையில் இருந்த எல்லா இனப்பிரிவுகளையும் சேர்ந்த மது ஒழிப்பு இயக்கங்களை ஒன்று படுத்தி விடுவதோடு இந்தியாவில் ஏற்கனவே உருவாகி இருந்த இந்துத்துவ மது ஒழிப்பு இயக்கங்களோடு, அவை தொடர்பு கொண்டு தமது எல்லையை விரிவுபடுத்திவிடும் என்று அவர்கள் அஞ்சினார்கள்.

**- நக்கீரன்**

## சிறுகதை

# வெண்பனிச் சதுப்பு

### ப.வி.சிறீரங்கன்



காலை மணி ஏழு.

கதிரவன் கன் கசக்கி மேலெழ

வெண்பனிச் சதுப்பாய் மாறிய இடமெல்லாம்...,

சற்று திராவக நிலையெய்தி விரிந்தன.

எனினும்,

'கதிரவன்' மீண்டும் துயில்வதற்கேற்றவாறு முகில்கள் போர்வையிட்டன.

வானத்திலிருந்து குண்டு, குண்டாய் பனிக்கட்டிகள் கீழ் நோக்கி வீழ்ந்தன; அவற்றுள் பல சாளரத்துக் குந்துகளில் பட்டுத் தெறித்துப் பறந்தன.

அவை முத்துக்கள் சிதறுவது போன்றிருந்தன.

துரியோதனன் மனைவியின் இடுப்பிலிருந்து தெறித்தோடிய முத்துக்கள் போல- அவை தெறித்துச் சிதறின. "எடுக்கவா, கோர்க்கவா" என்ற நிலையில் இப்போது துரியோதனர்களில்லை.

கர்ணர்கள் "செஞ்சோற்றுக் கடன்களை" மறந்ததனால்.

குமரேசன் மடிதனில் எதிர்காலம் தூக்கத்தில் ஆழ்ந்திருக்க அவன், பனிக்கட்டிகளின் பரவசப்படுத்தல்களை இரசிப்பதற்கான நிலையிலில்லை

இது- வெண்பனிச்சதுப்பு.

வெளியில் மட்டுமல்ல அகத்திலும் உறைபனி.

ஒரு, மூலையிலிருந்து, தனக்காய் உலகைச் சுட்டிக் கொண்டாள் தேவ்கி. அவள் கூட்டத்தின் குரலில் அவளுக்கு நம்பிக்கையில்லை.

"தேவகி செல்வாவைப் பிடியும்"

தன்னிருப்பைச் சுற்றி இன்னொரு மனிதக் குரல்.

இது- 'வெண் சதுப்பில் வீழ்ந்த, உயிர் விதை' -குமரேசன்.

மௌனத்தின் பிடியில் தேவகி, விழிகள் பனிக்க

"உலகை எமக்காகவும், எம் வீடாகவும் நீ பாராதே!

உனக்கும்- எனக்கும், எத்தனையோ சூழ்ச்சிகள்;

நீ, நானாய் மாறினால் நான், நீயாய் இரேன்!!"

புதிய உலகு 'தேவகிக்குள்' ஊகமாய் விரிந்தது.

இப்போது- மங்கலாய்த் தோன்றும் கனவுகளுள் பரிச்சயமின்மை நாப்பிழக்கத் தாண்டவமாய் நர்த்தனம் புரிய, ஈரலிப்பற்ற சோகச் சுவடாய்...

உணர்வலைகள் 'இந்த' உயிர் விதைக்குள்.

தான் தோன்றித் தனங்களிலேயே ஊறிய- ஒரு வித மனித அலைகளுள், இதுவும் ஒரு சிறு அலையே!

பச்சை மட்டையும் அதன் கருக்கும், முள்ளுக் கம்பியும், முருக்கந்தடியும் இவ்வலையை தீண்டிய போதெல்லாம் வான் பிழக்கக் கூவப்படும் மனிதம், இரத்தம் சொட்டச் சொட்டக் குற்றுயிராய் உயிர்ப்பிச்சை கேட்டதாக ஒரு பிரமையில்...

"தேவகி"

இன்று, நேற்றல்ல. இற்றைக்கு சுமார் பதினைந்தாண்டுகளாகத் தெரியும். யாழ் பல்கலைக்கழக வளாகத்தின் வயற் பரப்புகளில் பாதம் பாப்பித் திரிந்த காலங்களும், இறுதியில் இந்திய மண்ணில்... கருபியில் கால் பதிக்க முடியாத பாம்புப் பரப்புகளில் ஒன்றாய்த் திரிந்து வாழ்ந்து, சுதந்திரம், ஐக்கியம், விடுதலை என்று காவித்திரிந்த காலங்கள்....

கழகம், கால்வாரிய பின் அவளைத் தோளில் சுமந்து சென்று காடு விலகிய காலங்கள்.... உணவுக்காய் பாம்பு சுட்டுத் தின்று, உயிர் வாழ்ந்து... இறுதியில் இடம் பெயர்ந்து

யாரோ புண்ணியத்தால் பிளேன் ஏறி ஜேர்மனி வந்து அகதிகளாகி...

நினைவலைகள் நெஞ்சை முட்டிச் சோகத்தை அறுவடை செய்ய, குமரேசன் விழிகள் கலக்கமுற்று மடிதனை விழிக்க, எதிர்காலம் தூக்கத்திலிருந்து மீள்வதற்குத் தயாராகி புரண்டு, கருண்டது.

பத்தோடு, பதினொன்றாக முடியவில்லை. எனினும், வான்கிழித்து வெளிச்சம் குடித்த மகிழ்வு அவன், உடலெங்கும் சிதறிஓடியது.

மீண்டும் கரம் பிடிப்போம்.

கரங்கோர்த்தல் எதிர் காலத்தின் தேவைக்கே!

எம்மை நம்பித் 'தன்' மகிழ்வுக்கு எம்மோடு கொஞ்சித் திரியும் எங்கள் செல்வாவுக்காக.

"படிதாண்டல்?"

இஃது- விருப்புக்கும் வெறுப்புக்கும் அப்பாற்பட்டவொரு மனிதவுணர்வுக்குள்ளிருந்து, தோண்டியெடுக்கப்பட்ட வடு?

இதிலிருந்து ஒரு சொட்டு மனிதம் பீறியெழுந்தாலும் அஃது, கணப்பொழுதில் அழுகி நாறிய கதையாய் தொடரும்.

"என் இள வயது முதல் இன்று வரையும் ஒரு பெண்ணையும் தொடயில்லைத் தேவகியக்கா;

நாட்டிற்காக எவ்வளவோ கஷ்டப்பட்டேன். ஆனால், பெண்சுகம் தெரியாமல் சாகப் போகிறேன்"

"ஏன்டா செல்வா... நீ, இஞ்சயொருத்தியைப் பார்த்துக் கல்யாணஞ் செய்யேன்"

"அக்கோய், இது சரிப்பட்டுவராது"

"ஏன்?"

"வேலை வெட்டி, விசா ஒண்டும் இல்லையே!"

"என்ன செய்வதாய் உத்தேசம்?" குமரேசன் கேள்வியோடு செல்வாவைப் பார்த்தான்.

"பேசாமல் தற்கொலை செய்யப் போகிறேன்"

"ஒரு, யதார்த்தவாதி இப்படிக் கோழையாகப் பேசுவது மடமை." - தேவகி சொல்ல குமரேசன் மலங்கழிக்கச் சென்றான்.

"தேவகியக்கா! நீங்க சொல்லுறது சரி" எனக்கு வேறு வழி தெரியுதில்லை;

போராட்டம் போச்சு; நாடு போச்சு; வாழ்வு போச்சு. இனியென்ன வேண்டிக்கிடக்கு? வயது 33,... இதற்கு மேலும் பெண் கிடைக்குமோ??

பாவத்திற்கு அஞ்சி 'ஏதோ' ஆடினால் குலத்திற்குக் குற்றம் என்பார்கள்.

தேவகியின் தோளில் செல்வன் முகம் புதைத்தழ அவள்:

"இண்டைக்கு வேலாம் வேறொரு நாளைக்குப் பார்ப்பம்" என்றாள், கூடவே, "அவர் நிக்கிறார் பிறகு பாப்பம்" என்றாள்.

பின்பு, இதுவே தொடர் கதையாய்...

"ஐக்கியம்"

"இது, ரொம்ப முக்கியம் தமிழ் மக்களுக்கு!"

"ஐக்கிய இலங்கைக்குள் தாம் எமக்குத் தீர்வுண்டு, ஈழத்திற்குள் இல்லை" இப்போது, குமரேசன் மீண்டும் இவர்களுள்; செல்வன் தொடர்ந்தான்.

"இரண்டினமும் ஒன்றாய் இருப்பது தாம் வலிமை; ஒன்றாய் / ஒரே கூரையின் கீழ் வாழ்தல் தமிழ் பேசும் எமக்கு நல்லது"

செல்வன்.

குடும்ப வாழ்வில் ஐக்கியத்தை மறுத்து, நாட்டிற்குள் ஐக்கியம் தேடுகிறான்.

வேடிக்கை என்னவென்றால், கணவன் / மனைவிக்குள் சுய நிர்ணயம் கோருபவர்கள் இரண்டினத்திற்குள் ஐக்கியம் தேவையாம்.

ஊடறுத்து விரியும் போலித்தனம் குமரேசன் விழித்திரையின் முன் நர்த்தனம் புரிந்தது.

செல்வாவை இறுக அணைத்து முத்தமிட்டான். அவன், தந்தையின் மடிதனில் ஆனந்தமாய்... தந்தையோ கனத்த நெஞ்சோடு, தாயோ இரவல் சுகத்தின் தாகத்தோடு.

காலம் வெகு விரைவாக விலகிய வண்ணம், செல்வாவின் வயிறு வெறுமையாக இருந்தது. ஆனால், பசியென்று அழவில்லை.

காலம் கடந்து வரும் ஞானம், ஊருக்கு உதவாத கடல்நீர் போன்றது!

குமரேசன் அழ முயன்றான்,

ஆனால் அழுகை வரவில்லை. தேவகியோ மூலையில் முடங்கிய வண்ணம் விம்மிக் கொள்வதும், விலக்குவதுமாக மண வாழ்வின் வீழ்ச்சியோடு போரிட்டு, மடிந்த உணர்வுகளின் எச்சங்களோடு குமரேசன் மீண்டும், செல்வனைச் சுற்றியே அவன் நிகழ்வுகள்...

"செல்வன்"

சோஷலிச ஐக்கிய இலங்கையின் தோற்றத்திற்காக இன்று வரையும் பாடுபடுவன், ஈழம், அவன் மறுக்கும் ஒரு கருத்துருவம்.

தோழமை.

இது, குமரேசனையும், தேவகியையும் செல்வனின் கருத்துக்களோடு இணைக்க, செல்வன் இரவு, பகல் பாராது, குமரேசன் வீட்டினில் மடங்கட்டினான், கருத்தாடினான்.

"தொட்டால் சிணுங்கி" டி.வி. யில் ஓடியது

"கார்த்திக்கும், ரேவதிக்குமுள்ள உறவு சிறப்பானது; இப்படியான உறவுதாம் சிறப்பான நட்பு. இது, பாலியலைப் பற்றிச் சிந்திக்காத- எதிர்ப்பால் வினையற்ற ஆண்-பெண் நட்பு. ஆனால், எங்கட ஆக்கள் இதைப்போலப் பழக வேண்டுமே!"

செல்வன், பெருமூச்சோடு கொட்டினான்.

"என்டாலும் இது ஓவர், இப்படி, புருஷனை விட நட்பு பெரிசாகப் போகுமே!" குமரேசன் வெகுளியாய்க் கேட்க வைத்தான்.

"சீ, இதென்ன ஓவர்? சரியான தோழமையுறவில் இதைவிட நெருக்கமாய் ஆண்-பெண் உறவு விரியும்"

"சரி, செல்வா, சரி. எனக்கும், தேவகிக்கும் அப்படி உறவிருந்தது. ஆனால், இறுதியில் நாம் கல்யாணம் செய்து கொண்டோமே?"

அண்ணா, நானும், உங்களோடு நாலு வருஷமாகப் பழகிறேன். உங்களுக்கும் - எனக்கும் அண்ணன், தம்பி போல உறவுப் பாசமுள்ளது; உங்கள் மனைவி தேவகி அக்காவுக்கும், எனக்கும் சகோதரர்களை விட பாச உறவில்லையா? நட்பு இல்லையா?"

சரி, சரி ஒத்துக் கொள்கிறேன்; என்டாலும்..."

"என்ன? என்டாலும்..." என்டு இழுத்துக் கொண்டு... "செல்வா சொன்னால் விட்டு விடுங்களேன்" தேவகி உணர்ச்சி வசப்பட்டாள்.

"செல்வனின் தோழமையுறவின் உண்மைத் தனத்தாலே தானே அவரின் பெயரை எங்கட பிள்ளைக்கு வைச்சனாங்கள்" கடந்த காலம் குமரேசனை வாட்டியது.

குமரேசன், செல்வாவை மடியிலிருந்து எடுத்து தோளில் போட்டான். அவன், நழுவியிறங்கி விளையாடத்தயாராகி தனதறைக்கு ஓடினான்.

இப்போது,"செல்வன்" பெயரே அவனுக்கு வெறுப்பாகியது. கடந்த கால அவன் தொடர்பு நினைவோடு, விழிகள் முன் தோன்றி மறைந்தது. குமரேசனுக்கு.

தேவகி, இங்கிருந்து விம்மிக் கொண்டாள்.

குமரேசன், அவளைப் பார்த்தபடி சோபாவில்.

பல பத்துப்பேர்களை சாட்சியாக வைத்துத் தாலிகட்டிய மனைவி-தேவகி.

"இல்லறத்தில் தடம் பதிக்கவே இந்தக் கரங்களின் கோர்ப்பு"

(தொடர்ச்சி 20-ம் பக்கம்)

# புகலிட வாழ்வின் முரண்பாடுகள்



## தாழ்வுச் சிக்கலும் கறுப்பின முரண்பாடும்

கடந்தவாரம் நான் சொல்லிய கணக்காளரைப் போலவே, பாரிஸ் நகரத்துக்கு வந்த ஈழத் தமிழர்களில் 99 வீதமானவர்கள் நிகழ்கால நெருக்கடிகளால் சிறைப்படுத்தப்பட்டு சூழ்நிலைக் கைதிகளாக வாழ்ந்து கொண்டிருப்பவர்களாவர்.

மகன்மார் கொழும்பிலிருந்து புறப்பட்டு பாரிஸ் மண்ணில் வந்து கால் வைத்தவுடனேயே காசு அனுப்பும்படி கேட்டு நச்சரிக்கும் பெற்றோரும், பாரிசுக்கு வந்த கணவன்மாருக்கு, அவர்கள் இங்கு வருவதற்கு ஊரில் பட்ட கடனுக்கு வட்டிக்கு வட்டி ஏறுவதை ஞாபகப் படுத்திக் கடிதம் எழுதும் மனைவிமாரும், தங்குமிடத்திற்கு வந்து ஒரு வாரம் கழியுமுன்னரே நாசூக்காக 'சமறிக்காசை' ஞாபகப் படுத்தும் நண்பர்களும், பாரிசுக்கு வரும் ஈழத்தமிழர்களுக்கு உடனடியாக ஏதாவதொரு வேலையை செய்யும்படி நிர்ப்பந்திக்கும் காரணிகளாக அமைகின்றனர்.

மொழி தெரியாத நிலையில், பாரிஸ் நகரத்தில் ஈழத் தமிழர்கள் வேலை தேட முற்படும் போது; பிரான்ஸ் அரசாங்கத்துக்கு; எப்படி வரி செலுத்தாமல் தப்பித்துக்கொள்ளலாம்; தொழிலாளர்கள் தொடர்பான கொடுப்பனவுகளை செலுத்தாமல் தவிர்ப்பதற்கு எப்படி சம்பளத்தை குறைத்துப் பட்டிய லிடுவது; எப்படியெல்லாம் வெளிநாட்டு அகதித் தொழிலாளர்களிடம், குறைந்த சம்பளத்தில் அதிக நேரம் வாங்குவது என்பதிலெல்லாம் கை தேர்ந்த வெளிநாட்டு முதலாளிகளே (சில பிரெஞ்சு முதலாளிகளுக்கும் கூட) ஆபத்துக்கு உதவவரும் மனிதாபிமானப் பேர்வழிகளைப் போல் தங்கள் நிறுவனங்களில் வேலை வழங்க முன்வருகின்றனர்.

இவர்கள் வழங்கக் கூடிய கீழ் நிலை வேலைகள் (அலுவலக சுத்திகரிப்பு, உணவு விடுதிகளில் கழுவுதல்; துடைத்தல், பத்திரிகை போடுதல்) பெரும்பாலான பிரெஞ்சுத் தொழிலாளர்கள் செய்ய விரும்பாதவையாகும். அதற்குக் காரணம், அவை இழிவானவை என்பதால் அல்ல. அவை அதிகளவு கஷ்டமானதும் எப்போதும் மேல் நிலை ஊழியர்களால் உத்தரவிட்டுக் கொண்டு இருக்கப்படுவதும், ஓய்வில்லாததும், குறைந்த சம்பளத்தை உடையதும் என்பதாலுமேயாகும்.

ஈழத் தமிழர்கள் அதிகளவுக்கு பாரிசுக்கு வருவதற்கு முன்பு இந்த வேலைகளை ஆபிரிக்க கறுப்பினத்தவர்களும், அல்ஜீரிய, துனிசிய, மொரோக்கா நாட்டவர்களுமே செய்து வந்தனர்.

பிரெஞ்சுக் காலனியாக இருந்த நாடுகளில் இருந்து வந்த,அநேகமாக பிரெஞ்சு மொழி பேசத் தெரிந்த இவர்கள் எப்போதும் மேல் நிலை ஊழியர்களுடன் முரண்டு பிடிப்பவர்களாகவும், நிர்ப்பந்தித்து வேலை வாங்க முடியாதவர்களாகவும், ஓரளவுக்கு மேல் அவர்களை நிர்ப்பந்திக்க முற்பட்டால் வேலையை விட்டுப் போய்விடக்கூடியவர்களாகவும் இருந்தார்கள். இந்த விடயங்கள் இவர்களுக்கு வேலைவழங்கும் முதலாளிமாருக்கு எப்போதும் பிரச்சினைக்குரிய ஒன்றாகவே இருந்தது.

இந்தச் சூழ்நிலையில் ஈழத்தமிழர்கள், அவர்களுக்குக் கிடைத்தது பெரிய வரப்பிரசாதமாக இருந்தது. எதிர்த்துக் கேள்வி கேட்கத் தெரியாத, அவ்வாறு கேட்க நினைத்தாலும் கேட்பதற்கு மொழிதெரியாத 10 முதல் 12 மணி நேரம் வேலை வாங்கி விட்டு, அதில் 4 மணி நேரத்தை மட்டும் அதிகார பூர்வமாகப் பட்டியலிட்டுவிட்டு, மீதி8 மணி நேரத்தில் 4 மணி நேர உழைப்பைத் திருடி [illegible] நேர வேலைக்கு, சம்பளப்பட்டியலுக்கு புறம்பாக என்று சொல்லிக் கொண்டு கையில் காசைக் கொடுத்தவுடன் மறுப்பின்றி வாங்கிச் செல்லும், ஈழத் தமிழர்கள் அவர்களது 'விருப்பத்திற்குரிய' தொழிலாளர்களாக இருந்தார்கள். மற்றவர்களைப் போல் அவர்கள் முரண்டு பிடித்தால் "மொழி தெரியாத உனக்கு யார் வேலை தருவார்கள்? எப்படி வீட்டு வாடகை கட்டுவாய்? எப்படிச் சாப்பிடுவாய்? எப்படி ஊருக்குப் பணம் அனுப்புவாய் என்ற கேள்விகளைக் கேட்டே அவர்களை வழிக்குக் கொண்டு வந்து விடலாம்" என்பதை அவர்கள் தெரிந்து வைத்துக் கொண்டார்கள்.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் ஊரிலிருந்த காலத்தில் இத்தகைய கீழ் நிலை வேலைகளையெல்லாம் செய்வதை, கேவலமாக நினைத்தவர்கள். ஆனால் பாரிசுக்கு வந்து இதைத் தவிர வேறு வேலைகளைச் செய்ய முடியாது என்ற நிலையில் இந்த வேலைகளைச் செய்ய முற்பட்டபோது தொடக்கத்தில் அது மிகவும் கஷ்டமான ஒன்றாகவே இருந்தது. மேல் நிலை ஊழியர்கள் அவர்களை அடக்கி அதட்டி வேலை வாங்கியபோது, அவர்களைத் திருப்பி அதட்ட வேண்டும் எதிர்க்க வேண்டும் என்ற உணர்வும், ஆத்திரமும் ஏற்பட்டாலும் அதை வார்த்தையில் காட்ட முடியாமல் வாய்மூடி மௌனிகளாக இருக்க வேண்டி ஏற்பட்டது. வேலை நேரம் முடிந்த பின்பும் வேலை செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட போது, முரண்டு பிடிக்கமுடியாமல் பணிந்து போய் வேலை செய்யவேண்டி ஏற்பட்டது.

ஆனாலும் நாளடைவில், மேல் நிலை ஊழியர்களைக் கைக்குள் போட்டுக் கொள்வதின் மூலம், முதலாளிக்குத் தெரியாமல் அவர்களுடன் சமரசம் செய்து கொண்டு எப்படி வேலைப்பழுவை இலகுவாக்கலாம் என்பதை அறிந்து கொண்ட பின் இந்த வேலைகள் விருப்பத்திற்குரிய வேலைகளாகி விட்டன. ஏற்கனவே இந்த வேலைகளைச் செய்து வந்த ஆபிரிக்க கறுப்பினத்தவர்களையும், மற்றக் குடியேற்ற நாட்டவர்களையும் முதலாளிமார் இந்த வேலைகளை விட்டு நீக்கி விட்டு இவர்களை விரும்பி எடுக்குமளவுக்கு இவர்கள் முதலாளிக்கும், மேல் நிலை ஊழியர்களுக்கும் விசுவாசமாக நடந்து கொண்டார்கள்.

1993 - 1994 காலப் பகுதியில் வெளிநாட்டவர்களை பிரான்சில் வேலைக்கு வைத்திருப்பது தொடர்பான கருத்தரங்கொன்றில், உணவு விடுதி முதலாளிமார் சங்கம், ஈழத்தமிழர்களை சிபார்சு செய்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்க ஒன்று.

ஈழத் தமிழர்கள் இவ்வாறு கீழ் நிலை வேலைகளை தங்களுக்குரியதாக எடுத்துக்கொண்ட போது அது ஆபிரிக்க மற்றும் அல்ஜீரிய, துனிசிய, மொரோக்கோ நாட்டவர்களுடனான ஒரு முரண்பாட்டுக்கு வழிவகுத்தது.

ஆபிரிக்கா நாட்டவர்கள் விடயத்தில் அவர்களது நிறத்தைப் போல அவர்கள் அசிங்கமானவர்கள், நம்பிக்கையற்றவர்கள், திருடர்கள், அயோக்கியர்கள் என்ற எண்ணம் ஈழத்தமிழர்களுக்கு உண்டு. வெள்ளை நிறத்து இனவாதிகள் அவர்களை அடிமைப்படுத்தி சுரண்டுவதற்காகவே இந்த எண்ணத்தை ஏற்கனவே வளர்த்து விட்டிருந்தாலும், ஈழத்தமிழர்கள் அவர்களிடமிருந்து இதை பிரதியெடுத்துக் கொண்டதாகச் சொல்லமுடியாது.

ஈழத் தமிழர்கள் ஆபிரிக்க கறுப்பினத்தவர்கள் விடயத்தில் கொண்டுள்ள தாழ்வான அபிப்பிராயத்துக்கு, அடிப்படையில் மனோவியல் ரீதியான ஒரு காரணம் உண்டு. 2000 வருடங்களுக்கு மேலாக சாதிய சமூக அமைப்பில் வாழ்ந்து பழக்கப்பட்ட அவர்கள், செய்தொழிலைக் கொண்டு சமூக அந்தஸ்தை கணிக்கப் பழகிக் கொண்ட அவர்கள், ஊரில் தங்களால் இழிசனர்களின் தொழில்கள் என்று ஒதுக்கி வைக்கப்பட்ட தொழில்களை, இங்கு செய்ய முற்பட்ட போது ஏற்பட்ட தாழ்வுச் சிக்கலே அதுவாகும்.

அதாவது தன்னைவிட ஒருவன் இழிவான நிலையில் இருக்கிறான், என்று சொல்வதன் மூலம் தன்னுடைய நிலையை எண்ணித் திருப்திப்பட்டுக் கொள்வதாகும். மற்றபடி அவர்கள் திருடர்கள், நம்பிக்கையற்றவர்கள், ஏமாற்றுப் பேர்வழிகள் என்று சொல்வதெல்லாம் அந்த திருப்திப்படுத்தலை நியாயப் படுத்தச் சொல்லும் காரணங்களாகும்.

(தொடரும்)

**- நக்கீரன்**

## நூல் அறிமுகம்

# வானம் எம் வசம்




1995 சித்திரை 28, 29. தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றைப் பொறுத்தளவில் இவை ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்க நாட்கள்; தமிழ் மக்களை சதா அச்சுறுத்திய படியிருந்த சிங்கள வான்படை விமானங்கள் இரண்டை யாழ்ப்பாண வான்பரப்பில் வைத்துப் புலிவீரர்கள் சுட்டு வீழ்த்திய நாட்கள் அவை. இந்த நாட்களில் வாழ்ந்த ஒவ்வொரு தமிழனும்தமிழிச்சியும் அதற்காகப் பெருமையடைவதுடன் தாங்கள் இறக்கும் வரை இந்த நிகழ்ச்சியை மறக்கவும் மாட்டார்கள். அந்தளவுக்கு இந்த இராணுவச் சாதனை எமது மக்களுக்குப் பெரும் புளகாங்கித உணர்வைக் கொடுத்திருந்தது. வீதிகளில் குழுமி நின்றும் வீடுகளில் இருந்த படியும் எமது மக்கள் வெளிப்படுத்திய இந்தப் பேருவகையை எமது மண்ணின் கவிஞர்கள் சிலர் இந்நூலில் பதிவு செய்துள்ளார்கள்.

28.05.1995 அன்று மேற்குறிப்பிட்ட பதிப்புரையுடன் தமிழ்த்தாய் வெளியீட்டகத்தால் தமிழீழத்தில் வெளியிடப்பட்ட இந்தக் கவிதை நூல் தற்போது தமிழீழ விடுதலைப்புலிகளின் அனைத்துலகச் செயலக வெளியீடாக ஐரோப்பாவில் மறுபதிப்புச் செய்யப்பட்டு வெளிவந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் போரின் ஒரு மாபெரும் வரலாற்றுப் பரிமாணத்தை ஒரு வரலாற்றுப் பதிவாகவே சொல்லிப் பெருமிதம் அடைந்திருக்கும் 29 ஈழத்துக் கவிஞர்களின் தொகுப்பாக வெளிவந்திருக்கும் இந்தக் கவிதைத் தொகுப்பு தமிழீழத்தை நேசிக்கும் ஒவ்வொருவரும் வாங்கிப் பொக்கிசமாகப் பாதுகாத்து வைத்திருக்க வேண்டியதொன்றாகும்.

தமிழீழத்தின் வான்பரப்பை ஆக்கிரமித்து நெருப்பு மழையைப் பொழிந்து எமது மக்களின் வாழ்வை; வளத்தை; எதிர்காலத்தை நிர்மூலமாக்கிய குண்டு சுமந்த கொடிய அரக்கர்கள் விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படையணி வீரர்களால் அதே வான்பரப்பில் வைத்து நிர்மூலம் செய்து வீழ்த்தப்பட்ட வரலாற்று நிகழ்வு அந்தக் கொடிய அரக்கர்களால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு ஏற்படுத்திய சந்தோசத்தைப் பெருமிதத்தை இந்தக் கவிஞர்கள் மிகவும் தத்ரூபமாகப் படம் பிடித்துக்காட்டியிருக்கின்றார்கள்.

தன்னுடைய மகனை நீராட்டிச் சோறூட்டிப் பள்ளிக்கனுப்பி வைத்த வேளையில் குண்டு சுமந்துவந்த அரக்கன் செய்த கொடும் செயலால் உடல் சிதறி ஊட்டிய சோற்றுப் பருக்கைகளும் சிதறிச் சதைத்துண்டுகளாய் இரத்தச் சேற்றில் பொறுக்கியெடுத்த பெருந்துயரை தன்னுள் சுமந்த தாய் ஒருத்தி, அந்த அரக்கன் நொருக்கி வீழ்த்தப்பட்ட செய்தி கேட்டு அதைச் செய்த சின்னப்புலி வீரனுக்கு ஆசி தெரிவிப்பதாய் அமைந்த கீழ் வரும் கவிதை அதற்கு ஓர் உதாரணமாகும்.

## சின்னப் புலிவீரனுக்கு!

வானத்தை எங்களின்
வசப்படவைத்த சின்னப்புலிவீரா,
குடியிருந்த கோயில் இழந்து...
சிறுகச் சிறுகச் சேர்த்த
சொத்தும் இழந்து...
கொற்றம் சாய்ந்த கோனாய்
இரவல் கோடிக்குள் அகதியாய்
வாழும்
இந்த அன்னையின் ஆசிகள்!
'பிளேன்'களைச் சுட்ட உன்
பிஞ்சுக் கரங்களைக் காட்டு;
மென்மையாய் ஒருதரம்
முத்தமிட விரும்புகிறேன்!
உன் வயதுதான் இருக்கும்
என் மூத்தவனுக்கு...
பழஞ்சோறூட்டி
வகிடெடுத்துத் தலைசீவி...
வாசப்பவுடர் பூசி...
வாசலிலே போய் சகுனம் பார்த்து...
வழியனுப்பி வைத்தேன் பள்ளிக்கு!

சில மணித்துளிகள் தான்
சென்றிருக்கும்...
மேகம் நடுநடுங்க... முகடுபிரிய...
பூமி அதிர்ந்தது!
சிதைந்த உடல்...துண்டுதுண்டாய்...
கைகளும் கால்களும்... காலையில்
ஊட்டிய சோற்றுப் பருக்கைகள் கூட
உதிரத்தில் நனைந்து கிடந்தன!
கதறித்துடித்தேன்... கண்ணீர்
சொரிந்தேன்!

நேற்றுமாலையும்... இன்று
மாலையும்...நீ
சுட்டுவீழ்த்திய விமானங்கள்
கவாலை விட்டு எரிந்த போது...
சத்தமிட்டுச் சிரித்தேனடா...
சிதறிச் செத்த என் செல்வம்
உயிர்த்தெழுந்து வந்தது போல்
உணர்ந்தேனடா... மீண்டும்
உனக்கு என் ஆசிர்வாதங்கள்.

# காயத்திரியின் தொடரும் சேவையில்...

மிகவும் உயர்ந்த தரமுடைய ஓட்டி,
ஓரா, விளைமீன், சுறா போன்றவற்றை
பாரிசில் நேரடியாக இறக்குமதி செய்து
விநியோகிக்கின்றோம்

SAMUDRA
SEA FOODS

மாதங்கி கறிப்பவுடர்
மற்றும்
மாதங்கி
தயாரிப்புப்
பொருட்கள்
யாவற்றையும்
எம்மிடம் பெற்றுக்
கொள்ளலாம்!




**New GAYATHIRY**
*Enterprise S.A.R.L.*

**210, Rue du Fbg. St.Denis, 75010 Paris.**
**Tel: 01 42 09 22 43 / Fax: 01 46 07 90 34**

வர்த்தகர்கள் மொத்தமாகப்
பெற்றுக்கொள்ள எம்முடன்
தொடர்புகொள்ளவும்

மாதங்கி

இலண்டனுக்கான இறக்குமதியாளர்களும்
விநியோகஸ்தர்களும்:

*Spiceway*

21.23 Kingston Road,
South Wimbledon,
London SW19 1JX.

Tel: 0181-540 5526, 0181-540 3481 Fax: 0181-544 0697

இங்கு மாதங்கி தயாரிப்புக்களும்,
SAMUDRA கடல் உணவு
வகைகளும் பெற்றுக்கொள்ளலாம்



# வானலைகளில்!

**பெப்ரவரி 18 செவ்வாய் மாலை 7 மணி முதல்**

**FM 105.9 Mhz** அலைவரிசையில்



# தமிழ் முரசம்
வானொலி

**வாராந்தம்**

**செவ்வாய் மாலை 7 முதல் 8 மணி வரை**
**ஞாயிறு பகல் 12 முதல் 13 மணி வரை**

**இவ் வானொலிச் சேவையில் ⊃ அறிவிப்பாளராக ⊃ தயாரிப்பாளராக**
*பணி புரிய விரும்புபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டுகிறோம்.*

உங்கள் குழந்தைகளின் பிறந்தநாள் அறிவிப்புகள், முக்கிய அறிவித்தல்கள், விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன.
*வானொலிச் சேவையில் உள்ளடக்கப்படக்கூடிய நிகழ்ச்சிகள் குறித்த கருத்துக்களை எமக்கு அறியத்தரவும்.*

தொடர்புகட்கு: **தமிழ் முரசம்**
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
P.Box 1699 Vika, 0110 Oslo, தொலைபேசி : 22 35 09 80

# ஐ.நாவை நோக்கி அகதிகளாய்

- ஸ்ரீலங்கா அரச பயங்கரவாதத்தால் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசிய இனத்தின் அவலத்தை அகிலத்திற்கு எடுத்துரைக்க;
- அனைத்துலக நாடுகளிலும் வதியும் தமிழீழ மக்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும், தமிழீழ மக்களுக்கும் ஆற்றும் உதவிகளின் தார்மீகத் தன்மையை எடுத்துரைக்க;
- ஸ்ரீலங்காவின் போர்க்காலச் சூழலே தமிழீழ மக்களைப் புலம் பெயர்ந்த நாடுகளில் அரசியல் அகதிகளாக்கிற்று என்பதை எடுத்துரைக்க

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

## 17.03.1997 திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு

**ஜெனிவா புகையிரத நிலையத்திலிருந்து ஆரம்பித்து ஐக்கிய நாடுகள் சபை வரை அமைதிப் பேரணி நடைபெறும்.**

பேரணியில் கலந்து கொள்ளவிருக்கும் மக்களின் நலன் கருதி ஒவ்வொரு நகரங்களிலிருந்தும் போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இது பற்றிய மேலதிக விபரங்களுக்கும், ஆசனப் பதிவுகள் செய்துகொள்ளவும் அவ்வப் பகுதி தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளைப் பணியாளர்களுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

## அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

*தமிழீழ விடுதலைப் புலிகள் (சுவிஸ் கிளை)*

# போடாதே.... போடாதே .... சீட்டினைப் போடாதே
# தேடாதே.... தேடாதே...... தாச்சிக் காரரை தேடாதே...!

"மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து(உ)ன்
விரையார் கழற் கென்
கைதான் தலை வைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து (உ)ன்னைப் போற்றி சய
சய போற்றியெனும்
கைதான் நெகிழவிடேன் உடையாய்
என்னைக் கண்டுகொள்ளே
தெரம்வாய் உழைத்த பெரும் சனம்
நினைந்த சீட்டின் தாச்சி வஞ்சித்து
பாங்கொக் மறைந்த மாயம் சொல்லவோ...
சொல்லவோ....

வர வர இந்தாளுக்கு கிரந்தம் கூடிப் போச்சு என்டு நினைக்கிறியள் போலை. இல்லாட்டி என்னத்துக்கு மாணிக்க வாசக சுவாமிகள் பாடிய திருச்சதகத்துக்கு கீழை மூண்டு அடியளை நான் சேத்து இழுத்துவிட்டிருக்கிறன் எண்டு கேக்கப்போறியளெண்டும் எனக்குத் தெரியாதே.. என்ன?

, தலையிடியும் காச்சலும் தனக்கு தனக்கு வந்தால் தான் தெரியுமெண்டு சொல்லுறதைப் போலை சீட்டுக்கட்டின சில சனங்கள் அழுதுகொண்டு திரியிறதைப் பாக்க சரியான வயித்தெரிச்சலாய்க் கிடக்குதுங்கோ!

'வழியிலை கிடக்கிற பாம்பை எடுத்து மடிக்குள்ளை வைச்சிட்டு குத்துது குடையுது' எண்டு புலம்பித்திரியிறது இப்ப எங்கடை ஆக்களுக்கு தினப் பிழைப்பாப் போச்சுது! இங்கத்தைய றெஸ்ரோறன்டுகளிலை சாப்பாடுகளோடை சாப்பாடாய் வேகி வெந்து உழைச்ச காசிலை தின்டது பாதி தின்னாதது பாதியா மிச்சம் பிடிச்சு சீட்டுக் கட்டின சிலருக்கு சீட்டுத் தாச்சிமார்தான் இப்ப பட்டை... நாமம் பூசிக் கொண்டிருக்கினம்.

ஆசை ..ம் ..ம்.. ஆரைத்தான் விட்டுது. முதலிலை வலு சின்னத்தொகையிலை துடங்கி அதை எடுத்து தம்பி, தங்கச்சி, மச்சி மாரைக் கூப்பிட்டிச்சினம் சிலர். இன்னும் கொஞ்சம் பேர் ஊரிலை இருக்கிற அக்கா தங்கச்சிக்கு கலியாணம் செய்து வைச்சிச்சினம். அத்தோடை விட்டிச்சினமே யானையும் தனக்குத்தானே மண்ணை அள்ளிப் போடுறது போலை பென்னாம் பெரிய தொகையளிலை காலைவிட்டிட்டு இப்ப குடும்பத்தின்ரை சந்தோசம், நிம்மதி எல்லாத்தையும் துலைச்சுப் போட்டு அழுதுகொண்டிருக்கினம்.

சீட்டுப் போடுறதிலையும் பல சூச்சுமங்கள் இருக்குது கண்டியளோ! அஃதாகப்பட்டது, சீட்டுத் தாச்சிச் சாமியானவர் தன்னை நம்பியிருக்கும் பக்தர்களை இரட்சிக்கிறதுக்காக பவுண் சீட்டு, கைமாத்துச்சீட்டு, கடனிலை ஏலம் விடுற சீட்டு.. என இன்னோரன்ன பல அவதாரங்களை எடுத்து பக்தகோடிகளை சோதிக்கக் கொண்டிருக்கும் காலத்திலே..,

புறப்புளமோ இல்லாட்டி வட்டிப்புறப்புளமோ" எண்டு நக்கலாய் கேக்கிறாங்களாம். ஆகா.. ஆகா புகலிடத் தமிழனின் பெருமை தான் என்னே.... என்னே....

கல்தோன்றி.. மண்தோன்றா.. காலத்திலை முன் தோன்றின மூத்த குடி எங்கடை தமிழ் எண்டு சொல்லி

## ஆருக்குச் சொல்லி அழ?

சுவிஸ் எனும் நாட்டிலே மாதம் ஒரு சீட்டு.. பொழுதொரு வட்டியாக அறவிட்டு சீட்டுப் பிடிச்ச வந்தவர்களில் சிலருக்கு.. சிலருக்கு...?! வேண்டாம் இந்த இலக்கணத்தமிழ். என்ரை தமிழிலேயே சொல்லுறனே.... பெருமைப்படுறவை இண்டைக்கு தாச்சிச் சீட்டுக்காரரை பிடிச்சுத் தரச்சொல்லி போன போன நாடுகளின்ரை பொலிசுக்காறனிட்டை பல்லுக் காட்டுற நிலைமையாப் போச்சுது!

> **கல்தோன்றி... மண்தோன்றா... காலத்திலை முன் தோன்றின மூத்த குடி எங்கடை தமிழ் எண்டு சொல்லி பெருமைப்படுறவை இண்டைக்கு சீட்டுத் தாச்சிக்காரரை பிடிச்சுத் தரச்சொல்லி போன போன நாடுகளின்ரை பொலிசுக்காறனிட்டை பல்லுக் காட்டுற நிலைமையாப் போச்சுது!**

சீட்டுப் பிடிச்ச ஆக்களிலை சிலருக்கு சுவிஸ் கவுண்மேந்து அகதி விண்ணப்பங்களை நிராகரிச்சதாலை அவையள் எல்லாம் நைசாய் சீட்டை எடுத்துப் போட்டு மூட்டையைக் கட்டிக்கொண்டு அமெரிக்கா.. கனடா எண்டு கண்டம் விட்டுக் கண்டம் பாய்ஞ்சிட்டினம். சீட்டை எடுக்காமல் பொரிமாத் தோண்டிபோலை கனாக்கண்ட சனமெல்லாம் தலையிலைதான் கையை வைக்க வேண்டியதாய்ப் போச்சு.... மனம் ஆறாத சில சனம் கனடாவிலை இருக்கிற தங்கடை சொந்தக்காரச் சனங்களுக்கு ரெலிபோன் எடுத்து எங்கடை சீட்டுத் தாச்சிக்காரர் உங்கை எங்கையாலும் இருக்கினமோ எண்டு கண்ணீரும் கம்பலையுமாய் விசாரிக்க வருகினம்.

சிலர் பொலிசுக்கும் போயிருக்கினம்.... அங்கை என்னடாவெண்டா இவையின்ரை தலையளைக் கண்டவுடனவே பொலிசுக்காரர் எல்லாம் "சீட்டுப் கதையுக்குள்ளை.. கதையாய்.. அதுக்குள்ளை ஒரு விசயம் இருக்குக் கண்டியளோ! தாச்சிச் சீட்டு காசுதராமல் அடாத்துப் பண்ணுறான் எண்டு இப்ப அழுகிற சனம்.. கொஞ்சக் காலத்துக்கு முந்தி உழைக்கிற காசு சாப்பாட்டுக்கே காணாமல் போகுதெண்டு அழுதுகொண்டு திரிஞ்சுச மற்றச் சனங்களைப் பேய்க்காட்டுறத்துக்குத் தான் எண்டது நான் சொல்லித்தான் உங்களுக்குத் தெரிய வேணுமே?

கன சனத்தின்ரை வயித்திலை அடிச்சு சீட்டுக்காசோடை மாயமான ஒரு சீட்டுத் தாச்சிக்காரர் பாங்கொக்கிலை ஒரு ஹோட்டல் வாங்கி சூடு பறக்க யாவாரம் (..?..) பண்ணுறாராம். ஊர்ச்சனத்தின்ரை காசுக்கு உலைவச்சுப்போட்டு இப்ப வெளிநாட்டுக்கு ஆக்களை அனுப்புறன் எண்டு சொல்லி பாங்கொக்கிலை புதுச் சித்து விளையாட்டு ஒண்டையும் துவக்கியிருக்கிறார் எண்டும் கேள்வி.

உண்ணாலை.. உப்பிடிப்பட்ட மலை விழுங்கி மகாதேவனுகளின்ரை திருகுதாளங்கள் எல்லாம் சனங்கள் அப்பளம் போலை இருக்கிற வரையும் தொடரத்தான் போகுதுபோலை. இவை நரவனியோட சங்காத்தம் வைக்க முன்னம் ஒரு எப்பன் அச்சறுக்கை எடுத்தா வில்லங்கத்திலை மாட்டாமல் இருக்கலாம் எண்டது என்ரை அபிப்பிராயம் கண்டியளோ!

இன்னொரு முசுப்பாத்தியான சம்பவம் ஒண்டும் கிட்டடியிலை சுவிசிலை நடந்திருக்கு. பத்துப் பதினைஞ்சு சனத்தைத் சேத்து சீட்டுப்போட்ட ஒருத்தர் காசுகுடுக்கேலாமல் நல்ல முறையா மாட்டுப்பட்டுப் போனாராம். சீட்டுப் போட்டவை எல்லாம் காசைத் தா...தா.. எண்டு வெருட்ட கடைசியிலை அவர் தான் மாதம் மாதம் ஏலம் ஒண்டு போடுறன் அதிலை குறையக் கேட்கிறவைக்கு காசைத்தாறன் எண்டு சொல்லியிருக்கிறார். ஏலம் கூறின அண்டைக்கு ஆயிரம் பிராங்கிலை துடங்கின ஏலம் கடைசியிலை 150 பிராங்கிலை முடிஞ்சிருக்கு. ஏலம் எடுத்தவர் வலு புளுகத்தோடை 150 பிராங்கோடை போயிருக்கிறார்.

ஆயிரம் வரவேண்டிய இடத்திலை நூற்றம்பதை ஏன்ராப்பா வேண்டினனீ எண்டதுக்கு.... இவனிட்டை இருந்து இது வந்ததே பெரிய காரியம் என்டு சொல்லிப்போட்டு ஒரு கும்பிடு போட்டுட்டுப் போயிட்டார். மற்ற பக்கத்தாலை.. தாச்சிச் சீட்டு என்னடாவெண்டா இருநூறு பிராங்கை கையிலை வைச்சுக்கொண்டு ஆயிரத்திலை ஏலம் துடங்கின தன்ரை செய்கையை வலுவாய் மெச்சியிருக்கிறார். உப்பிடியே போனால்... ம்ம்... ம்!

ஒருத்தரை ஒருத்தர் ஏமாத்தி நல்லாச் சொறிஞ்சு கொண்டிருக்கிற நிலைமை எண்டைக்கு மாறுதோ? இதுகளும் நேர்சீராக எப்ப வாழப்போகுதுகளோ! நெஞ்சுக் கூடு கனக்குது! பொறுங்கோ மறுக்காலும் அந்தத் திருச்சதகத்தை கொஞ்சம் உருப்போடப் போறன்.

"மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து உன் விரையார் கழற்கென் கைதான் தலை வைத்து கண்ணீர்.. கண்ணீர் கண்ணீர்..!!!

**அருமைத்தம்பி**


மேற்கு இலண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது
இங்கில்லை
N°: 199, The BROADWAY,
Southall, Middx.
T.P: 0181 / 813 9126
(ADV)

லண்டன் மாநகரில்
ஸ்ரீ லட்சுமி என்ரபிறைசஸ்
கன்னியர் முதல் சிறுவர் வரை
முதல் தர புடவை மாளிகை
SREE LAKSHMI ENTERPRISES
IMPORTER & EXPORTER, WHOLESALER & RETAILER
Large Collection of Wedding Sarees, Silk Sarees & Barathanatya Costumes
50 THE BROADWAY, SOUTHALL,
MIDDLESEX, UBI 1QB
TEL: 0181-843 9495 / 01831-662 824
- FAX: 0181-606 9709
(ADV)

இலண்டனில் நகைத்
தெரிவுகளுக்கு...
ராஜஸ்ரீ பட்னி அன் சன்
PATTNI HOUSE
58-60 EALING ROAD WEMBLEY,
MIDDX HA0 4TQ
TEL: 0181-903 6677 / 2859,
0181-902 0577
FAX: 0181- 903 4887
(ADV)

# தமிழ்ச் சினிமா:

# வெகுஜனச் சினிமாவிலிருந்து மாற்றுச் சினிமா நோக்கி



தமிழ்ச் சினிமா என்பதை இங்கு நான் தமிழகத்துச் சினிமா, ஈழத்துச சினிமா, புலம்பெயர் சினிமா என்கிற பரந்துபட்ட அர்த்தத்திலேயே கையாள்கின்றேன். இம் மூன்றுக்கும் சிற்சில குணாரீதியிலான வித்தியாசங்கள் இருந்த போதிலும் மாற்றுச் சினிமா என்பது இந்த மூன்று களங்களிலுமே நிகழ்ந்தாக வேண்டிய ஒன்று. எனது தமிழ்ச் சினிமா கட்டுரைகளும் இந்த மூன்று இடங்களையும் போக்குகளையுமே தழுவி எழுதப்பட்டிருக்கிறது. விவாதங்களும் மூன்று போக்குகள் பற்றியும் நிகழ்ந்திருக்கிறது.

இதுவரை எழுதிய அறிமுகங்கள்/ விமர்சனங்கள்/ விவாதங்கள் போன்றவற்றின் அடிப்படையில் மாற்றுச் சினிமாவுக்கான கோட்பாட்டு அடிப்படைகளைப் பற்றி ஒரு நடைமுறை விவாதத்தைத் தொடங்குவது இங்கு எனது நோக்கம்.

தமிழ்ச் சினிமா வரலாற்றில் வெகுஜன சினிமாப் பண்புகள் மாற்றுச் சினிமாக் கூறுகள், மாற்றுச் சினிமாவை விழைபவர்கள் மையங்குவிக்க வேண்டிய பிரச்சினைகளை நான் தொட்டுக் காட்டியிருக்கின்றேன் என நம்புகின்றேன்.

எல்லாச் சினிமாக்களுக்கும் இருக்கும் பொதுவான பிரச்சினைகள் சில உண்டு:

① a. சினிமா வடிவம் தொடர்பான பிரச்சினைகள்:

திரைக்கதை தர்க்கம்· இசை, கமெரா, காலம், இடம் போன்றவற்றின் ஒருமை போன்றன.

இதில் திரைக்கதை தர்க்கம் x ஆய்வு மனப்பான்மை x தொழில்நுட்ப உள்ளமைதி போன்றவற்றை நான் வலியுறுத்தினேன். நம்பகத்தன்மையை வலியுறுத்தினேன்.



b. நடிப்பு:

இயல்பான நடிப்பு. வாழ்வுக்கு நெருக்கமான இயல்பை நான் வலியுறுத்தினேன். மெலோடிராமா/ மிகை நடிப்பு போன்றவற்றை தவிர்ப்பது தொடர்பாக வலியுறுத்தினேன்.

② a. வெகுஜன சினிமாவில் இருக்கும் மாற்றுச் சினிமாக் கூறுகள் என்னென்ன என விவாதிக்க முயற்சித்தேன்.

- பல்வேறு சமூகப் பிரச்சினைகளைத் தொட்ட படங்கள்

- சிதைத்த படங்கள்

- அதை நாம் எப்படி அணுக வேண்டும்?

- வாழ்வின் நிரந்தர மதிப்பீடுகள். பாசம், அன்பு, காதல், பரிவு, பிரிவு, எதிர்ப்புணர்வு எவ்வாறு எல்லாப் படைப்புகளுக்கும் பொதுவானது என விளக்கினேன்.

b. எம்.ஜி.ஆர், சிவாஜி, மணிவண்ணன், பாரதிராஜா, பாலுமகேந்திரா படங்களின் சரியான நீட்சியாக எப்படி கொஞ்சம் மாறிய, திரைக்கதை தர்க்கம் உள்ள படங்கள் வர முடியும் எனச் சொன்னேன்: மோகமுள், அவதாரம், குருதிப்புனல், மகாநதி, பம்பாய், மௌனராகம் என.

வாழ்வின் பல முகங்கள் வெளிப்படும் சினிமா இது. பார்வையாளனுக்கு யோசிக்க இடம் தரும் சினிமா இது.

இங்கு சினிமாக்காரன் இயக்குனர், படைப்பாளியாக, கலைஞனாக ஆகிறான்.

ரே, ரித்விக் கடக், கொன்லோச், கோடார்ட் என இவர்களின் படங்களில் வெளிப்படும் தரிசனம்.

இதற்கு நமக்கு இரண்டு நிபந்தனைகள் அவசியம்

1. புதிய பிரக்ஞை உள்ள பார்வையாளர்கள் உருவாக வேண்டும்.

2. நிலவும் விநியோகக் கட்டமைப்பு சிலவேளை இடைஞ்சலாக இருக்கும். மாற்று விநியோகக் கட்டமைப்பு முயற்சிக்கப்படல் வேண்டும்.

போது இரு விதமாகச் செயல்படுகிறோம்.

1. விமர்சகர்கள்டு பார்வையாளர்கள், தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள் என்ற நிலையிருந்து கற்றுக் கொண்டு கலைஞனாக வளர்ச்சி பெற முயல்கிறோம்.

இந்தச் சினிமாவின் வளர்ச்சி நிலையில், அதன் ஒருங்கிணைவு, தர்க்கம், கருத்தியல்,அனுபவ சாத்தியம் போன்றவற்றின் உள் அமைதியை வலியுறுத்துவது தான் மாற்றுச் சினிமா பற்றிய எனது அணுகுமுறை.

இத்தகைய நிலையைச் சாதிக்க பல படிநிலைகள் இருக்கிறது. இதில் விமர்சன அணுகுமுறையிலும் பல படி நிலைகள் இருக்கிறது.

③ இந்த

1. பொதுவான மதிப்பீடுகள்

2. திரைக்கதை தர்க்கம்

3. இயல்பான நடிப்பு போன்றவை எவ்வாறு-

சரியான நமக்கேயான இடம், காலம், கதைக்களம் போன்றவற்றை எடுத்துக் கொண்டால் வெகுஜன சினிமாவிலிருந்து மாற்றுச் சினிமா நோக்கியதாக அமையும் என்று சொன்னேன்.

இப்படிச் செய்யும் போது வெகுஜன சினிமா பார்வையாளர்களை, அவர்களது ரசனைச் சூழலுக்குள்ளேயே நாம் சந்திக்க முடியும்.

'முகம்' போன்றவை

'காற்று வெளி' போன்றவை.

அவள் அப்படித்தான் போன்றவை இம்மாதிரிப் படங்கள்

இந்தப் படங்கள் தீவிரமான படங்கள். ஆழ்ந்த கேள்வியுள்ள படங்கள் என்று சொல்ல முடியாது.

இவை மாற்றுச் சினிமாவும் அல்ல. பின்பு மாற்றுச் சினிமா என்பதுதான் என்ன?

நம் காலத்தின் பிரச்சினையை அதற்கென்றேயிருக்கிற தர்க்கத்துக்குள் சொல்வது, இதற்கு ஒரேயொரு பார்முலா இல்லை. பிரச்சினை மற்றும்

முன்பு நாம் கற்றுக்கொண்ட:

1. பொதுவான மதிப்பீடுகள்



2. திரைக்கதை.

3. தொழில் நுட்பம் போன்றன, இங்கு

கருத்தியல் அல்லது வாழ்க்கைப் பார்வையோடு, மாறிவரும் சமூக விமர்சன ஆய்வுகளை உள்வாங்கி படைப்பாக விவாதத்திற்குரியதாக உருவாக்கிறது.

இதுதான் மாற்றுச் சினிமா. இது உலகில் ஏற்கவே இருக்கிறது. இதிலும் நிறைய வித்தியாசங்கள் / மாறுபாடுகள் உண்டு. இவை இந்தியாவிலும் உண்டு. அரசியல் பிரச்சினையுள்ள படங்களே இதில் அதி முக்கியத்துவம் பெறும் படங்களாக அமையும்.

A. அரசியல் சாரா படங்கள்:

சாருலதா, பதேர் பாஞ்சாலி

B. அரசியல் சார் படங்கள்: பூமி

Land and Freedom

Missing போன்றன.

1. பார்வையாளர்களை நாமே சந்தித்து, டிக்கெட் விற்று, முன்பாகவே பத்திரிகைகளில் எழுத விவாதங்கள் ஏற்பாடு செய்து இதை ஒரு இயக்கமாக முன்னெடுக்க வேண்டும்.

2. பெரிய தியேட்டர்கள் என்பதை விடவும் பள்ளிக்கூடங்கள், மண்டபங்கள், சிறு தியேட்டர்கள் (தேடிப் பார்க்க கிடைக்கும்) போன்றவற்றில் வேறுவேறு இடங்களில் திரையிட வேண்டும்.

இவ்வாறு நாம் செயல்படும்

2. மாற்றுச் சினிமாவுக்கான ரசனையை..

a. விமர்சனஅணுகு முறை

b. பார்வையாளர் சந்திப்பு

c. விநியோகம், இயக்கம்

என எடுத்துச் செல்கிறோம்.

இதில் சினிமா விமர்சனத்தை பார்வையாளனுக்கு நல்ல படத்தை அனுபவிக்கும் பயிற்சி எனும் அளவிலேயே தர முயற்சிக்கிறோம்.

தரமான பார்வையாளனை-உருவாக்குவதே தரமான படங்கள் உருவாகுவதற்கான ஒரே வழி:

எல்லாப் படங்களையும் நம் திருப்திக்கோ அல்லது பிறர் திருப்திக்கோ திட்டித் தீர்ப்பதில் அர்த்தமில்லை. மேலும், எல்லாம் படங்கள் பற்றியும் விலாவாரியாக எழுதிக் கொண்டிருக்கவும் தேவையில்லை. ஒரு விமர்சன நோக்கை பார்வையாளன் இயல்பாக வளர்த்துக் கொள்ள உதவுவதே சினிமா பற்றிய கட்டுரைகளின் பணி என்று கருதுகிறேன்

சினிமா விமர்சனம் எழுதுபவனின் வேலை நிச்சயமாக அரசியல் கிளர்ச்சிப் பிரச்சாரங்களின் பணி அல்ல. சினிமா பற்றிய தர்க்கங்களை அவதானித்துச் சொல்வதே அவன் பணி.

என்னளவில் என்னை எப்போதும் நான் தொழில் முறை சினிமா விமர்சகன் என்று கருதிக் கொண்டதில்லை.

மாற்றுச் சமூகம், விடுதலை பெற்ற மனிதன், இவனைச் சித்தரிக்கும் படைப்புகளே எனது தேடுதல். இந்தப் படைப்பின் ஒரு வடிவம், விஞ்ஞான தொழில் நுட்ப கருத்தியல் வடிவான சினிமா மூலம் சாத்தியமாகிறது.

எனது பல்வேறு சினிமாக் கட்டுரைகளின் மூலம் நான் இதையே எட்ட நினைத்துச் செயற்பட்டிருக்கிறேன்.

உலக சினிமா- இந்தியச் சினிமா- தென்னிந்தியசினிமா- மூன்னுலக சினிமா- தமிழ்ச் சினிமா

தமிழ்ச் சினிமாவிலும்:

1. வெகுஜன சினிமா

2. மாற்றுச் சினிமா கூறுள்ள சினிமா

3. மாற்றுச் சினிமாவை நோக்கி

என அனைத்தும் தழுவித் தான் நான் எழுதி வந்திருக்கிறேன். பல்வேறு நண்பர்கள் எனது எழுத்துக்கள் குறித்துச் சொன்னதை இங்கு நான் பகிர்ந்து கொள்கிறேன்.

தமிழில் இதுவரை வந்த தீவிர சினிமா விமர்சன மரபு என்பது வெறுமனே அரசியல் ரீதியிலானதுதான்.

அது ஒரு கலைவடிவம் மற்றும் ஒரு முக்கியமான தொழில் துறை என்ற அளவிலான எழுத்துக்கள் இல்லை.

மேலும், அசலான விமர்சன மதிப்பீடுகள் என்பது இல்லை. தொழில்துறை பக்க நிரப்பல்கள் .தான் உண்டு. இதுவரைத்திய தமிழ் சினிமா எழுத்துகள் பெரும்பாலும்

1. அரசியல் தீர்ப்புக்கள்

2. சிறு பத்திரிகை விமர்சனங்கள்

வடிவ சுத்தம் மற்றும் சினிமா அழகியல் குறித்தவை

3. தீவிர சினிமா பற்றிய எழுத்துக்கள் பெரும்பாலும் மொழிபெயர்ப்புக்கள்

4. தீவிர மார்க்ஸீயர்கள்/ கட்சி சாரா மார்க்ஸீயர்களின் எழுத்துக்கள் மேட்டுக்குடி சினிமா பார்வையிலானவை. ஒருவகையில் உள்ளதம் பேசி

(தொடர்ச்சி 20-ம் பக்கம்)

யமுனா ராஜேந்திரன்

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

## வெண்பனிச் சதுப்பு

என்றவள்,

இல்லறமென்பது, இல்லாத அறமாய், அம்மணமாய்... குமரேசன் விழிகள்முன்.

அண்ணா, அக்கா என்ற குரல்; நான்கு வருடமாகத் தெரிந்த குரல்.இது.ஆபத்துக்கு உயிர்விடுவதாய்ச் சொன்ன நட்பு/தோழமைக்குரல்.

தோழமை

எவ்வளவு அழகான-அர்த்தம் பொதிந்த வார்த்தை.?

"உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்யாதே!"

நட்பின்/தோழமையின் வீரியத்திற்குச் சொல்லப்பட்ட வார்த்தையல்லவா!

அறியாமை, எங்ஙனம் தோன்றியது? எதற்காக காமத்தலை, துரோகத்தைச் சுமந்து கரகாட்டஞ் செய்கின்றது?

உணவில் பாதிகேட்டு உண்டவுடன், மனைவியையும் பாதி கேட்கும் நட்பாய் விரியுது, புலப்பெயர்வு-ஐரோப்பிய வாழ்வு

மாற்றான் பொண்டாட்டி மார்களெல்லாம் தனக்கு, பொண்டாட்டியாகவேணும், தன் பொண்டாட்டிமட்டும் தனக்கே உரியவளாய் இருக்கப் பார்த்துக் கொள்ளணும். இன்றைய 'புலம்பெயர்வு' தமிழ் ஆண்களின் நிலை இப்படி.

நேற்றுவரையும் முகமூடியுடன் திரிந்தவர்கள் இன்று, காதலர்களாம்.

"வயிற்றில் வளர்வது உன் கூட்டாளியின் கரு. நீ, எனக்குச் சட்டப்படி கணவன். ஆனால், செல்வன் மனவிருப்புப்படி எனக்குக் கணவன்"

"உன்னை விட அவர்தாம் எல்லாம் எனக்கு."

"தேவகி" குமரேசன் உறுமினான்.

நன்றான விரிவுரை விரிந்து, உயிர் விதையை வறுத்தெடுக்க அது, குளிர்தேடி வெண்பனிச் சதுப்பில் வீழ்ந்து விட்டது.

"மூலையிலிருந்து புலம்பிப் பயனில்லை; நடந்ததெல்லாம் கனவாய்ப் போகட்டும்" குமரேசன் குனிர முனைந்தான்.

"நடு வீட்டிற்கு வந்து விடு தேவகி; செல்வாவுக்கு முகம் கழுவிவிடு. ஆகிற வேலையைப் பாரும்; உடற்பசி எல்லோருக்கும் உண்டு. அது, தீராதபசி; எவ்வளவு உண்டாலும் நாய் போல் மீண்டும், வீணியூற்றியபடி அலையும் பசி"

"இடையினில் வருபவர்கள், இடையிலேயே போய் விடுவார்கள். சுவைக்கும் மட்டும் எல்லாமே விருப்பம் நிறைந்ததாய் இருக்கும்; அது வரையும் சொர்க்கத்தின் பக்கத்து வீடு"

"சுவைத்தபின் நரகத்துக்கு நுழைய வாயில்; இது, பாலியலுறவுக்கு ரொம்பப் பொருத்தமான அனுபவம்."

தேவகி, பார்வையால் குமரேசனைச் சுட்டெரித்தாள். அவள் வாய் வரண்டு போய்க்கிடக்க, வயிற்றிலுள்ளது அவள் குடலைக் குடைந்தது.

"உமக்கு, நான் சொல்வது புரியாதோ? ஆசை, மோகம், ஒப்பீடு இவை தாமே தடம் புரள வைத்தது? பரவாயில்லை."

"தேவகி," குமரேசன் கனிய சப்தவொலி சங்கீத ஸ்வரமாகியது.

இனியும், எமக்குள் வாழ்வுண்டு.

அங்கே பாரும் உமக்கும், எனக்கும் பரிசாகியது.. அநாதை போல் ஒரு மூலையில்.

"செல்வா" தலையைத்தடவி உச்சிமோந்தபோது, பேரின்பம் பொங்கி அழிந்தது குமரேசன் நெஞ்சில்

இரவல் சுமை வயிற்றை நிறைக்க,

உண்மையைக் கரைத்து பொய்மையின் முதுகில் பூசி மெழுகிய தேவகியோ இன்னும், இரவல் பொருளுக்கே அலையும் நிலையாய்... 'அவள்' மனவெளியெங்கும் குதிரைச்சவாரி.

கட்டியவன் வேலைக்குச் செல்ல, இடையில் வந்த அக்கா / தம்பியுறவு இல்லறத்தைக் கூத்துக்களமாக்கி, இறுதியில்... ஹோட்டலில் வரவு, செலவு பார்த்து நாலு நாள் கணக்கு வழக்கின் பின், நடு இரவில் "வளர்த்த நாய் வீடு திரும்பிய கதையாய்" அவள் வருகை.

"தேவகி, இரண்டு பேருடன் வாழ்வது சாத்தியமில்லை. ஒன்று, என்னுடன். அல்லது அவனுடன். முடிவு உன்கையில்"

"எல்லாம் உன்னால்தாம். அவன், ஏன் இங்கு வருவான்?"

ஆசை வார்த்தை சொல்லி என்னை மயக்குவான்??"

"நான், அவனிடமேதிரும்பிப் போகப் போகிறேன்."

தேவகி, அமாவாசை இருட்டில் நிலவைத் தேடுகிறாள்.

"போ"

"செல்வாவை விட்டிட்டுப்போ அவன், எங்கள் இருவரின் பாலம்"

"பாலம் தேவையில்லை" தேவகிக்கு வயிற்றுச் சுமையே போதுமாகப்பட்டது.

முடிவாய் நாங்கள் போனோம். இடையில் அவர் நழுவப் பார்க்கிறார். அதால தான் வந்தனான். நான் அவரிடமே போகப்போறன்.

"உனக்கு, என்னால் ஒன்றுமே செய்யமுடியாது; மாமா வேலை நான், பார்க்காத ஒன்று"

"முடிவாகச் சொல்கிறேன் தப்பு என்னுடையது" தேவகி, கழுமரத்தில் நின்று, வானத்தில் பறக்க ஆசையோடு.

"சரி, எல்லாம் போகட்டும் நான், மறக்கமுயற்சிக்கிறேன். நீ, போய் செல்வாக்கு பால் காச்சு; நான், அவனுக்கு முகம் கழுவுகிறேன்."

"இல்லை"

நான், இன்னொரு பிள்ளைக்குத்தாய்.

அதுக்கு அப்பாவைக் காட்டவேணும்; நீர் அப்பா செல்வாக்கு மட்டும்."

"அப்போ?"

"போகிறேன்"

"எங்கே?"

"போக வேண்டிய இடத்திற்கு!"

வெண்பனிச் சதுப்பு, காலம் பூராகவும் கரையாத சதுப்பாகவே அவனுள் மாறியது; பொழுது இருட்டைப் போர்த்தது.

தேவகி

இப்போது மூலையிலில்லை.

அவள் சோகமோடு, நடக்கிறாள். கூடவே வயிற்றுப் பாரத்துடன். ஜேர்மனிய பெருநகர வீதியொன்று அவளோடு கூட நகருவதாகவே உணர்ந்தாள்.

பொழுது விடிந்து, மறுபடியும் சோகம் போர்த்தது.

குமரேசன், செல்வாவோடு"கின்டர்காடன்" சென்றான்.

இடையினில் பத்திரிகை வேண்டினான். அதன், தலையங்கம் அவன், தலையைக் கடைந்தது.

வயிற்றில் நான்கு மாதக் குழந்தையுடன் தமிழ்ப்பெண் அகதி, தண்டவாளத்தில் தலை வைத்துத் தற்கொலை.

குமரேசன் வழிகள் பனிக்க, செல்வா அநாதரவாக அலையும் காட்சி அவனுக்குள்.

எனினும், இரத்தஞ் சொட்டச் சொட்ட அன்று கேட்ட உயிர்ப் பிச்சை இன்று, வலுவிழந்த ஒன்றாய் அவனை அமுக்கியது.

---

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழ்ச் சினிமா:

பவை வெகுஜன தளத்தை மறுத்தவை.

5. ஜனரஞ்சக பத்திரிகை விமர்சனங்கள் கிளுகிளுப்பூட்டுபவை அல்லது உளறல்கள்

6. கட்சி சார்ந்த இடதுசாரி விமர்சனங்கள் தற்காலிக அரசியல் நோக்கங்களுக்காக செய்யப்படுபவை.

நான் எழுதும் போதே தீர்மானித்துக் கொண்டேன். இவை எது ஒன்றாகவும் மட்டுமே நம் எழுத்துக்கள் இருக்கக் கூடாது.

அரசியல்+ வடிவ ஒழுங்கு + அழகியல் அனுபவம் + கருத்தியல் ஆகியவற்றோடு:

1. படம் பார்த்த அனுபவத்தில்

2. அசலாக

3. தமிழில் மாற்றுச் சினிமா நோக்கியதாக எனது எழுத்துக்கள் அமைய வேண்டும் என நினைத்தேன். முடிந்த படைப்புக்கள், முடிந்த நிரந்தரம், முடிந்த வாழ்வு என்றே ஒன்றில்லை.

சமகால விழிப்புணர்ச்சி ஒரு படைப்பாளனுக்கு; பார்வையாளனுக்கு மிக முக்கியம்.

1. இலக்கியவாதி

2. சினிமா தொழில் நுட்பக்காரன்

3. சமூக மாற்றுச் செயல்பாட்டாளன்

4. தத்துவவாதி

இவர்களுக்கிடையிலான பரஸ்பர இணைவே நல்ல சினிமாக் கலைஞனை உருவாக்கும்.

இதை நோக்கியே நம் விமர்சனப் பார்வையோ படைப்பு நோக்கமோ இயங்க வேண்டும்.

இதற்கு இருந்த நோக்கில் சகட்டுமேனிக்கு அபிப்பிராயங்களை உதிர்த்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. அந்தந்தத் துறை வளர்ச்சியை, அதற்கேயான தர்க்க வளர்ச்சியை நாம் கையகப்படுத்த வேண்டும். வெகுஜனக்கலை, வெகுஜன மதிப்பீடுகள் பற்றிய பார்வைகள் தீவிரப்பட்டிருக்கும் இக்காலத்தில் அது மிக மிக நுட்பமான, கடினமான பணி.

வெகுஜன சினிமாவிலிருந்து மாற்றுச் சினிமா நோக்கிய பயணமும் அத்தகையதுதான்.

---

# நாற்று

## ஒரு வேண்டுகோள்

*தமிழே...!*
*உனக்கு எம்மேல்*
*எனிந்தக்கோபம்?*
*தீயில் விழுத்தியும்...*
*மதுரையை எரித்தும்...*
*உடன்கட்டை ஏற்றியும்...*
*கற்பை நிரூபிக்க*
*மீண்டும் மீண்டும்*
*எம்மையே பலியாக்கினாய்.*
*சீதையென்றும்*
*கண்ணகியென்றும்...*
*பத்தினியென்றும்*
*உன்னால் நாம்*
*அறுந்தது போதும்*
*இனியாவது,*
*உயிருள்ள ஜீவன்களாய்,*
*எம்மை ஏற்றுக்கொள்!*
*எம் மனங்களில் வைராக்கியம்*
*எம் கைகளில் துப்பாக்கிகள்*
*ஏனெனில்,*
*நாம் கண்டு கொண்டது*
*உன் எதிரியை மட்டுமல்ல*
*உன்னைச்*
*சொல்லிச் சொல்லியே*
*எம் ஆத்மாவைக் கொன்றோரையும் தான்*
*உன்னிடம் நாம்*
*வேண்டுவதெல்லாம்...*
*இனிவரும் காலங்களிலாவது,*
*உன் படைப்பில்*
*நீதி நிலவட்டும்!*
*நீ வகுக்கும் தர்மங்களில்*
*நியாயங்கள் பொதுவாகட்டும்!*

**மல்லீஸ்வரி.ஆ**
டென்மார்க்

## தேசம் காப்போம் அதை மீட்போம்

கார்த்திகை கரைந்திட கனிந்த
கார்குளிர் மார்கழி நீயே வருக
போர்கிடை பெரு சூழல் எம்மிடை
குங்கும சிமிழ் தொலைத்த பூவையென
கருயிடை தளிரின்றி நரம்பு பிய்ந்த
மூச்சு மறந்த காகித மலர் குவியல்
காலமெல்லாம் நீளுமா இந்த சோகக் கதை
கோலம் பூண்ட நடை ஆண்டும்
தன் வாழ்வின் கடை நாளை கணக்கிடும்
இடைவெளியில் நான் எண்ணுகின்றேன்
இனி வரும் ஆண்டே எமக்குரியதென்று

போர்க் குடை கொண்டு எமை மூட நினைக்கும்
படைக் கனம் கொண்ட சிங்கள பேரினபூதம்
நீடுடை வாழுமா இல்லை நிலையின்றி மாழுமா?
நெருப்பான எம் தேசத் தணலில் குளிர் தூரத்த
சல்லடை போடும் சிங்க கோஷம் எம் முன்
தாயக மீட்புத் தூரில் தொலைந்து போகும்
காகிதமாய் கருகிடாது எம் தேசத்தின் வாசம்
மலர்கின்ற மறுமலராய் பின் துளிர்வோம் நாம்
உயிர்த் தியாகத் தீயில் எமை தொலைப்போம்
எம் தேசம் காப்போம் அதை மீட்போம்.

**நெடுநகர் நேசன்**
பிரான்ஸ்

# சிறுவர்களின் பாலியல் சந்தையாக மாறும் ஆசியா




ஆசியா வாசனைத் திரவியங்களின் பொக்கிஷமாகவும், உல்லாசப் பயணிகளின் சொர்க்க புரியாகவும் விளங்கியது. அந்தக்காலம் இன்று அதே ஆசியா, சிறுவர்களின் பாலியல் சந்தையாக மாறியுள்ளது. சிறுவர் பாலியல் மையங்களின் வரிசையில் ஆசியாவே உலகில் முதலாவது இடத்தில் நிற்கிறது. உல்லாசப் பிரயாணிகளாக கடற்கரையில் விடுமுறையைக் கழித்த மேற்கு நாட்டவர் இன்று அதே கடற்கரையில் சிறுவர்களைத் தேடி அலைகிறார்கள். வளர்ந்துவரும் ஆசியாவின் பொருளாதார நிலைகண்டு உலகம் வியக்க, இப்படியான விடயம் வேறுவிதமான ஒரு எண்ணத்தை உண்டாக்குகிறது.

சிறுவர் பாலியல் என்பதை இரண்டு வகைகளாக வேறுபடுத்துகிறார்கள். முதலாவதாக, உல்லாச பயணிகளாக சென்று சிறுவர்களை அனுபவிப்பது. அடுத்தது, ஆசிய நாடுகளில் சென்று சிறுவர்களை மிகவும் குறைந்த விலையில் வாங்கி தமது நாடுகளுக்கு கொண்டுவந்து அனுபவிப்பது அல்லது விற்பது. இவற்றுள் இன்று மிகவும் பாதிக்கப்பட்ட நாடுகளாக இந்தியா, பிலிப்பைன், சிறீலங்கா, மலேசியா, இந்தோனேசியா, மற்றும் தாய்வான், தாய்லாந்து போன்ற நாடுகள் உள்ளன. சிறுவர் பாலியல் ஆசியாவில் அதிகரித்திருப்பதற்கு அப்பிராந்திய நாடுகளின் ஏழ்மை நிலைமையும் பெற்றோர்களின் அதிகரித்த ஆசைகளுமே காரணங்களாக கூறப்படுகின்றன. இதேவேளை மேற்கு நாட்டு "பாலியல் ஆர்வலர்கள்" ஆசிய நாட்டு சிறுவர்கள் மேல் கண் வைப்பதற்கு மொழிப் பிரச்சினை இல்லாததுவும் ஒரு காரணம் எனக் கூறப்படுகிறது.

அண்மையில் எடுக்கப்பட்ட கணிப்பொன்றின்படி வயது குறைந்த விபச்சாரிகளின் தொகை மிக அதிகமான நாடாக தாய்லாந்து காணப்படுகிறது. அங்கு சுமார் 400.000 சிறுவர்கள் விபச்சாரத்தில் ஈடுபடுகின்றனர். இரண்டாம் இடத்தில் இந்தியாவில் 400.000 சிறுவர், சிறுமிகள் இவ் வகையான தொழில்களில் ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது. மூன்றாம் இடத்தில் பிலிப்பைனில் 200.000 வீதிச் சிறுவர்களில் 60.000 பேர் தமது தங்களது உடலை விற்கிறார்கள். இதற்கடுத்ததாக தாய்வானில் 40 முதல் 60 ஆயிரம் வரையிலானவர்களும் சிறீலங்காவில் 28.000 சிறுவர்களும் விபச்சாரத்தில் ஈடுபடுவதாக அந்தக் கணிப்பு கூறுகிறது. அதேபோல் ஒவ்வொரு நாட்டு சிறுவர்களுக்கும் விலைகள் மதிக்கப்படுகின்றன. ஒரு சிறுவனையோ அல்லது சிறுமியையோ புது டில்லியில் 1.40 அமெரிக்க டொலர்களுக்கு பெற்றுக்கொள்ள முடியுமாம். ஒரு 6 வயது சிறுமியின் விலை ஹொங்கொங்கில் 140 அமெரிக்க டொலர்களாம். இந்தோனேசியாவில் ஒரு சிறுமியின் விலை 250 அமெரிக்க டொலர்கள் என கூறுகிறார்கள்.

சிறுவர் பாலியலை நாடி உல்லாசப் பயணிகளாகச் செல்லும் நபர்கள் அநேகமாக சிறு குழுக்களாகவோ அல்லது நண்பர்களுடனோ வருவதில்லை. அதே

## எதிர்காலத்தை தொலைத்து நிற்கும் ஆயிரமாயிரம் சிறுவர்கள்

போல் பயண முகவர்களையும் நாட மாட்டார்களாம். அதற்காக தமது நாடுகளிலேயே பல அமைப்புக்களை அவர்கள் ஏற்படுத்தி வைக்கிறார்கள். அமெரிக்கா, ஜேர்மனி, ஒல்லாந்து போன்ற நாடுகளிலே இவற்றிற்கென தனியான பத்திரிகைகள் தகவல் தொடர்புகள் மற்றும் INTERNET தகவல் வலையிலும் கூட சிறுவர் பாலியல் பற்றிய ஏராளமான தகவல்களை பெற்றுக் கொள்கிறார்கள்.



சிறீலங்கா சிறுவன் ஒருவன் பாலியல் வன்முறைக்குள்!

அநேகமாக தனியாக பயணத்தை மேற்கொள்ளும் இவர்கள் சம்பந்தப்பட்ட நாடுகளில் சிறுவர் தொடர்புகளை மிக எளிதாய் பெற்றுக் கொள்கிறார்கள்.

சிறீலங்காவில் சிறுவர் பாலியல் வியாபாரம் பல வழிகளாலும் நடக்கின்றது. தந்தைமார்களால் விலைபேசி விற்கப்படுதல், ஏமாற்றப்பட்டு இத் தொழிலுக்குள் திணிக்கப்படுதல், போன்றவைகளுடன், தற்போது சமூக சேவை அமைப்புக்கள் என்ற பெயரில் இயங்கும் பல அமைப்புக்களும் சிறுவர் பாலியல் வியாபாரத்தில் ஈடுபடுவதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் வடக்குப் பக்கமாக நீர்கொழும்புப் பகுதியிலும் தென் பகுதிக் கரையோரப் பகுதிகளிலும் ஏராளமான அனாதை விடுதிகளும் வெளிநாட்டு அமைப்புக்களால் நடத்தப்படுகின்றன. இவர்கள் தம்மால் பராமரிக்கப்படும் சிறுவர்களை மேற்கு நாடுகளில் இருந்து வரும் "சிறுவர் பாலியல் ஆர்வலர்கள்" களுக்கு உல்லாச ஓட்டல்களில் விநியோகம் செய்யப்படுகின்றனர். அது மட்டுமல்ல கடற்கரைகளில் சிறுவர்களை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளும் இரகசிய நிலையங்கள் கூட இயக்கப்படுகின்றன. மலேசியாவில், சிறுவர்களைப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தும் முறையோ சற்று வித்தியாசமானவை. இஸ்லாமிய சட்டங்களைக் கொண்ட மலேசியாவில் விபச்சாரம் தண்டனைக்குரிய குற்றமாகும். ஆனால் மிக இளைய வயது உள்ளூர் வெளிநாட்டு சிறுமிகள் மிகவும் திட்டமிட்டமுறையில் இவ் வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். மலேசியாவின் கிராமப் புறங்களைச் சேர்ந்த சிறுமிகள் இளம் யுவதிகளை நகரங்களில் உள்ள நிறுவனங்களிலும் வீடுகளிலும் வேலை பெற்று தருகிறோம் என்று கூறி அழைத்து வந்து அவர்களைப் பலவந்தமாக விபச்சாரத்தில் ஈடுபடுத்துகிறார்கள். இதை விட இந்தியா, நேபாளம், போன்ற நாடுகளில் இருந்து முகவர்களால் சிறுமிகள் வீட்டு வேலை, உல்லாச ஓட்டல்களில் வேலை வாங்கித் தருகிறோம் என்று பொய் கூறி அவர்களது உண்மையான 14 வயது என்பதை மறைத்து 19 அல்லது 20 என்று மாற்றம் செய்து சிங்கப்பூர் கிழக்கு மலேசியா போன்ற நாடுகளுக்கூடாக கோலாலம்பூர் போன்ற நகரங்களுக்கு கடத்தி வரப்படுகிறார்கள். கொண்டு வரப் பட்டவர்கள் மிகவும் இரகசியமான முறையில் வாடிக்கையாளர்களுக்கு விநியோகிக்கப்படுகிறார்கள். இதற்காக இச் சிறுமிகள் பெற்றுக்கொள்வதென்னவோ இரண்டு வேளை உணவும், உடைகளும் மாத்திரமே. பணம் இவர்களிடம் போய் சேர முகவர்கள் விடமாட்டார்கள். கோலாலம்பூரில் விபச்சாரத்தில் ஈடுபடும் 12 வயது சிறுமியொருத்தி, "வறியோர் வசிக்கும் பகுதியில் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த நாம் மிகவும் கஸ்டத்துடன் வாழ்க்கையை நடத்தினோம். தனது கடனை அடைப்பதற்காக தந்தை என்னைச் சில இளைஞர்களிடம் 20 அமெரிக்க டொலர்களுக்கு வியாபாரம் செய்தார். அந்த இளைஞர்களின் கொடுமை தாங்காமல் நான் முதலில் அழுதபோது ஹெரோயின் போதைப்பொருளை செலுத்தினார்கள். அன்று பழகிய பழக்கம், எப்போது எனக்கு விடிவு வருமோ" என போதை மயக்கத்தில் கூறினாள்.

கம்போடியா சிறுவர் பாலியல் ஆர்வலர்களின் சொர்க்க புரியாக மாறியுள்ள இன்னொரு நாடாகும் இதன் தலைநகர் 'பனொம் பென்' இல் அதிகரித்து வரும் கேளிக்கை விடுதிகளிலும், விபச்சார விடுதிகளிலும் காணப்படும் மேற்கு நாட்டவர்களே இதற்கு சாட்சி. வீடுகளில் பொம்மைகளை வைத்து விளையாடிக் கொண்டிருக்கும் சிறுமிகள், சிறுவர்கள் இங்கே பாலியல் விளையாட்டுப் பொருளாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வியட்னாமில் இருந்தும் கம்போடியாவில் கிராமங்களில் இருந்தும் இச் சிறுமிகள் தங்களது விருப்பத்திற்கு மாறாக கடத்தப்பட்டு விபச்சாரம் புரியவிடப்படுகிறார்கள். தாய்வான், சிங்கப்பூர், ஹொங்கொங் போன்ற இடங்களில் இருந்து இங்கு வரும் சீனர்கள் 'கற்பு' என்பதற்காக எவ்வளவு பணத்தையும் செலவிடத் தயாராக இருக்கிறார்கள். கற்புடன் காணப்படும் ஒன்றுமறியாத சிறுமியை 'பாலியல் வன்முறைக்கு' உட்படுத்தும் இவர்கள், அதற்கான விலையாக 500 அமெரிக்க டொலர்கள் வரை செலவிடுகிறார்கள். வியட்னாமில் அரச அதிகாரி ஒருவா கருத்துத் தெரிவிக்கையில் நாட்டில், இன்று விபச்சாரத்தில் ஈடுபட்டுள்ள இளம் வயதினரில் பாதிக்கு மேற்பட்டவர்கள் தங்களது சொந்த குடும்பத்தாரால் ஏமாற்றப்பட்டே இத் தொழிலுக்கு வந்திருக்கிறார்கள். என்றவர், தவப்பனாரால் விடுதிக்கு விற்கப்பட்ட பெண்கள் சிறியதாயால் போதை வஸ்து கொடுக்கப்பட்டு இங்கு சேர்க்கப்பட்டவர்கள் என பலரைத் தாம் விடுவித்து மறுவாழ்வு மையங்களுக்கு அனுப்பி உள்ளதாக கூறினார்.

இதுவரை கூறியவைகள் ஒரு நாட்டிற்குள் சென்று பாலியலை அனுபவிப்பவர்களில் சில. இனிக் கூறப்போவது மேற்கு நாட்டவர்களால் பொய்ச் சான்றிதழ்கள் சமர்ப்பித்து அழைத்து வரப்பட்டு மேற்கு நாடுகளில் விற்கப்படும் சிலரைப் பற்றியது.

இத்தாலியின் ரோம் விமான நிலையத்தில் இரண்டு நடுத்தர வயதுடைய மனிதர்களுடன் நான்கு 10 முதல் 14 வயது மதிக்கத்தக்க சிறுவர் சிறுமியரும் வந்து கொண்டிருந்தனர். திடீரென வாசலுக்கு வந்த நால்வரும் கதறி அழத்தொடங்கினார்கள். அதில் ஒரு சிறுமி, ஒரு நடுத்தரவயது மனிதனைக்காட்டி இவர் எனது தகப்பன் இல்லை என்னைப் பலவந்தமாக கொண்டுவருகிறார்கள் என பிரெஞ்சு மொழியில் கூறியுள்ளார். உசாரடைந்த பொலீசார் பெரியவர்களை கைதுசெய்து பையைப் பரிசோதித்த போது அதற்குள் நூற்றுக்கணக்கான சிறுமிகளின் படங்கள் கொண்ட கோவை ஒன்றை கைப்பற்றினார்கள். ரோமில் கைது செய்யப்பட்ட ஒருவரைப்போல் எத்தனை ஆயிரம் பேர்கள் ஐரோப்பிய நாடுகளுக்குள் சிறுவர்களைக் கொண்டு வருகின்றனர் என்பது பரமரகசியம்.

இதே போல் கணனித்துறையில் கல்வி கற்க விரும்பிய ஒரு பிலிப்பைன் நாட்டின் சிறுமி தனது உறவினர்களாலேயே போதை மருந்து ஏற்றப்பட்டு மேற்கு நாட்டவர் ஒருவருக்கு விற்கப்பட்டிருக்கிறார். அவர் எப்படி ஐரோப்பிய நாடொன்றிற்கு கொண்டுவரப்பட்டார் என்பதை தன்னால் அறிய முடியாமல் இருப்பதாகக் கூறியவர் தான் ஒரு வகையாக மீட்கப் பட்டாலும் இன்று நடைபிணமாகவே வாழ்வதாகக் கூறினார். இப்படி எத்தனை எத்தனை கதைகள்.

இந்த சிறுவர் பாலியலை கட்டுப்படுத்தும் வகையில் சர்வதேச பொலிசின் உதவியை பல நாடுகள் கோரியதன் பேரில், 30 நாடுகளில் பாலியல் வன்முறை எதிர்ப்பு உளவுப் பிரிவை அது அமைத்துள்ளது. கடந்த ஆறு வருடங்களில் ஏராளமான விபச்சார முகவர்களும் இடைத் தரகர்களும் கைது செய்யப்பட்டாலும் இன்னும் இந்த சிறுவர் பாலியல் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கிறது. இந்த ஆயிரமாயிரம் அப்பாவிச் சிறுவர்களின் எதிர்காலம் பாழாகிக் கொண்டிருப்பதும் இதற்கு பெரும் அதிகாரிகள் உட்பட பெரும் புள்ளிகள் துணையாக இருப்பதுவும் தான் உண்மை.

**— உதயன்**




# கிழக்கு ஐரோப்பா நோக்கிய நேட்டோ படை விஸ்தரிப்பு - ரஷ்யப் பிரதமர் எச்சரிக்கை

கிழக்கு ஐரோப்பா நோக்கிய நேட்டோ படை விஸ்தரிப்பு ரஷ்யாவில் தேசிய வாத உணர்வுகளைத் தூண்டும் தன்மை கொண்டது என ரஷ்யப் பிரதமர் விக்ரர் செர்னோமிர்டின் எச்சரித்துள்ளார்.

மேற்குலகத் தலைவர்கள் நேட்டே அணி விஸ்தரிப்பு ரஷ்யாவுக்கு ஆபத்தாக அமையாது என்பதை எமது மக்களுக்கு இடித்துரைக்குமாறு கோருகின்றனர். இது எவ்வாறு சாத்



தியம். இன்று ரஷ்யாவில் நிலவும் அரசியல் ஸ்திரமற்ற சூழ்நிலையை மேலும் மோசமடையச் செய்யவே இந்த நடவடிக்கை அமையும் எனத் தெரிவித்துள்ள அவர், எதிர்வரும் ஜூலை மாதத்தில் ரஷ்ய ஜனாதிபதியும் அமெரிக்க ஜனாதிபதியும் சந்திக்க முன் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என எச்சரித்துள்ளதோடு நேட்டோ படை விஸ்தரிப்பு ரஷ்ய அமெரிக்க உறவை விரிசலடையச் செய்யும் என அச்சுறுத்தியுள்ளார். இயல்பாகவே கடுமையான வார்த்தைப் பிரயோகங்களை விரும்பாத இவரது இந்த அறிக்கை பலருக்கு ஆச்சரியத்தை ஊட்டியுள்ளது.

இது ஒரு புறமிருக்க விரைவில் ஸ்பானியத் தலைநகர் மட்றிட்டில் கூடவிருக்கும் நேட்டோ படையணியின் உறுப்பு நாடுகள், கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் முன்னாள் வார்சோ ஒப்பந்த நாடுகளை தம்முடன் இணையுமாறு கோர உள்ளன என உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.போலந்து, ஹங்கேரி, செக் ஆகிய நாடுகள் இவ் அமைப்பில் இணையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# ஆசியான் மாநாட்டில் கிழக்குத் திமோர் பற்றி பேச இந்தோனேசியா மறுப்பு

பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி சிங்கப்பூரில் நடைபெற இருக்கும் ஆசியான் மாநாட்டில் கிழக்குத் திமோர் விடயங்களை ஆராய ஐரோப்பிய நாடுகள் திட்டமிடுவதை இந்தோனேசியா வன்மையாகக் கண்டித்துள்ளது. மேலும் கிழக்குத் திமோர் விடயம் கிழக்குத் திமோரை காலனியாக வைத்திருந்த போர்த்துக்கல் நாட்டால் முன்கொணரப்படுவது கண்டிக்கப்பட வேண்டியது எனத் தெரிவித்துள்ள இந்தோனேசியா கிழக்குத் திமோர் பற்றிய விடயம் ஐ.நா சபையில் மட்டுமே ஆராயப்பட வேண்டியது என இந்தோனேசியா வலியுறுத்தியுள்ளது.

1975-ம் ஆண்டுவரை கிழக்குத் திமோரை போர்த்துக்கல் ஆக்கிரமித்திருந்தது. கிழக்குத் திமோரின் நிர்வாக அதிகாரம் போர்த்துக்கலுக்கே உண்டு என போர்த்துக்கல் இன்னமும் கருதுகின்றது. ஆசியான் மாநாட்டை தொடர்ந்து விரைவில் ஆசிய ஐரோப்பிய அணியின் மாநாடு பெப்ரவரி மாதம் 15-ம் திகதி நடைபெறவுள்ளது.

# அகதியாகச் சென்ற பெண் அமெரிக்காவின் முதல் பெண் இராஜாங்க செயலாளராகினார்

1948-ம் ஆண்டு சிறு குழந்தையாக தனது குடும்பத்துடன் அமெரிக்காவில் அரசியல் அகதியாகக் குடியேறிய பெண் அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளராகியுள்ளார் என்ற பரபரப்பான செய்தி இவ்வாரப் பத்திரிகைகளில் வெளியாகியுள்ளது. அமெரிக்காவில் இவ் உயர் பதவியை வகிக்கும் முதல் பெண் என்ற பெருமையும் இவருக்குக் கிடைத்துள்ளது.

இரண்டாம் உலகப் போரின் போது பாதிக்கப்பட்ட இவரது குடும்பத்தினர் முதலில் பிரித்தானியாவில் குடியேறினர். செக் கோசிலவாக்கியர்களான இவர்கள் போர் முடிந்த பின் மீண்டும் அங்கு சென்ற போதும் அங்கு உருவான சம உடமைக் கட்சியினரின் ஆட்சியை எதிர்



-த்த பெரும் செல்வந்தரான இவரது தந்தை 1948-ம் ஆண்டு அமெரிக்காவில் அரசியல் அகதியாகக் குடியேறியவர் ஆவார்.

# ஜெருசலேம் வருமாறு பாப்பரசருக்கு அழைப்பு!

கடந்த வாரம் வத்திக்கானுக்கு விஜயம் செய்த இஸ்ரேலியப் பிரதமர் நெட்டன்யாகு பாப்பரசரைச் சந்தித்து 20 நிமிடம் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். இப் பேச்சுவார்த்தையில் ஜெருசலேம் நகரின் அரசியல் அந்தஸ்தும் பாலஸ்தீனமும் பற்றிப் பேசப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

பேச்சுவார்த்தையில் ஆராயப்பட்ட விடயங்கள் வெளியிடப்படவில்லை. எனினும் பேச்சுவார்த்தையின் இறுதியில் பாப்பரசரை ஜெருசலேமுக்கு வருமாறு நெட்டன்யாகு அழைப்பு விடுத்த போது இஸ்ரேலை ஆண்டவன் காப்பாராக என பாப்பரசர் பதிலளித்துள்ளார் என்ற செய்தி வெளியாகியுள்ளது.

# ருவண்டாவில் ஐ.நா ஊழியர்கள் கொலை

கடந்த 04.02.97 செவ்வாய்க்கிழமை ருவண்டாவில் ஐ.நா சபை மனித உரிமைக் குழு ஊழியர்கள் நால்வர் தாக்குதல் ஒன்றுக்குப் பலியாகியுள்ளனர். இத்தாக்குதல் இனம் தெரியாத நபர்களால் நிகழ்த்தப்பட்டுள்ளதோடு தாக்குதல் நடாத்தியவர்கள் உரிமை கோரவும் தவறியுள்ளனர்.

இது ஒரு புறமிருக்க கடந்த 02.02.97ஞாயிறன்று கத்தோலிக்க குரு ஒருவரும் இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

# மேற்றிராணியார் பெஞ்சமின் சுட்டுக் கொலை

பிலிப்பைன்சில் கத்தோலிக்கர்கள் குறைவாக வாழும் JOLO நகரில் உள்ள தேவாலய வாசலில் வைத்து மேற்றிராணியார் பெஞ்சமின் டி ஜேசு



இனம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கடந்த 04.02.97 செவ்வாய்க்கிழமை 10 வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்ட வயதுடைய இரு இளைஞர்களால் இவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் இச் சம்பவத்தில் வீதியால் சென்று கொண்டிருந்த ஒரு பெண் கொல்லப்பட்டுள்ளதோடு மேலும் ஐவர் காயமடைந்துமுள்ளனர்.

மோறோ கெரில்லாக்கள் அரசுடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்ட பின் நடைபெற்றுள்ள முக்கிய வன்முறை நிகழ்வு இது என செய்திகள் தெரிவிக்கின்றன. இக் கொலைக்கு இதுவரை எவரும் உரிமை கோரவில்லை.

# ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் மேலும் குடியேற்றம்

மேற்குப் பள்ளத்தாக்கு, காசா போன்ற இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் மேலும் 20 ஆயிரம் யூதக் குடியேற்றங்கள் இவ்வாண்டு நடாத்தப்பட உள்ளன என இஸ்ரேலியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாலஸ்தீன சமாதான ஒப்பந்தத்துக்கு முரணான இம் முடிவை ஊர்ஜிதப்படுத்தும் வகையில், குடியேற்றத் திட்டத்தை விரைவில் அமுல் படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரியான Erq என்பவர் புதிதாகக் கட்டப்பட்ட வீடுகளை நேரில் சென்று பார்வையிட்டுள்ளார் (படம்).



# சுவிற்சர்லாந்தில் உள்ள சயன்ரோலஜி மீதும் அரசின் கண்

அமெரிக்காவில் தலைமையகத்தைக் கொண்ட சையன்ரோலஜி என்ற மதக் குழுவின் செயற்பாடுகள் குறித்து பல ஐரோப்பிய நாடுகள் அச்சமடைந்துள்ள அதே வேளை சுவிற்சர்லாந்திலும் இந்த மதக் குழுவால் பாதிப்பு ஏற்படுமா என ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சுவிற்சர்லாந்தில் உள்ள சைன்ரோலஜி கிளைகளில் ஏறக்குறைய 5000 பக்த கோடிகள் உள்ளனர் எனக் கருதப்படுகின்றது.

# ஆசியா மீதான எமது அக்கறையாலேயே எமது படைகளை அங்கு வைத்திருக்கின்றோம்

## -அமெரிக்கா-

ஆசியாவில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான அமெரிக் கப்படையினர் உள்ளனர். இந்தப் படைகள் அங்கு நிலை கொண்டிருப்பது ஆசியா மீது அமெரிக்காவுக்குள்ள உன்னதமான அக்கறையையே குறிக்கின்றது என அமெரிக்க படையணியின் அட்மிரல் ஜோசப் தெரிவித்துள்ளார்.

இந்த படையணி இருப்பது தொடர்பான விவாதம் மீண்டும் சூடு பிடித்துள்ள வேளையில் இக் கருத்து பல உயர் மட்டங்களில் வெளியிடப்பட்டுள்ளதோடு அது அதிகரிக்கப்படுவது ஆசிய பொருளாதார நலன்களுக்கும் நல்லது என்ற கருத்தும் முன் கொணரப்பட்டு வருகின்றது.

# பிரெஞ்சு உள்ளூராட்சித் தேர்தலில் இனவாதக் கட்சி வெற்றி

பிரான்சின் மேலும் ஒரு உள்ளூராட்சித் தேர்தலின் முதல் சுற்றில் இனவாதக் கட்சி வெற்றி பெற்றுள்ளது. 45 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றே இக் கட்சி வெற்றி பெற்றுள்ளது.




இரண்டாம் சுற்றில் சோசலிசக் கட்சியினர் இக் கட்சியை தோற்கடிக்க வழி செய்யும் வகையில் ஆளும் வலதுசாரிக் கட்சியினர் தமது வேட்பாளரை பட்டியலில் இருந்து விலக்கியுள்ளனர்.

இத் தேர்தலில் இனவாதக் கட்சியின் சார்பில் இனவாதக் கட்சியின் உப தலைவரின் மனைவி போட்டியிட்டார். பெண்களின் வாக்குகளைப் பெறுவதற்காக, ஒரு பெண் தேர்தலில் போட்டியிட்டார் என்றும் 'பெண்கள் ஒற்றுமை' என்ற போலிக் கோசமும் இத் தேர்தலில் பாவிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# அபிவிருத்தி உதவி வீழ்ச்சி

வளர்முக நாடுகளுக்கு வளர்ச்சியடைந்த நாடுகள் வழங்கும் அபிவிருத்தி உதவித் தொகை என்றுமில்லாத அளவுக்கு வீழ்ச்சி கண்டுள்ளதாக கடந்த வாரம் வெளியான புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச நாடுகள் தமது தேசிய உற்பத்தியில் வழங்கிய உதவி




உதவி வழங்கும் நாடுகளின் சர்வதேச ஆணைக்குழு வெளியிட்ட தகவல்களின் படி மிகக் குறைந்த உதவித் தொகையை வழங்கிய நாடு அமெரிக்கா எனத் தெரிய வந்துள்ளது.

ஐநாசபையில் செய்துகொள்ளப்பட்ட சர்வதேச ஒப்பந்தமொன்றின் படி வளர்ச்சியடைந்த நாடுகள் தமது தேசிய உற்பத்தியில் 0.7 வீதத்தை வளர்முக நாடுகளுக்கு வழங்கி உதவ வேண்டும். இந்த ஒப்பந்தத்தை டென்மார்க், நோர்வே, பெல்ஜியம், சுவீடன் தவிர வேறு எந்த வளர்ச்சியடைந்த நாடும் அமுல் செய்யவில்லை என மேலும் தெரிய வந்துள்ளது.

# ஜேர்மனியில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிப்பு

ஜேர்மனியில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருவதை கடந்த வார புள்ளி விபரங்கள் வெளியிட்டுள்ளன. மொத்த சனத்தொகையில் 12.2 வீதத்தினர் வேலையற்றிருப்பதாக அச் செய்திகள் தெரிவிக்கின்றன. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் இருந்த வேலையில்லாத் திண்டாட்டத்தை விட இது அதிகமானதென அச் செய்திகள் மேலும் தெரிவித்துள்ளன. ஜேர்மனியில் வேலை வாய்ப்பை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் வெளிநாட்டவர்களுக்கு வழங்கும் வேலை அனுமதிகளை கட்டுப்படுத்த உள்ளதாக ஜேர்மன் பிரதமர் ஹெல்மெட் ஹோல் தெரிவித்துள்ளார்.

இச் சூழ்நிலையால் ஜேர்மன் மார்க்கின் விலை குறைந்துள்ளதோடு அமெரிக்க டொலரின் விலையும் அதிகரித்துள்ளது.

## அரபாத் நெட்டன்யாகு விரைவில் சந்திப்பர்

இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெட்டன்யாகுவும், பாலஸ்தீனத் தலைவர் யாசீர் அரபாத்தும் விரைவில் சந்திப்பர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. இஸ்ரேலியச் சிறைகளில் சிறைவைக்கப்பட்டுள்ள பெண் கைதிகள் விரைவில் விடுவிக்கப்படுவர் என இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெட்டன் யாகு அறிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து விரைவில் பாலஸ்தீனத் தலைவர், நெட்டன்யாகு சந்திப்பு நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரித்தானியாவில் அணு உலை விபத்து

பிரித்தானியாவில் கடந்த வாரம் இரு அணு கசிவு விபத்துக்குள் இடம் பெற்றுள்ளன. இந்த இரு விபத்துக்களும் 24 மணி நேர இடைவெளியில் இடம் பெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

Sellafield நகரில் உள்ள BNFL நிலயத்தில் கடந்த 04.02.97 அன்று இவ் விபத்துக்கள் இடம் பெற்றுள்ளன.

# வாரக் குறிப்பு

### 02.02.97 ஞாயிற்றுக்கிழமை

- பெல்கிரேட் நகரில் எதிர்க் கட்சி ஆர்ப்பாட்டக்காரர் மீது பொலிசார் குண்டாந்தடிப் பிரயோகம் செய்துள்ளனர்.
- பொஸ்னியாவில் Brcko நகர் தொடர்பான சர்ச்சை மீண்டும் வன்முறையைக் கிளப்பலாம் என அஞ்சப்படுகின்றது.
- சோவியத் ரஷ்யாவின் முன்னாள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் எடுவார்ட் செவர்னாட்சே பாரிஸ் விஜயம். இவர் தற்போது ஜியோர்சியாவின் ஜனாதிபதியாக உள்ளார்.
- பிரெஞ்சு ஜனாதிபதி ரஷ்யாவில் சுற்றுப் பயணம் பொறிஸ் ஜெல்சினின் உடல் நிலை முன்னேறுவது குறித்து மகிழ்ச்சிச் செய்தி.

### 03.02.97 திங்கட்கிழமை

- பிரபல வர்த்தகராக இருந்து அரசியல் வாதியாக மாறிய பேர்னார்ட் தப்பி சிறை சென்றார். சிறைக் கைதி இலக்கம் 265 449 ஜி.
- பாலஸ்தீன படைகளின் சித்திரவதையில் பலர் இறப்பதை பாலஸ்தீன நீதி அமைச்சர் கடுமையாகக் கண்டித்துள்ளார்.
- நேட்டோ படையணி நிர்வாக சபையில் பிரான்ஸ் இணைந்து கொண்டதை சோசலிசக் கட்சி செயலாளர் நாயகம் லியனல் ஜொஸ்பன் கடுமையாகக் கண்டித்துள்ளார்.
- மலேசியாவுக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையேயான தரை வழிப் பாதை காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது.
- வட கொரியாவில் உணவுப் பஞ்சம். சர்வதேச உதவி கோரப்படவுள்ளது. சர்வதேச உதவி செல்வதற்கு நிபந்தனைகள் விதிக்க அமெரிக்கா திட்டம்.

### 04.02.97 செவ்வாய்க்கிழமை

- சர்வதேச நிதி மோசடிகளை கையாள ஆணைக்குழு ஒன்று சர்வதேச ரீதியில் உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை 400 நீதியரசர்கள் மகஜர் ஒன்றின் மூலம் கோரியுள்ளனர்.
- பாகிஸ்தானின் புதிய பிரதமராக நவாஸ் செரிப் தெரிவு. ஊழல் குற்றச்சாட்டுக்காக முன்னர் பதவி நீக்கம் செய்யப்பட்டவர் இவர்.
- ஓ.ஜே சிம்சன் கொலைக் குற்றவாளியாகக் காணப்பட்டார்.
- போலந்தின் புதிய நிதியமைச்சர் தனியார் மயமாக்கலை துரிதப்படுத்த உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.
- ஜெயிர் நாட்டு அரசுக்குச் சார்பாக அந்நியப் படைகள் செயல்படுவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. பிரெஞ்சுக் கூலிப்படைகள் செயல்படுவதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

### 05.02.97 புதன்கிழமை

- இரண்டாம் போர்க் காலத்தில் பிரித்தானியாவின் பிரதமராக இருந்த வின்சன் சேர்சிலின் மருமகளும் பிரித்தானியாவில் பிறந்து பின்னர் அமெரிக்காவில் குடியேறி இறுதியாக பிரான்சில் அமெரிக்க தூதுவராகக் கடமையாற்றியவருமான பமேலா மாரடைப்பால் காலமானார்.
- துருக்கி நாட்டில் அரசுக்கும் இராணுவத்துக்கும் இடையே முரண்பட்ட நிலை தோன்றி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. நீண்ட காலத்துக்குப் பின் கடந்த வருடம் துருக்கியில் இஸ்லாமியக் கட்சி பதவியேற்றது.
- ஹிட்லரின் படையணியில் செயற்பட்டவர்களுக்கு ஜேர்மன் அரசு ஓய்வூதியம் வழங்குவது சட்ட விரோதமானது என்ற விவாதம் ஜேர்மனியில் வலுவடைந்து வருகின்றது.
- சேர்பிய எதிர்க் கட்சி உறுப்பினர்கள் மூவர் பிரெஞ்சு பாதுகாப்பு அமைச்சரை பாரிசில் சந்தித்து பேசினர்.
- ஐரோப்பிய ஆணைக்குழுவை மாட்டுபைத்திய நோய் தொடர்பான முடிவுகளில் இருந்து தள்ளி வைக்க, ஐரோப்பிய பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட முயற்சி தோல்வி.

### 06.02.97 வியாழக்கிழமை

- இந்தியாவுக்கு ரஷ்யா இரு அணு மின் உலைகளை விற்பனை செய்ய முடிவு செய்துள்ளது. அமெரிக்கா இம்முடிவை வன்மையாகக் கண்டித்துள்ளதோடு அணு சக்தி பரவலுக்கு இது வழி வகுக்கும் என எச்சரித்துள்ளது.
- சுவிஸ் வங்கிகளை யூதர்கள் பகிஸ்கரிக்க வேண்டும் என யூதத் தலைவர் எடுத்த முடிவு கைவிடப்பட்டுள்ளது. யூதர்களிடம் நாஜிப் படைகள் திருடிய தங்கம் சுவிஸ் வங்கிகளில் வைப்பிலிடப்பட்டது தெரிய வந்ததைத் தொடர்ந்தே முதலில் இம் முடிவு எடுக்கப்பட்டது.
- ஜெயிர் நாட்டுப் போர் தொந்தரவாக உள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

### 08.02.97 வெள்ளிக்கிழமை

- ஐரோப்பிய நாணயத்துடன் இத்தாலியை இணைப்பது தொடர்பாக இத்தாலி அஞ்சத் தேவையில்லை என ஜேர்மன் பிரதமர் தெரிவித்துள்ளார்.
- ஜனாதிபதி கிளின்டனும், பொறிஸ் ஜெல்சினும் முன்பு திட்டமிட்டபடியல்லாது பின்லாந்தில் சந்திப்பர் என அறிவிக்கப்பட்டுள்ளது. இச் சந்திப்பு திட்டமிட்டபடி மார்ச் 20 ஆம் திகதி நடைபெறும்.
- பிரித்தானிய தேர்தலுக்கு முன் போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கு இடமில்லை என ஐ.ஆர்.ஏ அமைப்புத் தெரிவித்துள்ளது.
- நேட்டோ படை விஸ்தரிப்பை ரஷ்யா வீட்டோ செய்ய முடியாது என ஜேர்மன் பிரதமர் ஹெல்மட் ஹோல் தெரிவித்துள்ளார்.

### 09.02.97 சனிக்கிழமை

- இஸ்ரேலியச் சிறையில் இருந்து 25 பெண் கைதிகள் விடுதலை. 5000 கைதிகளில் 25 பேர் மட்டுமே பெண் கைதிகளாவர்.
- பேர்லினில் உள்ள டிஸ்கோதெக் மீது 1986-ம் ஆண்டு இடம் பெற்ற குண்டுத் தாக்குதலுக்கு லிபியாவே காரணம் என ஜேர்மனி தெரிவித்துள்ளது.
- பிரான்சில் காலமான அமெரிக்க தூதுவர் பமேலா வுக்கு பிரான்சின் உயர் பதக்கமான Grand Legion Of Honneur பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

# கலை நிகழ்வுகள்

## தமிழாலயங்கள் கொண்டாடிய தமிழர் திருநாள்

தமிழரது பாரம்பரிய கலாச்சாரப் பண்பாடுகளை வெளிநாடுகளிலே வாழும் ஏனைய தமிழீழச் சந்ததியினர் அறிந்து அவற்றைக் கடைப்பிடித்து ஒழுக வழி காட்டும் முகமாக ஜேர்மனியிலே உ. த. இயக்கம் கடந்த காலங்களில் பொங்கல் விழாவை பெருவிழாவாக கொண்டாடி வருகிறது.

தாயக விடுதலைக்கு தம் இன்னுயிர்களை ஈந்தோரை நினைவுகூர்ந்து விழா ஆரம்பமானது. ஹற்றிங்கன் நிர்வாகி திரு சிவகுமார், என்னெப்பெற்றால் நிர்வாகி திரு. அம்பலவாணபிள்ளை ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். மாணவர்கள் தமிழாலய கீதம் இசைத்தனர். திரு




இவ்வருடம் பொங்கல் தினமான 14.01.1997 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5.00 மணியளவில் காகன்/ என்னெப்பெற்றால்/ ஹற்றிங்கன்/ விற்றன் ஆகிய நகரங்களில் உள்ள தமிழாலயங்கள் இணைந்து என்னெப்பெற்றால் நகரிலுள்ள ஜிம்னாசியம் மண்டபத்தில் பொங்கல் விழாவைச் சிறப்பாக கொண்டாடினர்.

சிவகுமார் வரவேற்புரை வழங்கினார். உ.த. இயக்க கல்விப் பொறுப்பாளர் திரு. இரா. நாகலிங்கம் ஆசிரியர் தனது சிறப்புரையிலே உலகினிற்கு உணவளித்து உயிர் காக்கும் உழவனுக்கும், உழவுத் தொழிலுக்கு உற்ற துணையாக நிற்கும் சூரியனுக்கும் நன்றி செலுத்தும் விழா எடுக்கும் பெருமை தமிழினத்துக்கு உண்டு என்றும் கூறினார். மேலும் அவர் வெளிநாடுகளில் தமிழ் மக்கள் தம் கலாச்சார விழாக்களைக் கொண்டாடும் போதுதான் எமது எதிர்காலச் சந்ததியினர் அவற்றை கண்டு உணர்ந்து வருங்காலங்களிலும் தாம் இவற்றைப் பின்பற்றி வளர்ப்பர். தமிழர் சந்ததியினரை தமிழர்களாகவே வளர்த்து வாழ வழிகாட்ட வேண்டிய பொறுப்பு பெற்றோர் கையிலே தங்கியுள்ளது எனக் கூறினார். தமிழாலய மாணவர்களின் பேச்சுக்கள், நடனங்கள், நாட்டியங்கள், எப்போ பொங்குவது என்ற நாடகம் என்பன சபையோரின் கைத்தட்டல் நடுவே நிகழ்ந்தன. ஈற்றில், என்னெப்பெற்றால் நிர்வாகி திரு. அம்பலவாணபிள்ளையின் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவேறியது.

## வோல்தம் பொறஸ்ட் தமிழ் பாடசாலையின் கலை மாலை

வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச் சங்கத்தின் கீழ் இயங்கிவரும் தமிழ் பாடசாலை மாணாக்கர்களின் கலைமாலை ஒன்று எதிர் வரும் 15ம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

மழலைப் படைப்பாளிகளின் முத்தமிழ் கலை ஆக்கங்கள் இந்த நிகழ்ச்சியில் மேடையேறவுள்ளன.

இடம்: LIOYDS PARK THEATRE
WINNS TERRACE WALTHAMSTON
LONDON E - 17.

## பூவரசு வாசகர் அரங்கம் 97

(ஜேர்மனி)

பிறேமனிலிருந்து வெளிவரும் பூவரசு மாதச் சஞ்சிகையின் ஆறாவது ஆண்டு நிறைவையொட்டி "வாசகர் அரங்கம் 97" என்னும் கலை இலக்கியவிழா ஒன்று நடைபெற்றது. திருமதி வில்ரூட் கடெல்காவும், திருமதி ஆனந்த ஈஸ்வரி திவ்விய மூர்த்தியும் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். தாயக மண்ணின் விடிவுக்காக தம்முயிர் ஈந்த புனித ஆத்மாக்களுக்காக மௌனாஞ்சலியும் அதனைத் தொடர்ந்து திருமதி வசந்தா தேவி புவனேந்திரனின் இறை வணக்கப் பாடலும் இடம்பெற்றது.

"உலகமே நம் இல்லம் உள்ளமெல்லாம் நம் சொந்தம்" என்னும் பூவரசின் ஒற்றுமைப் பாடலை பலரும் இணைந்து பாடினர். தபேலா வாத்தியக் கலைஞர் பத்மசிறீ இப்பாடலுக்கு இசை வழங்கினார். மழலைகள் பங்கு கொண்ட 'புள்ளிக்கோழி' நடனத்தையடுத்து ரிகாந்தனும் பங்கு பற்றினார்.

கவிதைப் போட்டியில் ராட்டிங்கனைச் சேர்ந்த இரா. சம்பந்தன் முதற்பரிசைப் பெற்றார்.





வாழ்த்துரைகள் இடம் பெற்றன. ஆறாவது ஆண்டு நிறைவு பூவரசு மலரை அதன் ஆசிரியர் திரு. இந்துமகேஷ் வெளியிட கவிஞர் எழிலன் அதனைப் பெற்றுக் கொண்டார்.

ஈழத்தமிழர்கள் இன்றைய நிலைகுறித்து இறையருள் வேண்டும் எனும் புதிய பாணியில் அமைந்த இசை நடனம் ஒன்று இளந்தளிர்களின் திறமைகளுடன் மேடைக்கு வந்தது. புதுவை இரத்தினதுரை எழுதி வர்ணராமேஸ்வரன் பாடிய 'தேரில் ஏறி வாய் முருகா' எனும் பாடலும் இசை நடனத்தில் இடம் பெற்றிருந்தது. பூவரசு கலை இலக்கியப் பேரவை உறுப்பினர் திருமதி. சாந்தராணி பத்மகுமார் இந் நிகழ்ச்சியை நெறிப்படுத்தி வழங்கினார்.

அடுத்து 'உனக்காகவா' 'எனக்காகவா' என்ற விவாத மேடை முற்றிலும் வித்தியாசமான முறையில் இடம் பெற்றது. எழுத்தாளர்கள் இராஜன் முருகவேல் கொற்றையூர்வாசன் எழிலன் ஆகியோருடன் திரு. இலட்சு பூவரசை வாழ்த்தும் அவரின் கவிதை ஒன்றும் இடம் பெற்றது. சிறுவர்களுக்கு நடாத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்றோருக்கு பரிசளிப்பு வழங்கப்பட்டது. பூவரசு அதிர்ஸ்ட வாசகர் தெரிவுப் போட்டியில் பிறேமன் வாசகர்கள் ம்.ா, குலதாசன், ப. பத்மகரன் ஆகியோரும் ஐரோப்பிய வாசகர் மட்டத்தில் எழிலனும் அதிர்ஷ்ட வாசகர்களானார்கள்.

சிறப்பு நிகழ்ச்சியாக சிறுகதை நாடகம் என்னும் புதிய கலைவடிவம் அறிமுகமாயிற்று. இந்து மகேஷின் "உன்னைத் தேடிவேன்" என்னும் சிறுகதையே நாடகமாயிற்று. திருமதி பௌடிகரா ஞானசெல்வத்தின் நெறியாள்கையில் பாலசுப்பிரமணியம், ஞானசெல்வம், மனோஷிமன், அனுலா, பிரசன்னா, ஜயதீபன் ஆகியோர் நடித்தனர்.

தே. தங்கராசா, பிரசன்னா மகேஸ்வரன், பிரியா மகேஸ்வரன் ஆகியோர் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினர்.

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நோர்வே கிளையினரால் நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு

முதலாவது பரிசுக்குரிய இலக்கம் - **327**

இரண்டாவது பரிசுக்குரிய இலக்கம் - **779**

மூன்றாவது பரிசுக்குரிய இலக்கம் - **6729**

**ஆறுதல் பரிசுக்குரிய இலக்கங்கள்:**
8974, 1637, 9361, 9455, 3435, 372, 4960, 1837, 2361, 5761

## இவ்வாரம்


**ஜேர்மனியில்:**
**முல்லைச் சமர்/ திசைகள் வெளிக்கும்**
இடம்: ALTERSCHLACHTHOF KINO, ULTRICHERTOR - 04, 5 9494 SOST
காலம்: 15.02.1997 – நேரம்: 18மணி

இடம்: MUNCHEN
காலம்: 16.02.1997 ஞாயிற்றுக்கிழமை – நேரம்: 11 மணி

**நெதர்லாந்தில்:**
**முல்லைச் சமர் 'ஓயாத அலைகள்' / காற்றுவெளி**
காலம்: 16.02.1997 ஞாயிறு மாலை 2.00 மணி
SITTARAD, EISHEN HOWERSTRAAT 724T
CEIDEN, SCHAGEN, DENHAAK, BEVERWIJK, CANDGRAAF, ASSEN ஆகிய இடங்களில் தொடர்ச்சியாக காண்பிக்கப்பட இருக்கிறது.

**பிரான்சில்:**
பாரிசில் மீண்டும் அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க
**முல்லைச் சமர் 'ஓயாத அலைகள்' / 'உறங்காத கண்மணிகள்'**
காலம்; 16.02.1997 ஞாயிற்றுக்கிழமை இரவு 8.00 மணிக்கு
இடம்: LE TRIANON (M°: ANVERS)
மேலதிகத் தொடர்புகளுக்கு: 43 58 11 42

**மொனாக்கோவில்:**
**முல்லைச் சமர் 'ஓயாத அலைகள்'**
இடம்: SALLE MUNICIPALE 1993
RUE JULES FERRY, 06240 A BEAUSOLEIL
காலம்: 16.02.1997 ஞாயிறு – நேரம்: மாலை 2.30 மணி
மேலதிக தொடர்புகட்கு: 04 93 78 87 40




# பெண்மைப் பிணியியலும் நீரிழிவும்

சகோதரிகளே கீழ்வரும் அறிகுறிகளை சற்றுக் கவனமாக அவதானியுங்கள்.

1. எப்போதும் அதிக பசி எடுத்தல்_எவ்வளவுதான் சாப்பிட்டாலும் நிறை அதிகரிப்பதில்லை.
2. அதிக வரட்சி, தாகம்.
3. அடிக்கடி சிறுநீர் கழித்தல்; முக்கியமாக இரவில் இரண்டு தடவைக்கு மேல் சிறுநீர் கழித்தல். சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல்.
4. காரணமில்லாத சோர்வு, களைப்பு.
5. கால்களில் உணர்ச்சிக் குறைவு, விறுவிறுப்பு, மரத்துப் போதல்.
6. அதிக உடல் பருமன்.
7. உடலுறவில் திருப்தி இன்மை.
8. பெண் உறுப்பில் வலி அல்லது எரிச்சல்.
9. புண் ஏற்பட்டால் விரைவில் ஆறாத நிலமை.

உங்கள் அன்றாட வாழ்வில் இந்த அறிகுறிகள் தென்பட்டால் துரதிர்ஷ்ட வசமாக உங்களுக்கு நீரிழிவு நோய் இருப்பதற்கான சாத்தியங்கள் உண்டு.

நீரிழிவு, இந்த நோய் இன்று யாருக்கும் எந்த வயது நிலையிலும் வரமுடியும். பிறந்த குழந்தையைக் கூட இது விட்டு வைப்பதில்லை.

நீரிழிவு என்றால் என்ன? நாம் உண்ணும் உணவில் உள்ள மாச்சத்தானது சமிபாடடைந்து நொதியங்களால் குளுக்கோசாக மாற்றப்படுகிறது. இவ்வாறு மாற்றமடைந்த குளுக்கோச இரத்த ஓட்டத்தின் மூலமாக பல்வேறு இழையப் பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு சக்தி பிறப்பாக்கத்திற்கு வழி வகுக்கிறது. இந்தச் செயற்பாட்டில் குளுக்கோசானது இழையங்களின் உள் ஊடுருவ "இன்சுலின்" என்ற இயக்குநீர் (Horsmone) அவசியமாகிறது.

இந்த இன்சுலின் இயக்கு நீரானது கணயத்தில் (Pan Creas) சுரக்கப்படுகிறது. இந்தச் சுரப்பின் அளவு குறைவடையும் போதோ அன்றி வேறு சில இயக்குநீர் அல்லது செயற்பாடுகளில் குறைகள் ஏற்படும்போதோ இரத்தச் சர்க்கரையானது பயன்படுத்தப்படாமலும் இழையங்களுக்குள் ஈர்க்கப்படாமலும் விடப்படுகிறது.

இந்த நிலையில் குளுக்கோசானது, இரத்தத்தில் அளவில் குறையாமல் உயர்ந்தே இருப்பதோடு சிறுநீரிலும் வெளிப்படும் நிலையே நீரிழிவு ஆகும்.

**நீரிழிவு வகைகள்**

நீரிழிவானது இரண்டு வகைப்படும்.

1. **இன்சுலின் சார்ந்த நீரிழிவு**
2. **இன்சுலின் சாராத நீரிழிவு**

இதில் முதலாவது வகைதான் மிகவும் பரவலாகக் காணப்படுகிறது. அலர் அகவைப் பருவத்திற்குள் (15, 16 வயது) இந்த வகை நீரிழிவு வரக் கூடியது. இன்சுலின் அளவு குறைவாகவோ அல்லது இல்லாமலோ போய்விடுவதாலோ இது ஏற்படும். இந்த நோயாளிகளுக்கு இன்சுலின் உறுதியாகப் போட்டுக் கொண்டால் மட்டுமே செயற்பட முடியும்.

இரண்டாவது வகையான இன்சுலின் சாராத நீரிழிவு 40 வயதிற்கு மேல் வரக் கூடியது. முறையான உணவுப் பழக்கம், உடற் பயிற்சி, மாத்திரைகள் இவற்றின் மூலம் இந்த வியாதியை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கலாம்.

**பரிசோதனைகள் தரும் உண்மைகள்**

நீரிழிவு என்பது இன்று சிகிச்சை செய்து நாளை மறைந்து விடும் வியாதி அல்ல. இந்த நோயை நல்ல கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கலாமே தவிர, பூரணமாக குணப்படுத்த முடியாது.

நீரிழிவின் தாக்கத்திற்கு ஆளானவர்கள் இரத்தம் மற்றும் சிறுநீர்ச் சர்க்கரை அளவினை மாதாந்தம் பரிசோதனைகள் செய்து அறிந்து கொள்ளல் வேண்டும். சிலர் சிறுநீர்ப் பரிசோதனைகள் செய்வது மாத்திரம் போதுமென்று எண்ணுகிறார்கள். ஆனால், இரத்தப் பரிசோதனையும் செய்வது மிகவும் அவசியமானதுதான்.

(மிகுதி அடுத்த இதழில்)

**தொகுப்பு: வர்ஷிகா-வைஷ்ணவி**

# பெண்களும் தமிழீழச் சட்டங்களும்

அந்தக் குழந்தையின் அழகு அவனை பிரமிக்க வைத்தது. குறுகுறுத்த கண்களோடு அவனைப் பார்த்து தன் சின்ன தளிர்க் கரங்களைக் கொட்டியது. அது.. அது அந்தச் சிரிப்பு அவனது உள்ளத்தில் தைத்தது. அவனையறியாமலேயே அவன் கைகள் அந்தக் குழந்தையை நோக்கி நீண்டன.

நட்புடன் புன்னகைத்த அதன் தந்தை ரமேஷ், குழந்தையை அவனிடம் கொடுத்தான். "ஓ..ஆள். நல்ல சுட்டி போல" என்றவன் அதை வாங்கிக் கொஞ்சினான். அந்த முகம்.. அந்த முகம் அவனுக்கு.. எதையோ.. எவரையோ..

"ராஜி.. இந்தாரும் இதை ஒருக்கா.."

"ம்.. எனக்குத் தெரியும் வனிதாக்காட்டத்தானே?"

என்ற ராஜி அந்தக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு ஓடிவிட்டாள். ரகுவுக்கு மனம் அந்தக் கடிதத்தின் பின்னே, அன்னத்தைத் தொடர்ந்த நளனின் மனம் போல,

"இவ்வளவிற் செல்லும் கொல்"
இவ்வளவிற் சொல்லும் கொல்
என்றும்
இவ்வளவில் மீளும் கொல்
என்றும்.

அலைந்தது.

வனிதாவுக்கு மட்டுமென்ன? இந்தக் கடிதங்கள் எல்லாம் அவள் உயிரையல்லவா சுமந்து வருகிறது ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த சாதாரணப் பெண் அவள். ஆனால், அவளுடைய அதிக விருப்பின் காரணத்தால் அவளுடைய பெற்றார் அவளைப் படிக்க வைத்தனர். அவளை சுதந்திரமாகவும் விட்டிருந்தனர். உண்மையில் அவள் புத்திசாலியும், தன்னம்பிக்கையும் உள்ளவளாகவே இருந்தாள். அதனால்தானோ என்னவோ? தன் எதிர் காலத்தையும் தானே தீர்மானித்துக் கொண்டாள்.

ரகு ஒரு சிறு வியாபாரம் செய்துவந்தான். இடத்துக்கு இடம் கொண்டு சென்று விற்பவன். ஆதலால் அவனுக்கு அவன் செல்லும் சில முக்கிய நகரங்களில் நண்பர்களை உருவாக்கி வைத்திருப்பான். இது அவனுடைய தங்குமிடப் பிரச்சினையை தீர்த்து வைத்தது. அதுபோலத்தான் இங்கும் அவன் பரமசிவம் வீட்டில் தங்குவான். அவனுடைய வீடு அங்கிருந்து பதினெட்டு மைல் தொலைவில் இருந்தது. பரமசிவம் ஒரு புகையிலை வியாபாரி. அவர் மகள் வனிதா அங்கு மாதமிரு முறை வரும் ரகுவை விரும்பியதிலோ, அல்லது ரகு வனிதாவை விரும்புவதோ புதினம் அல்ல. அது இயற்கையானது.

ரகு, தன் வீட்டுக்குப் பக்கத்தில் வசித்த வனிதாவின் பள்ளித் தோழி ராஜியை தன் கடிதத் தொடர்புக்கு பயன்படுத்தினான். ராஜியை விட வனிதா மூத்தவள். ஆனாலும், இருவரும் நண்பிகள். ராஜி, வனிதாவில் உயிரையே வைத்திருந்தாள். எந்தப் பிரச்சினையிலும் வனிதாவின் யோசனைகள் உயர்ந்ததாகவே இருக்கும்.

ரகுவும் வனிதாவும் விரும்பிப் பழகும் செய்தி அவரவர்களின் பெற்றோருக்குத் தெரியாது. ரகு திரந்தரமாக ஒரு கடை போட விரும்பினான். வனிதா படித்து ஒரு உத்தியோகம் பார்க்க விரும்பினாள். இருவரும் தத்தம் இலட்சியத்திற்காக உழைத்தனர். மூன்று வருடங்களின் பின் ரகு தனக்கென ஒரு கடை போட்டதுடன் வளமான ஒரு வாழ்க்கைக்கு தேவையான செல்வத்தையும் ஈட்ட ஆரம்பித்தான்.



வனிதா கல்வியை முடித்தாள். ஆனால், வேலை கிடைக்கவில்லை. அச் சந்தர்ப்பத்தில் அவளுக்குத் திருமணம் செய்து வைக்கப் பெற்றோர் முயன்றனர். அவ்வேளையில் தன் காதலைப் பற்றி அவள் பெற்றோருக்கு கூறினாள்.

பரமசிவம் தன் நண்பர் ஒருவருடன் ரகுவைச் சந்தித்தார். மகளுடைய திருமண விடயமாகப் பேசினார். ஆனால், நான் என்ர சகோதரி மாதிரி நினைச்சுப் பழகின பிள்ளய எப்படி.. மனைவியா.. என்று மறுத்து விட்டான். மகளுடைய நம்பிக்கையை சிதைக்க விரும்பாத பரமசிவம் வனிதாவை நேரில் போய் கதைக்கும்படி கூறிவிட்டார்.

"அது.. மோனை... நான் கதைக்கிறதிலும் பார்க்க.. நீ போறது தான் சரி.." என்றார்.

விடயத்தை ஓரளவு ஊகித்த வனிதா, அவனால் தனக்கு அனுப்பப்பட்ட கடிதங்களையும் கொண்டு சென்றாள்.

அவனில்லாத வாழ்வை அவளால் கற்பனை செய்யவே முடியவில்லை. அதை அவன் நன்கு பயன்படுத்தினான்.

"உன்னில நான் உண்மையான அன்பு வைச்சபடியாத்தான் உம்மட கடிதம் எல்லாம் எரிச்சுப் போட்டன். ஆனா நீர்; என்னை நம்பாதபடியாத்தான் இதையெல்லாம் வைச்சிருக்கிறீர்."

"இல்ல சத்தியமா இல்ல.. எனக்கு நீங்கள் உங்கட நல்ல வாழ்வு இதுதான் வேணும், உங்கள நான் நம்பித்தானே..."

"அப்ப ஏன் கடிதத்தை வச்சிருந்தனீர்..? இப்ப கொண்ணந்தனீர்? இதைக்காட்டி என்ன.."

"இல்ல.. இல்ல.. நான் இப்பவே இதை அழிக்கிறன்". என்றவள் அவன் முன்னிலையிலேயே அவற்றைக் கொழுத்தி எரித்தாள். ஆனால், அவன்...

"இண்டைக்கு நான் இருக்கிற நிலையில இப்ப கலியாணம் செய்யேலா.. நான் நிறைய உழைக்கோணும்... எனக்கு பணம் வேணும்" என்றான்.

விஷயம் ஊர்பரவ; வனிதா தனக்குள் அழுது- குமுறி அழுது சோர்ந்து 'இனி எனக்கு வாழ்வெதற்கு' என்று வந்த போது.. அவளுக்கு வேலை கிடைத்தது. அதுவும் மலையகத்தில் ஆசிரியையாக, படிப்படியாக வாழ்க்கையில் ஏற்பட்ட காயம் மாறும் போது புதிய ஒரு அறிமுகம் கிடைத்தது. அவளுடைய அயலில் கிடைத்த ஒரு நட்பு காதலாகி அந்த இளைஞன் இவளை நெருங்கிய போது தீயைத் தொட்டு விரலைச் சுட்டுக் கொண்ட குழந்தை போல வனிதா விலக முனைந்தாள். அவன் விடவில்லை. அவளுடைய வரலாற்றை முழுமையாக கேட்டறிந்தான். புன்னகையோடு அவன் அவளைக் கேட்டான்.

"ஏமாற்றியவன் புதுவாழ்வுக்கு தயாராக இருக்கும்போது, ஏமாந்தவள் ஏன் புதுவாழ்வு வாழமுடியாது?"

உண்மைதான்,

"ஏமாற்றியவனை ஆயிரம் பேர் கட்டத் தயாரென்றால், ஏமாந்தவளை கட்ட ஒருவர் இருக்கக்கூடாதா?"

பணத்தாலும், குணத்தாலும், தகுதியாலும் ரகுவைவிட ரமேஷ் உயர்ந்தவன். வனிதா மகிழ்ச்சியோடும் திருப்தியோடும் வாழ்ந்தாள். விடுமுறையில் கணவனுடன் ஊருக்கு வந்தவள் வழியில் தோழியுடன் பேசிக் கொண்டே பின்னே வர ரமேஷ் பக்கத்துக்கடையில் பிள்ளைக்கு ரொபி வாங்கப் போனான். பிள்ளையை ரகு வாங்கிக் கொண்டான். அவனுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. பணம் பணம் என்று அலைந்ததில் உரிய வயதையும் தவறிவிட்டான். கேட்டு வந்த சம்பந்தமெல்லாம் ஒதுங்கி, இப்போது கேட்டுச் செல்லும், எதுவும் அமையவில்லை.

கடை வாசலில் நின்ற ரமேஷை நோக்கி வந்த வனிதா ரகுவின் கையிலிருந்த குழந்தையை 'வெடுக்'கென்று பறித்தாள்.


"நீ..நீங்க.. வனிதா.. தானே.." ரகு தடுமாறினான். "ஓம்.. அவள் தான் ஆனா நீங்க நினைச்சமாதிரி நான் அழிஞ்சு போகேல்ல.. என்ர தன்னம்பிக்கையும் ரமேஷின்ர நல்ல மனமும் என்னை வாழவைச்சிருக்கு.."

ரமேஷுடன் இணைந்து குழந்தையுடன் தலை நிமிர்ந்து நடக்கும் வனிதைவைப் பார்த்து, ரகு எதையோ.. இழந்துவிட்ட உணர்வைப் பெற்றான். அந்தக் குழந்தை அவனைப் பார்த்து கையை அசைத்தது.

(உண்மைச் சம்பவம்)

நன்றி: நாற்று

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி



## செல்வராசா ஞானசேகரம் (ஞானம்)

வத்திராயன் வடக்கு, வேம்படிவீதி, தாளையடி

மலர்வு:
31.01.1964

உதிர்வு:
30.01.1995

ஈராண்டு சென்றாலும் உங்களை நாம் மறப்போமா
என்றும் உங்களையே நினைந்துருகி
காலமெல்லாம் கண்ணீர் வடிக்கின்றோம்.
நீரன்றோ எம் நெஞ்சில்
எந்நாளும் நிறைந்திருப்பீர்.
எம்துயரை யார் ஆற்றிடவும் வல்லாரோ
உங்கள் ஆத்மா சாந்திக்காக
இறைவனை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும் தாயார், சகோதரங்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

தகவல்: S. சேகர் (சுவிஸ்)
சகோதரர்

# 14ம் மாத வீர அஞ்சலி



## லெப்டினன்ட் கேசவன்
## (திருநாமம் தேவரஞ்சன்)

உடுத்துறை வடக்கு, வேம்படிவீதி, தாளையடி

தாயின் மடியில்:
10.05.1976

தாயக மண்ணில்:
28.11.1995

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையில்
நேரடி மோதலில் வீர மரணம்.

எம் தேசத்தில் நிலை கொண்ட
எதிரியை அகற்ற
உன்னையே உலகை விட்டு நகர்த்தியவனே
உன் வீர நினைவுகளை
எங்கள் மனங்களிலிருந்து என்றென்றும்
அகற்றவே முடியாது

தகவல்: S. சேகர் (சுவிஸ்)
மாமா

## உங்கள் கை வண்ணம்

## இவ்வாரக் கைவண்ணங்கள்



செல்வன் சி.சுகந்தன்
தூர்க்கா தமிழ்ப் பாடசாலை
பாலர் வகுப்பு
வயது: 6 (25.04.1991)
இடம்: 8500 Frauenfeld, Swiss




கிளி

நான் விரும்பும் பறவை கிளி
கிளி பச்சை நிறம் உடையது
கிளி முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கும்
கிளியை வீட்டில் வளர்ப்பார்கள்
கிளி அழகாகப் பேசும்




செல்வி
கஜனி ஞானராசா

வயது: 10 (15.10.1987)
இடம்: St. Gallen, Swiss



தென்னைமரம்

1) இலங்கையில் பல இடங்களில் தென்னை மரத்தை காணலாம்.
2) இது கடற்கரைப் பகுதிகளில் ஓங்கி வளரும்.
3) இதிலிருந்து தேங்காய், ஓலை, மட்டை போன்றவற்றை மக்கள் தமது தேவைக்கு பெற்றுக்கொள்கின்றார்கள்.
4) தென்னை ஓலையினால் மக்கள் தமது வீடுகளை வேய்வார்கள்
5) ஊரில் எங்களது வீட்டுக் காணியில் தென்னை மரங்கள் உண்டு.





## சின்னக் கதை படிப்போம்

இக் கதையை எழுதி அனுப்பியவர்



செல்வி. பானுஜா நித்தியானந்தசிவம்
வயது: 11
வகுப்பு: 5
இடம்: Danmark

# வாங்கு சொன்ன கதை



ஒரு வீட்டில் பின்புறத்தில் வேப்பமரம் என்ற பெயருடன் நான் வளர்ந்து வந்தேன். எனக்கு அருகில் பல பெயர் உடைய மரங்கள் இருந்தன. நான் பல கிளைகள் விட்டு வளர்ந்து இருந்தேன். மார்கழி மாதங்களில் பூத்து காய்த்து பழங்கள் சொரிவேன். அக்காலங்களில் என் மீது காகங்கள் வந்து பழங்களைச் சாப்பிட்டு, மகிழ்ந்து பறந்து சென்றன. சில மனிதர்கள் வந்து பூக்கள் பறிப்பார்கள். அவர்கள் பூக்களை பறிக்கும் போது பல கதைகள் கதைத்து சிரிப்பார்கள். அக்கதையை கேட்டு நானும் சிரிப்பேன். சிறு பிள்ளைகள் என் மீது ஊஞ்சல் கட்டி ஆடிப்பாடி மகிழ்வார்கள். அதை பார்த்து சந்தோசமாக வளர்ந்து கொண்டிருந்தேன்!!!

ஒரு நாள், எனக்கு பக்கத்தில் இரண்டு மனிதர்கள் வந்து மேலும் கீழுமாக பார்த்து சென்றார்கள். இரண்டு நாட்கள் கழித்து வந்தார்கள். அவர்கள் வரும் பொழுது பெரிய பெரிய இயந்திரங்களுடன் வந்தார்கள். பின்பு என்னை வெட்டி விழுத்தினார்கள். பல நாட்கள் கழித்து என்னை ஒரு வண்டியில் ஏற்றிக் கொண்டு சென்றார்கள்.

அங்கே என்னை வாளால் அரிந்து தட்டையான பலகைகள் ஆக்கினார்கள். இன்னொருவர் வந்து பலகைகளை எடுத்து சென்று நன்றாக செதுக்கி மெழுகுபோல் ஆக்கினார். இன்னொருவர் அதை எடுத்து பொருத்தி வாங்கு என்ற பெயரை வைத்தார். மறுநாள் என்னை கடைக்கு ஏற்றிச் சென்றார்கள். அங்கு என்னைப்போல் கதிரை, மேசை, கட்டில் என்ற பெயருடையவர்கள் இருந்தார்கள். ஒவ்வொரு நாட்களும் பலர் வந்து என்னைத் தொட்டுப்பார்த்து விட்டு வாங்காமல் சென்று விடுவார்கள். பல நாட்களின் பின் ஒருவர் என்னையும் என்னைப்போல் சிலரையும் விலைக்கு வாங்கி வாகனம் ஒன்றில் ஏற்றி பல, மைல்களுக்கு அப்பால் கொண்டு சென்றார். அங்கு பிள்ளைகள் ஓடிவந்து என்னை இறக்கினார்கள். என்னை மூன்றாம் வகுப்பு அறைக்கு அனுப்பினார்கள். அங்கே பிள்ளைகள் தங்களது வகுப்பு எண்களை என் மீது ஒட்டினார்கள். பிள்ளைகள் என்மீது ஏறிக்குதித்து விளையாடினார்கள். பிள்ளைகள் தவறு செய்தால் ஆசிரியர் என் மேலே அவர்களை சில நிமிடங்கள் ஏற்றிவிடுவார்கள். அப்பொழுது சிலர் விடும் கண்ணீர்துளிகள் என் மீது முத்துமுத்தாக விழும். அப்போது அவர்களுடன் சேர்ந்து நானும் அழுவேன். மூன்று நான்கு பேர் என் மீது இருந்து பாய்வார்கள். எனக்கு பக்கத்தில் இருந்த வாங்கு முறிந்து விட்டது அதனை எடுத்து செல்லும் போது நான் பார்த்து சிரித்தேன். அப்பொழுது அந்த வாங்கு போகும்போது, "என்றோ ஒருநாள் நீயும் இப்படித்தான்..." என்று கூறியது!!!

இப்படியே பல ஆண்டுகள் சென்றன. ஒரு நாள் என்மீது பிள்ளைகள் ஏறி குதித்த போது என்னுடைய கால் முறிந்து விட்டது. இப்போது முறிந்த வாங்கு என்ற பெயருடன் பிள்ளைகள் என்னை வெளியே கொண்டு சென்று ஒரு பக்கத்தில் போட்டார்கள். அடுத்த நாள் பல ஆயுதங்களுடன் வந்து எனது முறிந்த காலைப் பூட்டினார். பின்பு நான் பழைய வகுப்புக்கு போய் இருந்தேன். இப்படியே பல நாட்கள் சென்றன. எனது உடைந்த காலே திரும்பவும் முறிந்தது. அப்போது பழைய வாங்கு சொன்ன வார்த்தை எனக்கு நினைவுக்கு வந்தது. என்னை எடுத்துச் சென்று ஒரு மூலையில் போட்டார்கள். அங்கு என்னைப் போல் பலர் இருந்தனர். நான் கவலையுடன் மழையிலும், வெய்யிலிலும் இருந்து, வாங்கு என்ற பெயரை இழந்து விறகு என்ற பெயருடன் வாழ்கிறேன்.

## எமது நாட்டை நினைவு படுத்திய திரைப்படக் காட்சி

இக் கதையை எழுதி அனுப்பியவர்



செல்வி.பாத்திமா நிரோசன்
வயது: 11
இடம்: 31100 Toulouse, France.

எனது தமிழ்ப் பாடசாலையில் 29.12.96 ஞாயிற்றுக்கிழமை, மாலை திரைப்படக்காட்சி நடந்தது. அங்கு நிறைய மக்கள் வந்திருந்தனர். நானும் எனது குடும்பமும் அங்கு சென்றோம்.

திரைப்படத்தில். இரண்டு படங்கள் பார்த்தோம். ஒன்று முகங்கள், மற்றது உறங்காத கண்மணிகள்.

இவற்றில் இலங்கையில் எமது சகோதரர்களும், மக்களும் படும் துன்பங்கள் விபரிக்கப்பட்டு இருந்தன.

அவர்கள் எமது மண்ணை மீட்பதற்காக கஸ்டப்பட்டு, போராடுகின்றார்கள். அவர்கள் எமது மண்ணுக்காக வீரமரணங்கள் அடைவதை என்னால் நேரடியாக பார்க்க முடியாவிட்டாலும் திரைப் படம் மூலம் பார்ப்பதற்கு வாய்ப்பு தந்ததற்கு எமது பாடசாலை நிர்வாகத்திற்கும் ஒலிப்பதிவு செய்தவர்களுக்கும் அதில் பங்கு பற்றிய ஈழப் போராளிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்

இது என் மனதை உருக்கிய காட்சி.

சாளரம்

# தமிழ்: மரபும் தற்காலமும்

## ப்ரான்ஸுவா குரேரோவுடன் ஒரு நேர்காணல்: ரவிக்குமார்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

**தமிழில் மிகவும் புதுமையானதெனக் கூறப்பட்ட 'ஜே.ஜே சில குறிப்புகள்' நாவலை நீங்கள் மரபின் தொடர்ச்சியாக கணித்திருக்கிறீர்கள். மரபின் தொடர்ச்சி என்பதை நீங்கள் அர்த்தப்படுத்துவது எவ்வாறு?**

சமய மரபுகள் அல்லது இலக்கிய வடிவங்களின் தொடர்ச்சி பற்றி மதிப்பிடும்போது தமிழ்க் கலாச்சாரத்தின் இயக்கமற்ற தன்மை குறித்து எவ்வாறு பேசாமல் இருக்க முடியும்? ஆனால் இந்தத்தேக்க நிலையென்னும் தளத்துக்குக்கீழே இருக்கும் வரலாற்று ரீதியான இயக்கத்தை நாம் மீட்க முயன்றால் தவிர்க்க முடியாமல் இலக்கியத்தின் நவீனத்துவத்துக்கு முந்திய (Pre Modern) அம்சங்கள் சிலவற்றைத் தேர்ந்தெடுக்கும்படி தூண்டப்படுவோம். (நாயக்கர் காலப் பிரதிகள், முஸ்லீம்கள் மற்றும் கிறித்தவர்கள் எழுதியதாக வெளிவந்த முதற் பிரதிகள்) அதுபோலவே பதினெட்டு மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளின் ஆக்கங்களுக்குச் சற்று முக்கியத்துவம் தருவதும் நேரும். பிறகு, நவீன மற்றும் தற்காலத்தோடான அவற்றின் பிணைப்பு மிகவும் வெளிப்படையானதாகவும்; பழமைக்கும் நவீனத்துவத்துக்கும் இடையிலான முறிவு மிகவும் செயற்கையானதாகவும் தோன்றும். உ.வே. சாமிநாதயயரையும், பாரதியையும் நவீனத்துவத்தின் ஆரம்ப நிலைகளாக எண்ணிப் பார்க்க முடியுமா? வ.உ.சி.யைத் தொல்காப்பியத்தைத் தொகுத்தவரெனவும், வ.வே.சு. அய்யர் திருக்குறளை மொழிபெயர்த்தவரெனவும் எண்ணிப்பாருங்கள்.

ரோஜெ ஷாத்தியெவின் அணுகுமுறையைப் பின்பற்றி மேலும் சிலவற்றைப் பார்க்கலாம். இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து அரசர்களின் ஆதரவுக்கும், சுயச்சார்பான சந்தையை (இலக்கியத்தை எப்படி விற்பது?) நோக்கிய இயக்கத்துக்கும் இடையில் நடந்த மாற்றங்களை எப்படி மதிப்பிடுவது? படைப்பாளிகளைப் பற்றியும் புதிய இலக்கிய வடிவங்களைப் பற்றியும் நாம் பேசுகின்றோம். ஆனால மேட்டிமைத்தனம் கொண்ட இலக்கியத்துக்கும் வெகுசன இலக்கியத்துக்கும் இடையேயான பேதம் எப்படி உண்டானது? பெரும்பான்மை அல்லது கருத்தொற்றுமைக்கான (Consensus) தேடல் அல்லது வரையறை பற்றி என்ன கூறமுடியும்? நகரம் சார்ந்த நடுத்தர வர்க்கத்தினிடையே மேலாண்மை நிலவும் வெகுசனக் கலாசாரத்தை நோக்கி கவனம் செலுத்தப்பட வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்படுகிறோம். காலனித்துவத்தைத் தமிழ்க் கலாச்சாரம் எவ்வித எதிர்கொண்டது எனப் பார்ப்பதை விடவும் இது ஆய்வுக்குரிய முக்கியமான ஒரு நிகழ்வாகும். தேசியத்தின் பல்வேறு வடிவங்கள் குறித்த ஆய்வுகளுக்குத் தேவையற்ற மதிப்பளிப்பது சுயநலம் மிக்க மேற்கத்திய வரலாற்று ஆய்வாளர்களின் பொறியில் சிக்கிக் கொள்வதுதான்.

நாம் உண்மையில் கவனம் செலுத்த வேண்டியது பிரிட்டிஷாரைத் தமிழர்கள் எவ்விதம் எதிர் கொண்டார்கள் என்பது பற்றி அல்ல. மாறாக, சுயமான, சுதந்திரமான தற்கால இலக்கியத்துக்கு தீவிரமானதொரு தடையாகக் கருதப்படும் நடுத்தரவர்க்க இலக்கியத்தின் வகை மாதிரிகளின் (Stereotypes) மூலமாகத் தமிழர்கள் எப்படித் தமது மதிப்பீடுகளை வரையறுத்துக் கொள்கிறார்கள், தமது சூழலை எவ்விதம் அவர்கள் மறுபடியும் வடிவமைக்கிறார்கள் என்று பார்ப்பதே முக்கியம். ஒருவிதத்தில் சுதந்திரப் போராட்ட வரலாறானது விடுதலை உணர்வை அடிமைப்படுத்தி விட்டது என்று கூறலாம்.


தற்காலத் தமிழ் உலகின் சிக்கலான பல்வேறு கலாச்சாரங்கள் கொண்ட வாழ்க்கைச் சூழல், மொழிக்கு விடுக்கின்ற சவால் இன்றைய காலகட்டத்தில் ஒருவரை மிகவும் வசீகரிக்கக்கூடிய விஷயமாக உள்ளது. அது போலவே இன்று தனது இலக்கிய அம்சங்களாக, பரிமாணங்களாக கலாச்சார மீட்பு வாதத்தைக் கொண்டுள்ள, இந்து கலாச்சாரத்தின் சுயமான பண்புகளுக்கு திரும்ப வேண்டும் என்கிற ஒரு புதிய பிரக்ஞை உருவாகி வருவதும், பேச்சு மொழியை, வட்டாரவழக்கை இலக்கிய அந்தஸ்த்துக்கு கொண்டு செல்லும் முயற்சிகளும் கவனத்தை ஈர்ப்பதாய் உள்ளன.

போத்ரியா, பூக்கோ, தெரிதா போன்ற மேற்கத்திய எழுத்தாளர்களைப் பற்றி மேற்கத்திய தத்துவங்களையும், மானுடவியலையும் குறித்து குறைபட்ட அறிவையே கொண்டு அந்த அறிவை தமிழில் மறுகண்டுபிடிப்புச் செய்ய முற்படும் வகைப்படுத்த முடியாத தமிழ் அறிவு ஜீவிகளின் ஆசைகளைப் பற்றி என்ன கூறுவது..? வேருக்கு திரும்ப வேண்டுமென்கிற வலுவானதொரு இயக்கத்துக்கும், உலக மயமாகும் வெளியில் வெடித்துக் கிளம்ப விழையும் ஒருவரது ஆசைக்கும் இடையேயான முரண்பாடு?..

**தமிழில் தலித் இலக்கியம் குறித்து ஆய்வுக்கட்டுரை ஒன்றை எழுதியுள்ளீர்கள். தலித் இலக்கியத்தின் பக்கம் உங்கள் கவனம் திரும்பியது எப்படி? அதைப் பற்றிய உங்களது எதிர்வினை என்ன?**

பொதுவாக தலித் இலக்கியப் பிரதிகளை பார்க்கும்போது கட்டுப்பாடு, போராட்டம் போன்றவற்றுக்கு அவை முக்கியத்துவம் தருவதாகத் தெரிகிறது. இதனால் உருவத்தை விட உள்ளடக்கத்துக்கு அதிக முக்கியத்துவம் தருகின்றன. இலக்கியம் படைப்பதற்கான காலமும் அவகாசமும் தலித்துகளுக்கு இல்லை. படைப்பை நுணுக்கமாகச் செய்ய, செழுமைப்படுத்த அவர்களுக்கு நேரம் இருப்பதில்லை. நான், மராத்திப் படைப்பு பலவற்றையும் படித்தேன். கருத்தியல் ரீதியில் அவை முக்கியத்துவமானவை. அவை வாக்குமூலங்களாக, சுயசரிதைகளாக, அல்லது யாரேனுமொருவரை வித்து பாராட்டி எழுதப்படுபவையாக இருக்கின்றன. ஆனால் அவற்றில் எதுவும் பெரிய இலக்கியச் சாதனைகளாக எனக்குப் படவில்லை.

**சுயமான, சுதந்திரமான தற்கால இலக்கியத்துக்கு தீவிரமானதொரு தடையாகக் கருதப்படும் நடுத்தரவர்க்க இலக்கியத்தின் வகை மாதிரிகளின் (Stereotypes) மூலமாகத் தமிழர்கள் எப்படித் தமது மதிப்பீடுகளை வரையறுத்துக் கொள்கிறார்கள், தமது சூழலை எவ்விதம் அவர்கள் மறுபடியும் வடிவமைக்கிறார்கள் என்று பார்ப்பதே முக்கியம்.**



சமூக ஆவணங்கள் என்கிற வகையில் அவை முக்கியமானவை ஆனால் இலக்கியச்சாதனைகள் அல்ல.

தமிழைப் பொறுத்தவரை நான் என்னைப் பாதிக்கிற தீவிரமான ஒரு தலித் படைப்பைத் தேடிக்கொண்டிருக்கின்றேன். அதற்காகக் காத்திருக்கின்றேன். இங்கே தலித் இலக்கியமாக முன் வைக்கப்படும் பல பிரதிகள் படைப்பு என்பதை மிகவும் சாதாரணமாக எடுத்துக் கொள்வதாகத் தோன்றுகிறது. ஏறக்குறைய வெகுசன இலக்கியம் (Popular) என்கிற நிலைக்கு அவை சென்றுவிடுகின்றன.

கீழ் வெண்மணி குறித்து எழுதப்பட்ட ஒரு கதைப்பாடலை "தீக்குளியல்" என்ற படைப்பை நான் படித்தேன். சில இடங்களில் மிகவும் தீவிரமான வெளிப்பாடாக இருந்தது. ஒருவிஷயத்தை சரியானபடி தீவிரத்தன்மையோடு மற்றவருக்கு எடுத்துச் சொல்லும் ஆற்றலோடு அது இருந்தது. அதுபோல, "குறிஞ்சாகுளம் கதைப்பாடலையும்" குறிப்பிடலாம்.

இரண்டாம் உலகப் போர் சமயத்தில் பிரான்சின் எதிர்ப்புப் போராட்டம் பற்றி ஏராளமான கதைகள் எழுதப்பட்டன. ஆனால் அவற்றுள் இன்றும் வீர்யத்தோடு எஞ்சியிருப்பவை ஒரு சில மட்டுமே.

ஒரு அரசியல் சூழலின் விளைவாக உருவாகும் ஒரு படைப்பு அந்த அரசியல் சூழலோடே அழிந்து விடுகிறது.

தற்போது தலித்துகளுக்கு இரட்டை வாக்குரிமை பற்றி பேசப்படுகிறது. ஆனால் அதற்காக அதன் மூலம் செய்யப்படும் பிரச்சாரத்தை விடவும், அவை எழுப்பும் தாக்கத்தைவிடவும் சிறந்த மேலானதொரு விளைவை தீவிரமானதொரு தலித் கலைப்படைப்பு செய்துவிடும். அண்ணாமலைநகர் பத்மினியின் வாக்குமூலம் ஏற்படுத்தும் தீவிரத்தையும், அழுத்தத்தையும் தன்னகத்தே கொண்டிருக்கும் ஒரு தமிழ் தலிப் படைப்பை நான் தேடிக்கொண்டிருக்கின்றேன்.

**உலகத் தமிழ் ஆராய்ச்சிக்கழகத்தின் (IATR) துணைத்தலைவராக இருக்கிறீர்கள். உலகத் தமிழ் மாநாடுகள் நடத்துவதால் பயன் ஏதும் உண்டா?**

வ.ஐ. சுப்பிரமணியம் ஒருமுறை கூறியது நினைவுக்கு வருகிறது. "உலகத் தமிழ் ஆராய்ச்சிக்கழகம் என்பது ஒரு காகித மலர். உலகத் தமிழ் மாநாடுகளின் போது மட்டும் தான் அது மணம் வீசும்" என்று அவர் கேலியாகக் குறிப்பிட்டார்.

சரி! அப்போதாவது மணம் வீசுகிறதே! உலகத் தமிழ் மாநாடுகளைப்பற்றி கூறினால், அவை பல தளங்களில் இயங்குகின்றன என்பதைக் குறிப்பிட வேண்டும்.

நீங்கள் மனதில் வைத்திருப்பது திருவிழா போன்ற அதன் கொண்டாட்டங்களையென நினைக்கின்றேன். இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது சென்னை மெரீனா கடற்கரையில் அண்ணாவையும், ஜகீர் உசேனையும் வரவேற்கக் காத்திருந்த பெரும் கூட்டம் எனக்கு ஞாபகம் வருகிறது. அது ஒரு அம்சம். தமிழர்கள் தங்கள் மொழியைக் கொண்டாட விரும்புகிறார்கள். கொண்டாடிவிட்டுப் போகட்டும் அதில் ஆபத்து எதுவுமில்லை. அது இயல்பானதொரு விஷயம்தான்.

இதைத்தாண்டி இன்னும் சில தளங்கள் உள்ளன. உலகெங்கும் தமிழில் செயல்படும் அறிஞர்கள் இந்த மாநாடுகளால் பெறுகின்ற தாக்கம் முக்கியமானது. தமிழ்க் கலாச்சாரத்தை அதற்குமுன் விரிவாக அறிந்திராத அறிஞர்கள் பலர் அப்போது அதற்கான ஒரு வாய்ப்பைப் பெறுகிறார்கள்.

இன்னொரு விஷயமும் இருக்கிறது. அங்குவரும் அறிஞர்கள் தமக்குள் தகவல்களை பரிமாறிக் கொள்ள முடிகிறது. இது ஒரு முக்கியமானவிஷயம்.

இதுபோல் உலக மொழிகள் பலவற்றிலும் நடக்கிறது. ஏன் தமிழில் நடக்கக்கூடாது. இந்த மாநாடுகள் பெரிதாகச் சாதித்துவிட்டன என்று பெருமை பாராட்டிக் கொள்ளமாட்டேன். ஆனால், சில சாதகமான அம்சங்களும் உள்ளன என்பதை நாம் கவனிக்க வேண்டும். மாநாட்டுப் பார்வையாளர்களாக வருபவர்களும் பலதரப்பட்ட அறிஞர்களைச் சந்திக்க, கருத்துப்பரிமாற அது வாய்ப்பளிக்கிறது.

சி.சு. செல்லப்பா என்பவர் யார், அவர் என்ன செய்திருந்தார், என்ன செய்துகொண்டிருந்தார் என்பதை அறிந்திருக்காத நிலையில் சென்னையில் நடந்த மாநாட்டின் போதுதான் நான் சி.சு. செல்லப்பாவைச சந்தித்தேன். அவர் 'எழுத்து' பத்திரிகைகளின் சில பிரதிகளையும், தனது 'வாடிவாசல்' குறுநாவலையும் தந்தார். அச் சந்திப்பு தற்காலத் தமிழ் இலக்கியத்துக்குள் நுழைவதற்கான ஒரு சரியான வழியை எனக்கு வகுத்துத் தந்தது.

### குறிப்புகள்:

**1. ரோஜெ ஷாத்தியெ** (Roger Chartier)

புத்தகங்கள், அவற்றின் பரவல், அதனால் உண்டாகும் தாக்கம், வாசிப்புப் பழக்கங்கள் ஆகியவற்றை ஆராயும் வரலாற்றறிஞர். பாரிஸில் சமூகவியலுக்கான உயர் ஆராய்ச்சி நிறுவனத்தின் பேராசிரியர்.

**2. ராபர்ட் டார்ன்டன்** (Robert Darnton)

பத்திரிகையாளராக இருந்தவர். புத்தகங்கள் குறித்து ஆராயும் அமெரிக்கப் பேராசிரியர். பிரான்சில் பதினெட்டாம் நூற்றாண்டு காலகட்டத்தில் அறிவொளிக் காலத்துக்கும் (Enlightment) தணிக்கை முறைக்கும் இடையிலான மோதலின்போது வெளியான பிரதிகள் குறித்து ஆராய்ந்தவர். தற்போது இந்தியாவில் காலனிய தணிக்கை முறையின்போது வெளியான பிரதிகள் குறித்து ஆய்வு செய்வதில் ஈடுபட்டுள்ளார்.

**3. லெ ருவா குரோன்** (Le Roi Gourhan)

வரலாற்றுக்கு முந்திய காலகட்டத்தைச் சேர்ந்த கலைகள் (Pre historic arts) பற்றிய ஆய்வுகளில் வல்லுனர். தொழில்நுட்ப வரலாற்றில் பேராசிரியர். காலேஜ் ஆஃப் பிரான்சில் பணிபுரிந்தவர். லெவிஸ்த்ராஸின் சமகாலத்தவரான அவர் எண்பதுகளின் துவக்கத்தில் காலமானார்.

நன்றி: *புதியபார்வை*

## கருத்தாடல்:

# ஈழத்து தமிழ் கவிதையும் நெருப்பு நிலவனும்

ஈழமுரசின் 100-வது இதழின் கருத்தாடல் பகுதியில் இடம் பெற்ற நெருப்பு நிலவனின் "ஈழத்துக் கவிதை வரலாற்றில் இன்னுமொரு மகாவம்சம்" என்ற தலைப்பில் இடம் பெற்ற கருத்துக் குறிப்பினை பார்த்தபோது, அவரின் தார்மீகக் கோபத்தினை என்னால் புரிந்து கொள்ளக்கூடியதாய் இருந்தது.

முதலில், நடுநிலைமை பற்றி ஒரு சில வார்த்தைகள்

உண்மையில் நடுநிலைமை என்பது ஒன்று இருக்க முடியாது என்பதில் எவ்வித சந்தேகமும் எனக்கில்லை. ஆனால், இக்கருத்திற்கு முரணானதாக பதினொரு ஈழத்துக் கவிஞர்கள் தொகுப்பில் இடம் பெற்ற முன்னுரை எப்படியிருக்கிறது என்பதே எனக்குரிய சந்தேகம்.

சரி, இனி விடயத்திற்கு வருகிறேன்.

இம்முன்னுரையை எழுதியவர்கள் அ. ஜேசுராஜாவும், விரிவுரையாளர் M.A. நுஃமானும் ஆவர்.

இருவரும் ஆளுமைமிக்க சிறந்த இலக்கியவாதிகள். அதற்கு மேலாக, அ. ஜேசுராஜா இன்னும் எங்கள் மண்ணில் நின்று மக்களோடும், அந்த மக்களின் போராட்டத்தோடும் இணைந்து செயற்பட்டுவருகிறார். M.A. நுஃமான் தமிழ் இலக்கியத்தில் சிறந்த பதிவுகளைத் தந்தவர். தமிழ் மக்களின் கவிதை இலக்கியத்திற்கு மெருகூட்டியவர். இவர்களிருவரும் எம்மைப் போல் வெளிநாட்டில் தப்பிப் பிழைப்பவர்களல்ல.

எனவே, இவர்களிருவருக்கும் நெருப்பு நிலவன் குறிப்பிட்டிருப்பது போல் ஈழத்துக் கவிதை வரலாற்றில் இன்னுமொரு மகாவம்சத்தினை படைக்க வேண்டிய தேவையுமில்லை. அப்படியான எண்ணம் கொண்டவர்களுமல்ல. இது அவர்களிருவரையும் தெரிந்த, புரிந்த அனைவருக்கும் தெரிந்த உண்மை.

நெருப்பு நிலவனின் கேள்விகளுக்கு வேண்டிய பதில் இம் முன்னுரையிலேயே இருக்கிறது. அவர் இன்னொரு தடவை அதனை ஆழப்படித்து புரிந்து கொள்ள முற்படுவது நல்லது. இத் தொகுப்பில் நெருப்பு நிலவன் குறிப்பிட்டிருப்பது போல் கவிஞர் காசி ஆனந்தன் மட்டும் விடுபட்டுப் போகவில்லை. "ஆண்ட பரம்பரை மீண்டுமொருமுறை ஆள நினைப்பதில் என்ன குறை" என்ற வரிகளை எழுதிய கவிஞர் காசி ஆனந்தன் எப்படி விடுபட்டுப் போனாரோ, அப்படி "இந்த மண் எங்களின் சொந்த மண்" என்ற வரிகளைத் தந்த கவிஞர் புதுவை இரத்தினதுரையும் விடுபட்டுப் போயிருக்கிறார். இன்னும் அக்காலத்தில் தொடர்ச்சியாக எழுதிவந்த ஹம்சத்வனி, செழியன், ஊர்வசி, வாஞ்சிநாதன், ஔவை என பல கவிஞர்கள் விடுபட்டிருக்கிறார்கள்.

இத் தொகுப்பில் ஐந்து தலைமுறையின் அடிப்படையில் பதினொரு கவிஞர்கள் பிரிக்கப்பட்டுள்ளார்கள். இத் தலைமுறைப் பகுப்பானது வெறும் காலரீதியானது மட்டுமல்லாது பல்வேறு தன்மைகளின் அடிப்படையில் இடம்பெற்றிருப்பதினை நாம் காணலாம்.

கவிஞர் காசி ஆனந்தன் ஒரு நல்ல கவிஞர் என்பதில் எவருக்கும் சந்தேகமிருக்கும் என நான் நினைக்கவில்லை. தமிழர் போராட்டம் உரிமைகளுக்கான போராட்டமாக பரிணமித்த வேளையில் "தமிழன் கனவு" என்ற நூலை வெளியிட்டவர் இவர். இது ஒரு சிறந்த கொள்கை முன்னெடுப்புக் கவிதை நூல். அன்று தொட்டு, இன்றுவரை தொடர்ந்து எழுதிவரும் கவிஞர் காசி ஆனந்தனின் கவிதைகளின் தன்மைகள் வித்தியாசமானவை. அதனாற்றானோ என்னவோ அவர் "உணர்ச்சிக்கவிஞர்" எனவும் அழைக்கப்படுகிறார் போலும்.

எனவே, இங்கு முக்கியமானதும், முதன்மையானதும் கவிதைபற்றிய புரிதலே. கவிஞர் காசி ஆனந்தனின் கவிதைகளுக்கும், தொகுப்பில் இடம் பெற்ற கவிஞர்களின் கவிதைகளுக்கும் இடையிலான புரிதல் என்பது வித்தியாசமான தன்மைகளை, பரிமாணங்களைக் கொண்டது. இதனைப் புரிந்து கொண்டால் நெருப்பு நிலவனின் கேள்விக்கு பதில் கிடைத்துவிடும்.

இன்னுமொருவிடயம்!

காசி ஆனந்தனின் கவிதைகள் பற்றி அழகும், அனுபவமும் கொண்ட எவரும் எழுதுவார்களாயின் அவரின் கவிதைகள் பற்றிய சரியான புரிதல் எமக்கு, ஏற்பட ஏதுவாக இருக்கும் என நம்புகிறேன். மேலும் இவ்விடயங்கள் பற்றியும் தொடர்ந்து பலர் எழுதவேண்டும் என்பதே சாரத்தின் வேண்டுதலுமாகும்.

இவ்வண்ணம்
வர்மன்

## கஜனின் கவிதைகள்

### சுதந்திரமே நீ எங்கே...?



ஓ! சுதந்திரமே..!
நீ எங்கே? எங்கே...?

பிரசவித்த தாய் மண்ணே
மாற்றான் தாய் ஆன போது
அடிமைப் பாத்திரங்களாய்
ஆண்ட பரம்பரை எம்மவர்க்கு
ஆதிக்கப் பெருச்சாளிகளால்
அகதிப் பட்டங்கள்!

கருச் சிதைந்த கற்பனையால்
உரு சிதைந்த கவிதைகளாய்
அறுவடை வயல்களெங்கும்
அழுகிப்போன சடலங்கள்!

செவிப்பறையைச் சன்னமிடும்
துப்பாக்கி வேட்டொலியால்
இதயத் துடிப்புகளில்
மரணத்தின் அவலங்கள்!

ஆதிக்கச் சாபங்களில்
மௌனித்த இன்பங்களால்
கண்ணீர் சேற்றுக்குள்
கால் புதைந்த தடையங்கள்!

மறைந்து போன சுதந்திரத்தின்
கலைந்து போன முனகல்களாய்
ஈழத்து வீதியெங்கும்
இலவசக் காட்சிகளிவை!
இதனால்தான்,
வயல்களை முத்தமிடும்
வானத்து மேகங்களின்
மானத்துப் போர்வையதை
இடிமுழக்கம் கிழித்தெறிய
விழி சிவந்த மின்னலதாய்,
சிறைபட்ட சுதந்திரத்தை
சிறைமீட்கவென்றெண்ணி
தேடுகிறோம் காளைகளாய்!
ஓ! சுதந்திரமே..!
நீ எங்கே? எங்கே?

*1989*


றோஸ் ஏஜன்சி

*No.1*
*for Money Super Plus*
*Fast Bankcredit for*
*Tamils in Switzerland.*



SOMASUNDARAM RAMALINGAM
METTLENSTRASSE 1
4554 ETZIKEN (SO)
SWITZERLAND.
Tel: 032 614 40 51
Natel: 077 46 16 94
Fax: 032 614 40 51

இங்கு தரப்பட்ட தொகைகளைவிட தேவையான மேலதிக தொகைக்கு விபரம் எம்மிடம் கோரவும். சுவிஸ் விசா B அல்லது C பத்திரமுள்ளவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டால் நாம் மேலதிக விபரங்கள் விரிவாகவும், விளக்கமாகவும் உங்களுக்குத் தருவோம்.

Eco Agency என்ற பெயரில் இயங்கிவந்த எம் நிறுவனம் கடந்த 15.10.1996 முதல் Rose Agency எனப் பெயர் மாற்றம் அடைந்துள்ளது. எம் சேவை முன்பு போல் 100 சதவீதமும் உங்கள் திருப்திக்காகவே தொடர்ந்திருக்கும். எம் நிறுவனம் பல வங்கிகளுடன் கூட்டாக இயங்குவதன் மூலம் இன்றுவரை பல தமிழர்களின் பணத் தேவைகளை நிறைவு செய்துள்ளது.
மேலும் இலகுவான முறையிலும், நியாயமான வட்டி வீதத்திலும், கூடிய விரைவிலும் எவ்வித சேவைக் கட்டணமும் இல்லாமல் உங்கள் பணத்தேவைகளைப் பூர்த்தி செய்யக் காத்திருக்கிறோம். உதாரணமாக இங்குள்ள பட்டியலைக் கவனிக்கவும்.


| கடன் தொகை | 12 மாதங்கள் | | 18 மாதங்கள் | | 24 மாதங்கள் | | 36 மாதங்கள் | | 48 மாதங்கள் | | 60 மாதங்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் |
| 10.000 | 726.80 | 893.90 | 1071.80 | 615.10 | 1422.80 | 475.90 | 2148.20 | 337.45 | 2902.40 | 268.80 | 3683.00 | 228.05 |
| 15.000 | 1090.20 | 1340.85 | 1607.70 | 922.65 | 2134.80 | 713.95 | 3223.20 | 506.20 | 4353.60 | 403.20 | 5523.00 | 342.05 |
| 20.000 | 1453.60 | 1787.80 | 2143.60 | 1230.20 | 2846.80 | 951.95 | 4298.20 | 674.95 | 5804.80 | 537.60 | 7366.00 | 456.10 |
| 25.000 | 1817.00 | 2234.75 | 2679.50 | 1537.75 | 3558.80 | 1189.95 | 5371.40 | 843.65 | 7256.00 | 672.00 | 9206.00 | 570.10 |
| 30.000 | 2180.40 | 2681.70 | 3215.40 | 1845.30 | 4270.80 | 1427.95 | 6446.40 | 1012.40 | 8707.20 | 806.40 | 11045.00 | 684.15 |
| 35.000 | 2543.80 | 3128.65 | 3751.30 | 2152.85 | 4982.80 | 1665.95 | 7521.40 | 1181.15 | 10158.40 | 940.80 | 12889.00 | 798.15 |
| 40.000 | 2907.20 | 3575.60 | 4287.20 | 2460.40 | 5694.80 | 1903.95 | 8596.40 | 1349.90 | 11609.60 | 1075.20 | 14732.00 | 912.20 |

# ஞானம் சென்ரர் தொலைபேசி அட்டைகள் ஞானம் சென்ரர் தொலைபேசி அட்டைகளை விட விலை குறைந்தவை



# 100 Frs.

| DESTINATION | DURÉE D'APPEL |
|---|---|
| **ALLEMAGNE** | **50 Mn** |
| ANGOLA | 13 Mn |
| ARABIE SAUDIE | 17 Mn |
| ARGENTINE | 20 Mn |
| **BENGLADESH** | **14 Mn** |
| BELGIQUE | 40 Mn |
| BOLIVIE | 16 Mn |
| **BURKINA FASO** | **17 Mn** |
| BURUNDI | 13 Mn |
| CAMBODGE | 13 Mn |
| CAMEROUN | 15 Mn |
| **CANADA** | **62 Mn** |
| REP. C.AFRIQUE | 10 Mn |
| CONGO | 14 Mn |
| **COTE D'IVOIRE** | **18 Mn** |
| CHILI | 21 Mn |
| CHINE | 17 Mn |
| COLOMBIE | 23 Mn |
| CUBA | 15 Mn |
| DANEMARK | 41 Mn |
| EGYPTE | 18 Mn |
| ESPAGNE | 33 Mn |
| ETHIOPIE | 12 Mn |
| FINLANDE | 35 Mn |
| **GABON** | **15 Mn** |
| **GHANA** | **17 Mn** |

| DESTINATION | DURÉE D'APPEL |
|---|---|
| **HAITI** | **17 Mn** |
| HONG KONG | 33 Mn |
| **INDE** | **20 Mn** |
| ISRAEL | 20 Mn |
| ITALIE | 35 Mn |
| JAPON | 36 Mn |
| LIBAN | 15 Mn |
| LUXEMBOURG | 35 Mn |
| **MALI** | **15 Mn** |
| MAROC | 24 Mn |
| MAURICE | 14 Mn |
| MEXIQUE | 31 Mn |
| NORVEGE | 45 Mn |
| **PAKISTAN** | **16 Mn** |
| PAYS-BAS | 40 Mn |
| PHILIPPINES | 18 Mn |
| POLOGNE | 25 Mn |
| PORTUGAL | 29 Mn |
| **SENEGAL** | **14 Mn** |
| **SINGAPOUR** | **40 Mn** |
| **SRI LANKA** | **17 Mn** |
| **SUISSE** | **45 Mn** |
| **THAILANDE** | **16 Mn** |
| TUNISE | 24 Mn |
| VENEZUELA | 27 Mn |
| ZAIRE | 18 Mn |

நிமிடங்கள் யாவும் ஒவ்வொரு தடவையும் அறிவிக்கப்படும்

# GNANAM CENTER COMMUNICATION

195, Rue du Faubourg Saint Denis. 75010 Paris.

Tel: 01 46 07 09 36 - Fax: 01 46 07 00 14

M°: La Chapelle / Gare du Nord

# ஹிட்லர் ஆட்சியிலும் இடம்பெறாத கொடுமை தமிழினத்துக்கு எதிராக இடம் பெறுகிறது

## அஸ்வர்

உலகில் ஹிட்லர் ஆட்சியில் கூட இடம் பெறாத அடக்கு முறை இங்கு தமிழினத்துக்கு எதிராக இடம் பெறுகிறது என ஐதேகட்சி எம்பி. ஏ.எச்.எம். அஸ்வர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அவர், சூரியன் உதிக்கையிலே வெள்ளை புறாவை ஏந்திவந்து கூறிய நயவஞ்சக வார்த்தைகளை நம்பிய தமிழ் மக்கள் இன்று ஏமாற்றப்பட்டுவிட்டார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சமாதானப் புறாவை ஏந்திய படியாலேயே மக்கள் இந்த அரசுக்கு வாக்குகளை அளித்தனர். பெரும் தொகையான தமிழர்கள் இந்த அரசுக்கு கடந்த தேர்தலில் வாக்களித்தனர். ஏன் வாக்களித்தனர்? சமாதானத்தை ஏற்படுத்துவீர்கள் என நம்பித்தான் வாக்களித்தனர். இன்று உடப்பு கிராமத்தில் நடப்பதென்ன? சுமார் 15 ஆயிரம் தமிழ் மக்கள் திரளைபதி அம்மன் ஆலயத்திற்கு முன்பு நிறுத்தப்பட்டு சோதனையிடப்பட்டுள்ளனர். நோயாளிகள், முதியவர்கள் என்ற வேறுபாடின்றி ஆலய முன்றலுக்கு அழைக்கப்பட்ட அனைவரும் முகமூடி அணிந்தவர்களால் சோதனையிடப்பட்டனர். என அவர் தனது உரையிலே குறிப்பிட்டுள்ளார்கள்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### சிறுமிகள்...

இச் சிறுமிகளில் இருவருக்கு அவர்களது கற்பப் பைகள் முற்றாக பாதிப்படைந்துள்ள கொடூரமும் நிகழ்ந்துள்ளது. இச் சிறுவர் இல்லத்தினை பௌத்த காங்கிரஸ் நிர்வாகமே நடாத்தி வந்துள்ளது. இந்த பாலியல் கொடுமைகள் அம்பலத்திற்கு வந்ததைத் தொடர்ந்து இந்த இல்லத்தினை நிர்வகித்து வந்த நிர்வாக அதிகாரி மர்மமான முறையில் படுகாயப்படுத்தப்பட்டு அவரது வீட்டு குளியலறைக்குள் பிணமாக கிடக்க காணப்பட்டுள்ளார். இவரது மர்ம மரணத்தைப் பற்றியும் பௌத்த காங்கிரசிற்கும் சிறுவர் பாலியல் வியாபாரத்திற்கும் தொடர்பு உள்ளதா என்பது தொடர்பாகவும் புலனாய்வுத் துறையினர் விசாரணைகள் மேற் கொண்டு வருகின்றனர் எனத் தெரியவருகிறது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### அமெரிக்கன்...

புலனாய்வுப் பிரிவினர் இது பற்றித் தெரிவிக்கையில் இந்தக் கட்டிடத்திலிருந்து தங்கக் கட்டிகள், காசுகள் என்பனவும் திருட்டுப் போயிருப்பதாகவும் மக்களே இவற்றை எடுத்துச் சென்றதாகவும் குறிப்பிட்டுள்ள போதிலும் பாதுகாப்பு அதிகாரிகளே பெருமளவு மோசடிகளை செய்து வந்துள்ளனர்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### யாழ்ப்பாணத்தில்...

லும் செலுத்த வேண்டுமென வும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்புத் தொடர்பாக யாழ்ப்பாண மக்கள், எங்களை நிம்மதியாக இருக்க சிறீலங்கா அரசு விடுவதில்லை. அதற்குள் எாக யானைகளுக்கும் வரி செலுத்த வேண்டும் என்ற அதிர்ச்சி உணர்வுடனே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளதாக தெரிவித்துள்ளார்கள்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### வடபகுதிப்....

கும் கூட எமக்கு வந்துவிட்டது. எம்மில் பலர் நோயாளிகளாகி விட்டனர். இனியும் பொறுக்க முடியாது என்ற நிலையில்தான் நாம் சத்தியாக்கிரகப் போராட்டத்தை மேற்கொள்ள முன்வந்தோம். மாதக்கணக்கில் நாம் தங்கியதால் நாம் கொண்டுவந்த பணமும் கரைந்துவிட்டதென சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஏற்கனவே வடக்கு கிழக்கு மாகாண ஆளுனர் காமினி பொன்சேகாவை சந்தித்த வடபகுதி பயணிகள் தமது அவல நிலையை அவருக்கு எடுத்துக் கூறியபோதிலும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை எனத் தெரியவருகிறது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### ஈழவேந்தன்...

வில்லை எனத் தெரியவருகிறது. கைது செய்யப்பட்டவர்களான புலிகள் அல்லது புலிகளின் தீவிர ஆதரவாளர்கள், சதி வேலையில் ஈடுபட்டார்கள் என்றெல்லாம் இியூ பிரிவினர் இவர்கள் மீது அபாண்டமான குற்றத்தைச் சுமத்துவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர். தமிழக அரசின் கட்டுப்பாட்டின் கீழ் ஈழப் போராளிகள் விடயத்தை கண்காணிப்பதற்கென அமைக்கப்பட்டதே இக் கியூ பிராஞ்ச் ஆகும்.


பாரிஸ் லாசப்பலில்

**தர்ஷனா உணவகம்**

23, Rue Perdonnet, 75010 Paris.
Tel: 01 40 05 08 36 / 06 80 02 93 41

**சாந்தினி உணவகம்**

**RESTAURANT SHANTHINI**

10, Rue Labat, 75018 PARIS.
M°: Marcadet Poissonniers -
Tel: 01 42 58 71 19

**வீட்டுத் தளபாடங்களை ஏற்றி இறக்கவும், உங்கள் மங்கல வைபவங்களுக்கும், லாங் யாத்திரை போன்றவற்றிற்கும் தேவையான வாகன வசதிகளுக்கு;**



**நித்தி வாகன சேவை**

Tel: 01 43 03 07 08
01 48 05 02 14 / 01 49 23 97 32
பிரயாண வசதி கருதி:
06 07 34 80 51

**பாரிஸ் 8-ல் வீடு வாடகைக்கு**

M°: ROME அல்லது EUROPE க்கு மிகவும் அருகாமையில் மிகவும் நல்ல நிலையிலுள்ள STUDIO வீடு, வீட்டுத் தளபாடங்களுடன் வாடகைக்கு உண்டு. அத்துடன் ASCENSEURS + GARDIEN உண்டு. வாடகை 2500ᶠʳˢ C.C
குறிப்பு: ஒருவருக்கு மட்டும்தான் இருப்பதற்கு அனுமதிக்கப்படும்.
மேலதிக தொடர்புகளுக்கு: சிவா
Tel: 01 46 71 66 91 அல்லது Mobil Tel: 08 09 91 12 06
மாலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணிவரை.


## வீர வணக்கம்

தாயின் மடியில்: 15.05.1976



தாயகத்திற்கு ஈகம்: 03.01.1997

### வீரவேங்கை கௌரி

**(ஆனந்தராசா மனோரஞ்சினி)**

பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு – யாழ்ப்பாணம்

*(09.01.97 அன்று பரந்தன், ஆனையிறவு படைத்தள தாக்குதலின் போது வீரச்சாவெய்தினார்.)*

*பார்போற்றும் புலிப்படைக்கு*
*பலம் சேர்த்த தங்கையே*
*ஈழமண்ணை மீட்கவென எழுந்து நின்றாய்*
*இலட்சியமே தமிழீழம் என்று - உரைத்தாய்*
*ஆனையிறவு போரினிலே வீரமுடன் - சென்றாய்*
*அநியாயம் புரிந்தவரை பலியாக்கி - வென்றாய்*
*வெற்றிகள் நாளை தமிழீழமாகும்.*

இவருடன் வீரச்சாவெய்திய ஏனைய மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகள்

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில், யாழ்ப்பாணம்.

உமது பிரிவில் நிற்கும் குடும்பத்தினரும், சகோதரன் ரவிராஜ் (போராளி) அவர்களும்.

தகவல்: நல்லூர் ஸ்தான் விளையாட்டுக் கழகம்
Tel: 01 48 45 36 28


**Bern வாழ் தமிழ் நெஞ்சங்களிற்கு புதியதோர் தமிழ் உணவகம் (05.02.1997 தொடக்கம்)**

இடம்: RESTURANT LORY
(BAHNHOF ல் இருந்து 13,14 இலக்க பஸ்ஸின் 4ம் தரிப்பிடமாகிய LORY PLATZ இல் இறங்கவும்)

*இங்கு ஆட்டுக்கொத்து, மாட்டுக்கொத்து, பிறியாணி, மட்டன்றோல், இன்னும் பல உணவுகள் உங்களின் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில் கிடைக்கும்.*

திறந்திருக்கும் நேரம்:
திங்கள் முதல் வெள்ளி 14.00 முதல் 23.30 மணி வரை
சனி ஞாயிற்றுக்கிழமைகளில் 10.00 முதல் 23.30 மணி வரை
ஏனைய விபரங்களுக்கு: 077 539677

**வாகன சேவை**

உங்கள் பொருட்கள், வீட்டுத் தளபாடங்கள் போன்றவற்றை ஏற்றி இறக்கவும் வெளியூர் பிரயாணம் போன்ற தேவைகளுக்கும்



ரவி / தனபால்: 01 42 43 70 63

**KUMARS SHOP S. A. R. L.**

**K.T.C. Jewels**

193, Rue du Fg. S^t.Denis, 75010 Paris.
M°: Gare du Nord / La Chapelle
Tél: 01 42 05 41 36

80, Bld. Barbes, 75018 Paris.
M°: Marcadet Poissonniers
- Tél: 01 42 59 35 10
Fax: 01 42 59 35 00



ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

WOODLANDS
AXS Card 100 பிராங்க் மட்டுமே!
Cabin இல் இருந்து தொடர்புகொள்ள 90Frs - 15Min
மிகமிகக் குறைந்த விலையில் கூடிய நேரம் தொடர்பு கொள்ளலாம்.
வர்த்தகர்களுக்கு விசேட விலையுண்டு
அட்டையில் பாவிக்கக் கூடிய நேர அளவு கணணி முறை பதிவில் உங்களுக்கு அறிவிக்கப்படும்
Australie........45 Min.
Canada......... 60 Min.
Inde..............20 Min.
Pakistan.......17 Min.
London .........70 Min.
Sri Lanka......17 Min.
USA ..............70 Min.
Germany........50 Min.
Denmark.........50 Min
Thailand .........20 Min
Singapore......45 Min.
இன்னும் பல நாடுகள் மிகமிகக் குறைந்த விலையில்...
70, Rue Louis Blanc, 75010 Paris - Tel: 01 40 35 01 04 / 01 40 35 00 27

# ஈழவேந்தன், சச்சிதானந்தம், மாலினிதேவி உட்பட ஐந்து ஈழ ஆதரவாளர்கள் சென்னையில் கைது

தமிழீழ விடுதலை முன்னணியின் செயலாளர் ஈழவேந்தன், எழுத்தாளர் சச்சிதானந்தன் உட்பட ஐந்து ஈழ ஆதரவாளர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை 09.02.97 அன்று தமிழக உளவுப்பிரிவான கியூ பிரிவால் சென்னையில் உள்ள ஒரு வீட்டில் வைத்து கைது செய்யப் பட்டுள்ளனர்.

ஈழ அகதிகளுக்கு மருந்து மற்றும் நிவாரணப் பொருட்களை அனுப்பி வைப்பதற்கான ஆலோசனையில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே இவர்கள் சுற்றிவளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். ஈழத்தவரான பாண்டியன், அவுஸ்திரேலியாவிலிருந்து சென்னை வந்திருந்த மாலினிதேவி, தமிழகத்தைச் சேர்ந்த டாக்டர் சிறீதர் ஆகியோரே கைது செய்யப்பட்ட ஏனையவர்களாவர். கைதுசெய்யப் பட்டவர்களில் பாண்டியன் என்பவர் சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்ய முயற்சித்தாகவும் அவரை தாங்கள் காப்பாற்றிவிட்டதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கைதுசெய்யப் பட்டவர்கள் ஈழ அகதிகளுக்கு மனிதாபிமான உதவியை வழங்க முயற்சி எடுத்ததைத் தவிர வேறெந்தக் குற்றமும் புரிய

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# வடபகுதிப் பயணிகள் திருமலையில் சத்தியாக்கிரகம்

திருமலையிலிருந்து வடபகுதி செல்ல காத்திருப்போரில் நூற்றுக்கணக்கானோர் கடந்த 10.02.97 திங்கட்கிழமை அதிகாலையிலிருந்து சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இன்று செல்வோம், நாளை செல்வோம் என எண்ணி இனி மேல் வடபகுதி செல்வோம் என்று சொல்லி இனிமேல் வடபகுதி செல்வோமா என்ற சந்தே

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# யாழ்ப்பாணத்தில் யானை வளர்த்தால் 50 ரூபா வரி கட்ட வேண்டுமாம்

யாழ்மாநகரசபை, சாவகச்சேரி, பருத்தித்துறை நகரசபை எல்லைகளுக்குள் யானைகள் வளர்க்கப்படும் பட்சத்தில் அதற்கு வரியாக அரசுக்கு 50 ரூபா செலுத்த வேண்டுமென்ற வேடிக்கையான அறிவிப்பொன்று சிறீலங்கா வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இந்த வரியினை எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் கட்டாவிட்டால் யானைகளை பறிமுதல் செய்யவோ அல்லது மேலதிக வரிகளை அறவிடவோ முடியுமெனவும் அப் பிரகடனத்தில குறிக்கப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவிப் பின்படி குதிரைகளுக்கு 15 ரூபாவும், கழுதைகளுக்கு 7.50 ரூபா

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# 24 உயர் பொலீஸ் அதிகாரிகள் பயிற்சிக்காக அமெரிக்கா பயணம்

அமெரிக்க அரசின் அழைப்பின் பேரில் 24 சிங்களப் பொலிசார் விசேட பயிற்சிக்காக அமெரிக்கா சென்றுள்ளனர். விசேட அதிரடிப்படை கட்டளைப் பணிப்பாளர், விசேட அதிரடிப் படை பயிற்சிப் பொறுப்பாளர் உட்பட 24 அதிஉயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு குறுகிய காலத்தில் தீவிரவாதத்தை முறியடிப்பதற்கான விசேட பயிற்சிகளை அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் வழங்கவுள்ளனர். இதே வேளை சிறீலங்கா இராணுவத்தின் உயர் அதிகாரிகளுக்கும் சிறப்புப் பயிற்சிகளை வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளதாக தெரிய வருகிறது.

இப்பயிற்சித் திட்டம் பற்றி கருத்து வெளியிட்ட சிறீலங்கா அதிகாரிகள் இப்பயிற்சிகள் யாவும் சிறீலங்காப் படைகளுக்கு பெரும் உதவியாக இருக்கும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இப்பயிற்சிக்கான செலவுகள் யாவும் அமெரிக்க அரசினால் வழங்கப்படும்.

# அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வங்கியில் 43 மில்லியன்களை திருடிய சிங்களவர்

கடந்த வருடம் குண்டுத் தாக்குதலுக்கு உள்ளான சிறீலங்காவின் மத்திய வங்கி கட்டிடத்திலிருந்து இயங்கி வந்த அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வங்கியில் இருந்த 43 மில்லியன் ரூபா பெறுமதியான பிரயாணக் காசோலைகளை மீரிகமப் பகுதியில் வசிக்கும் சிங்களவர் ஒருவர் திருடியது சிறீலங்காப் புலனாய்வுத் துறையினரால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

சேதமடைந்த மக்கள் வங்கியில் திருத்த வேலைக்காக அமர்த்தப்பட்ட ஒருவரே இக் காசோலைப் பெட்டியைத் திருடி அவற்றினை விற்பனை செய்து வந்துள்ளார். இந்த மோசடியில் கொழும்பிலுள்ள பிரபல வர்த்தகர்கள் ஏழு பேர் சம்பந்தப் பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இப் பிரயாணக் காசோலைகளை விற்ற பணத்தின் மூலமாக இவர் மூன்று வாகனங்களையும் இதுவரை கொள்வனவு செய்துள்ளார். இம் மோசடி, இந்தியாவில் பெங்களூர்ப் பகுதியில் இயங்கிவந்த இன்னொரு அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வங்கிக் கிளை ஒன்றினாலேயே அம்பலப்படுத்தப் பட்டுள்ளது.

இந்த மோசடித் திருட்டு மூலம் பதினையாயிரம் பெறுமதியான காசோலைகள் ஒவ்வொன்றும் மூவாயிரம் தொடக்கம் ஐயாயிரம் வரையான தொகைக்கு விற்கப்பட்டது. இதுவரை 40 பேர் இவ்வாறு இவற்றினைக் கொள்வனவு செய்துள்ளனர்.

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# சிறுமிகள் மீதான பாலியல் வதைக்கும் பௌத்த காங்கிரசிற்கும் தொடர்பு?

சிறீலங்கா மக்களை மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய பேருவளை விஜித சிறுவர் இல்லத்தில் நடந்த சிறுமிகள் மீதான பாலியல் வதையுடன் சம்பந்தப் பட்ட சிறீலங்கா பௌத்த காங்கிரசின் நிர்வாக அதிகாரியான ராணி திலகரத்தினா என்பவர் வெட்டுக்காயங்களுக்கு ஆளாகி மர்மமான முறையில் மரணமடைந்துள்ளார்.

இந்த இல்லத்தில் தங்கியிருந்த எட்டு வயதிற்கும் பதினான்கு வயதிற்கும் இடையிலான நான்கு சிறுமிகள் மீது பாலியல் வதை மேற்கொள்ளப்பட்டது அண்மையில் வெளிச்சத்திற்கு வந்துள்ளதைத் தொடர்ந்தே இவரது மரணம் சம்பவித்துள்ளது.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

ஞானம் சென்ரரின் புதிய தொலைபேசி அட்டை
Gnanam Center Communication
இலங்கை.......... 17 நிமிடம்
இந்தியா.......... 20 நிமிடம்
கனடா......... 62 நிமிடம்
ஜேர்மனி...... 50 நிமிடம்
100Frs மட்டுமே! (மிகக் குறைந்த விலையில்)
10 தொலைபேசி அட்டைகள் 900Frs

195, Rue du Faubourg Saint Denis. 75010 Paris. Tel: 01 46 07 09 36 - Fax: 01 46 07 00 14